வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்

இலங்கையின் தேசிய சரக்கனுப்பல் நிறுவனம்

(1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க அரசாங்க கூட்டுத்தாபனத்தை அல்லது அரசுக்குடமையான வியாபார முயற்சிகளை அரசாங்க கம்பனிகளாக மாற்றும் சட்டத்தின் கீழ் 1992.06.01 ஆம் திகதியிலிருந்து கம்பனியொன்றாக மாற்றப்பட்டது)

ஆண்டறிக்கை

2022 / 2023

வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்
2022 / 2023 இன் ஆண்டறிக்கையும் கணக்குகளும்

உள்ளடக்கம்	**பக்கங்கள்**
உள்ளடக்கப் பக்கம்	1
தொலைநோக்கு மற்றும் பணிநோக்கு கூற்று	2
ஆவண இணைப்புக் கடிதம்	3
பணிப்பாளர் சபை	4 - 6
முகாமைத்துவக் குழு	7 - 10
தலைவரின் மீளாய்வு	11 - 16
பணிப்பாளர்களின் அறிக்கை	17 – 20
நிதிச் சிறப்புக்கூறுகள்	21
நிலைத்துநிற்கும்தன்மை பற்றிய அறிக்கை	22 -30
கணக்காய்வுக் குழு அறிக்கை	31 - 40
நன்றியுரைத்தலும் அலுவலர் குழாத்திற்கு நன்றியும்	41 -42
சுயாதீன கணக்காய்வாளர் அறிக்கை	43 - 72
முழுமொத்த வருமானக் கூற்று	73 - 74
நிதி நிலமைக் கூற்று	75 - 77
உரிமைமுதல் மாற்றக் கூற்று	78
காசுப் பாய்ச்சற் கூற்று	79 - 80
நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்	81 - 154
நிர்வாகச் செலவுகள்	155 - 156

வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்
2022/2023 இன் ஆண்டறிக்கையும் கணக்குகளும்

தொலைநோக்கு மற்றும் பணிநோக்கு கூற்று

தொலைநோக்கு

இந்நாட்டிற்காக நம்பகரமானதும் பயனுறுதி வாய்ந்ததுமான தேசிய கப்பல் தொகுதியொன்றை அபிவிருத்தி செய்தல்.

பணிநோக்கு

தேசிய சரக்கனுப்பல் நிறுவனத்தின் உதவி தேவைப்படும், இலங்கையின் ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் உள்நாட்டுக் கரையோர வர்த்தகம் ஆகியவற்றின் கடல் போக்குவரத்து தேவைகளைச் சமாளித்தல்.

வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்
2022/2023 இன் ஆண்டறிக்கையும் கணக்குகளும்

ஆவண இணைப்புக் கடிதம்

மாண்புமிகு. துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்
துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு
இல. 19, சைத்திய வீதி
கொழும்பு 01.

அன்புடைய ஐயா,

1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க அரசாங்க கூட்டுத்தாபனங்களையும் அரசுக்குடமையான வியாபார முயற்சிகளையும் அரசாங்க கம்பனிகளாக மாற்றும் சட்டத்தினதும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க, 2022.04.01 ஆம் திகதி தொடக்கம் 2023.03.31 ஆம் திகதி வரையான காலப்பகுதி சார்பில் இக்கம்பனியின் செயற்பாடுகள் தொடர்பிலான ஆண்டறிக்கையையும் நிதிக் கூற்றுக்களையும் முன்னளிப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

தங்களின் உண்மையுள்ள,
வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்

டபிள்யு.எஸ். வீரமன்
தலைவர்

வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்
இல. 27, MICH கட்டடம்
சேர் ராஷிக் பரீட் மாவத்தை
கொழும்பு 01.
திகதி: 13.08.2023

வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்
2022/2023 இன் ஆண்டறிக்கையும் கணக்குகளும்

பணிப்பாளர் சபை

<u>2022.04.01 ஆம் திகதி தொடக்கம் 2023.03.31 ஆம் திகதி வரை</u>

திருவாளர். டபிள்யு.எஸ். வீரமன்
தலைவர்
2019.12.20 ஆம் திகதி தொடக்கம் இற்றைவரை

திருவாளர். திமுத் ஜகோடாராச்சி
நிறைவேற்றுப் பணிப்பாளர்
2020.10.08 ஆம் திகதி தொடக்கம் 2022.05.24 ஆம் திகதி வரை

திருமதி. எம்.ஜீ.என். பிரேமதிலக்க
பணிப்பாளர் / திறைசேரிப் பிரதிநிதி
2022.03.02 ஆம் திகதி தொடக்கம் இற்றைவரை

திருமதி. ஷெஹாரா ஜயவர்த்தன
பணிப்பாளர்
2020.10.07 ஆம் திகதி தொடக்கம் 2022.05.24 ஆம் திகதி வரை

திருவாளர். பாட்டியா உடுமலகல
பணிப்பாளர்
2020.10.08 ஆம் திகதி தொடக்கம் 2022.05.24 ஆம் திகதி வரை

திருவாளர். ரங்கா குணவர்த்தன
பணிப்பாளர்
2020.10.07 ஆம் திகதி தொடக்கம் 2022.05.24 ஆம் திகதி வரை

திருவாளர். மேவன் பீரிஸ்
பணிப்பாளர்
2020.10.08 ஆம் திகதி தொடக்கம் 2022.05.26 ஆம் திகதி வரை

திருவாளர். ஜீ.யு.கே. அல்கேவத்தகே
பணிப்பாளர்
2022.06.30 ஆம் திகதி தொடக்கம் இற்றைவரை

திருவாளர். யு.ஏ. மென்டிஸ்
பணிப்பாளர்
2022.06.30 ஆம் திகதி தொடக்கம் 2022.08.12 ஆம் திகதி வரை

திருவாளர். ஏச்.டி. தேவேந்திரா
பணிப்பாளர்
2022.08.26 ஆம் திகதி தொடக்கம் இற்றைவரை

திருவாளர். எஸ்.ஈ.டபிள்யு. குணசேகர
பணிப்பாளர்
2022.08.26 ஆம் திகதி தொடக்கம் இற்றைவரை

கம்பனிச் செயலாளர்
திருமதி. மல்காந்தி குணசேகர
பட்டய கூட்டாண்மைச் செயலாளர் நிறுவகத்தின் இணை உறுப்பினர் (ACCS)
தொழில் உறவுகள் மற்றும் மனிதவள முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்ளோமா
கொழும்பு பல்கலைக்கழகம்
2017.11.14 ஆம் திகதி தொடக்கம் 2022.12.06 ஆம் திகதி வரை

திருவாளர். ரி.எம்.வீ.எல். முத்துகம
சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்
சத்தியப் பிரமாண ஆணையாளர்
எல்எல்பீ (கொழும்பு)
2022.12.06 ஆம் திகதி தொடக்கம் இற்றைவரை

சபைச் செயலாளர்
திருமதி. மல்காந்தி குணசேகர
பட்டய கூட்டாண்மைச் செயலாளர் நிறுவகத்தின் இணை உறுப்பினர் (ACCS)
தொழில் உறவுகள் மற்றும் மனிதவள முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்ளோமா
கொழும்பு பல்கலைக்கழகம்
2022.02.18 ஆம் திகதி தொடக்கம் 2022.10.31 ஆம் திகதி வரை

திருமதி. எஸ்.ஏ.எஸ்.கே. ஜயசேக்கர
பீ.எஸ்சி. பட்டம், சட்டத்தரணி (இலங்கை)
சர்வதேச வியாபாரம் மற்றும் வர்த்தகச் சட்டத்தில் எம்.எஸ்சி. பட்டம் – வெஸ்ற் லண்டன் (West London) பல்கலைக்கழகம்
2022.10.31 ஆம் திகதி தொடக்கம் இற்றைவரை

வங்கியாளர்கள்

மக்கள் வங்கியின் கூட்டாண்மை வங்கிப் பிரிவு
இலங்கை வங்கி
கொமர்ஷியல் பாங் ஒவ் சிலோன் பிஎல்சி

கணக்காய்வாளர்கள்

கணக்காய்வாளர் அதிபதி, தேசிய கணக்காய்வு அலுவலகம், இல.306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்ல

சபைக் கூட்டங்கள்

ஏழு (07) சபைக் கூட்டங்கள் மீளாய்வின் கீழான ஆண்டின் போது நடாத்தப்பட்டன.

பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்

வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்
இல. 27, MICH கட்டடம்,
சேர் ராஷிக் பரீட் மாவத்தை,
கொழும்பு 01,
இலங்கை.
தொலைபேசி : +94 11 2328772/3
தொலைநகல் : +94 11 2449486
மின்னஞ்சல் : cscl@cscl.lk
இணையம் : www.cscl.lk

<u>முகாமைத்துவக் குழு</u>

பதில் பொது முகாமையாளர் 2022.10.21 ஆம் திகதி தொடக்கம்

திருவாளர். பி.எஸ்.கே. வட்டவல

பொது முகாமைத்துவம் (விசேட) கௌரவ பீ.எஸ்சி. பட்டம் – USJP

பொது முகாமைத்துவ முதுமாணி - SLIDA

வியாபார (கணக்கீட்டு) முதுமாணி – களனிப் பல்கலைக்கழகம்

இலங்கை கணக்காளர் சேவை, LICA

பிரதிப் பொது முகாமையாளர் (வாணிபம்) மற்றும் பதில் பொது முகாமையாளர் 2021.08.01 ஆம் திகதி தொடக்கம் 2022.10.20 ஆம் திகதி வரை

திருமதி. வை.எஸ். வெத்தசிங்ஹ

பீ.எஸ்சி. (பொது) பட்டம்

கப்பற்றுறை முகாமைத்துவத்தில் எம்.எஸ்சி. பட்டம் - WMU, (மல்மோ - சுவீடன்)

MILT – UK

பிரதிப் பொது முகாமையாளர் (சட்டம் மற்றும் காப்புறுதி / மனித வளங்கள்)

திருமதி. எஸ்.ஏ.எஸ்.கே. ஜயசேக்கர

பீ.எஸ்சி. பட்டம், சட்டத்தரணி (இலங்கை)

சர்வதேச வியாபாரம் மற்றும் வர்த்தகச் சட்டத்தில் எம்.எஸ்சி. பட்டம் – வெஸ்ற் லண்டன் (West London) பல்கலைக்கழகம்

உதவிப் பொது முகாமையாளர் (நிதி)

திருவாளர். ஜீ.எம். விக்கும் பிரதீப

பீ.கொம். (விசேட) கௌரவப் பட்டம், LICA

கப்பற்றுறை முகாமைத்துவத்தில் எம்.எஸ்சி. பட்டம் WMU (மல்மோ - சுவீடன்)

குறித்துரைக்கப்பட்ட கரையோர பணிநிலை உத்தியோகத்தர்
2021/10/21 ஆம் திகதி தொடக்கம் 2022/10/31 ஆம் திகதி வரை

கப்டன். எச்.எம்.ஏ.யு.பீ. ஹேரத்

கடலியல் வல்லுநராக தகுதிச் சான்றிதழ் (வகுப்பு 1 – மட்டுப்படுத்தப்படாதது)

MICS - பட்டயக் கப்பல் தரகர் நிறுவகத்தின் உறுப்புரிமை (யு.கே.) 2007

கடல்சார் விஞ்ஞானத்தில் உயர் டிப்ளோமா, CINEC வளாகம்

DPA கற்கைநெறி – DNV கடல்சார் அக்கடமி (கல்வியகம்), இந்தியா 2021

குறித்துரைக்கப்பட்ட கரையோர பணிநிலை உத்தியோகத்தர்
2022/11/08 ஆம் திகதி தொடக்கம்

கப்டன். ஜீ. கஸ்தூரிஆராச்சி
வகுப்பு 1 கடலியல் வல்லுநர் (யுகே)
கடல்சார் விஞ்ஞானத்தில் உயர் தேசிய டிப்ளோமா (யுகே)

தொழில்நுட்ப அத்தியட்சகர்
2021/03/01 ஆம் திகதி தொடக்கம் 2022/06/21 ஆம் திகதி வரை

திருவாளர். சாரக்க விக்ரமநாயக்க

பட்டயப் பொறியியலாளர் - UK

பட்டய கடல்சார் பொறியியலாளர் - UK

கூட்டிணைந்த பொறியியலாளர் - SL

பிரதம பொறியியலாளர் அலுவலராக தகுதிச் சான்றிதழ் (COC வகுப்பு 1 - மட்டுப்படுத்தப்படாதது)

ஐக்கிய இராச்சியத்தின் (யு.கே) கடல்சார் பொறியியலாளர் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவகத்தின் (IMAREST) உறுப்பினர்

கடல்சார் நிறுவனத்தின் இணை உத்தியோகத்தர் (Associate Fellow) – UK - AFNI

கப்பல் வடிவமைப்பாளர்கள் பற்றிய அரச (Royal) நிறுவனத்தின் இணை உறுப்பினர் – AMRINA

இலங்கை கூட்டிணைந்த பொறியியலாளர் நிறுவனத்தின் உறுப்பினர் - MIIESL

தொழில்நுட்ப அத்தியட்சகர் 2022/06/20 ஆம் திகதி தொடக்கம்

திருவாளர். டொனி பீரிஸ்
வகுப்பு 1 தகுதிச் சான்றிதழ் (மோட்டார் கப்பல்) யுகே
கடல்சார் பொறியியலாளர் அலுவலர்

உள்ளகக் கணக்காய்வாளர் (2022/12/31 ஆம் திகதியன்று ஓய்வுபெற்றவர்)

திருவாளர். வை. பொன்னம்பெரும

LICA, FMAAT,

கப்பற்றுறை முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்ளோமா (ஒஸ்லோ)

பதில் உள்ளகக் கணக்காய்வாளர் 2023/01/01 ஆம் திகதி தொடக்கம்

திருமதி. டபிள்யு.ஏ.ஐ.டி. பெரேரா

வர்த்தக இளமாணி (விசேட) பட்டம் (UOK)

வியாபார நிர்வாக முதுமாணி (UOK)

CMA இறுதிப் பரீட்சையில் சித்திபெற்றவர்

சான்றுப்படுத்தப்பட்ட வியாபாரக் கணக்காளர் (இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகம்)

உதவிப் பொது முகாமையாளர் (வாடகைக்கமர்த்தல் மற்றும் முகவராண்மை)

திருவாளர். ஐ. தந்தநாராயண
பொது முகாமைத்துவத்தில் பீ.எஸ்சி. (விசேட) கௌரவப் பட்டம்
கடல்சார் அலுவல்களில் எம்.எஸ்சி. பட்டம், WMU (மல்மோ - சுவீடன்)

MILT – UK, LICA

உதவிப் பொது முகாமையாளர் (ஆவணப்படுத்தல்)

திருவாளர். கே.எல்.எம். மதுராஜா
பீ.கொம். (விசேட) கௌரவப் பட்டம்
கப்பல் முகாமைத்துவத்தில் எம்.எஸ்சி. பட்டம் - WMU, (மல்மோ - சுவீடன்)

உதவிப் பொது முகாமையாளர் (முறைவழிக் கப்பல், சரக்குக் கையாள்கை, NVOCC)

திருவாளர். என்.பி. கல்பகே

பீ.ஏ. (விசேட) பட்டம்

கப்பல் முகாமைத்துவத்தில் எம்.எஸ்சி. பட்டம் - WMU, (மல்மோ - சுவீடன்)

பதில் முகாமையாளர் (மனித வளங்கள்)
2018/04/09 ஆம் திகதி தொடக்கம் 2022/12/31 ஆம் திகதி வரை

திருமதி. மல்காந்தி குணசேகர

பட்டய கூட்டாண்மைச் செயலாளர் நிறுவகத்தின் இணை உறுப்பினர் (ACCS)

தொழில் உறவுகள் மற்றும் மனிதவள முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்ளோமா
கொழும்பு பல்கலைக்கழகம்

நிர்வாகத் தலைவர்

திருவாளர். எச்.ஆர்.எல்.பி.பி. குணரத்ன

முகாமைத்துவ டிப்ளோமா – திறந்த பல்கலைக்கழகம்

வியாபாரத் தகவல் டிப்ளோமா

வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்
ஆண்டறிக்கையும் கணக்குகளும்
2022/23

தலைவரின் மீளாய்வு

வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை சார்பில், இக்கம்பனியின் 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான ஆண்டறிக்கையையும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களையும் சமர்ப்பிப்பதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

உலர் மொத்தச்சரக்கு கப்பற் சந்தை

பால்டிக் (Baltic) உலர் சுட்டெண்ணானது ஆண்டு முழுவதும் தொடர்ந்து தளம்பலுடன் இருப்பதாக அவதானிக்கப்பட்டது. 2022/23 நிதியாண்டின் போது உலர் மொத்தச்சரக்குக் கப்பல்களுக்கான கால வாடகைக்கமர்த்தல் வீதங்கள் அதிகரித்திருந்தன, ஆதலால் எமது இரு கப்பல்களும் அனுபவித்த வாடகைக்கமர்த்தல் வாடகை வீதங்கள் கணிசமாக உயர்ந்திருந்தன.

கப்பல்களை ஈடுபடுத்தல்

சாதாரணமாக, CSC இற்கு சொந்தமான எம்வீ சிலோன் பிறீஸ் மற்றும் எம்வீ சிலோன் பிறின்சஸ் ஆகிய இரு கப்பல்களும் ஏப்பிறல் மாதத்திலிருந்து செப்டெம்பர் மாத நடுப்பகுதி வரையான தென்மேற்குப் பருவக்காற்றுக் காலப்பகுதியின் போது வாணிப முகாமைத்துவக் கம்பனியொன்றின் கீழ் சர்வதேச வாடகைக்கமர்த்தல் சந்தையில் ஈடுபடுத்தப்படுகின்றன. இக்கப்பல்களானவை தேசிய மின்சாரப் பிறப்பாக்கத்திற்குப் பங்களிப்புச்செய்து பருவக்காற்று சாராத காலப்பகுதியின் போது தென்னாபிரிக்காவின் RBCT இலிருந்து புத்தளம் லக்விஜய மின்நிலையத்திற்கு நிலக்கரியை எடுத்துச்செல்வதில் ஈடுபடுத்தப்படுகின்றன.

ஆனால், CSC இற்கு சொந்தமான கப்பல்கள் இரண்டும் சர்வதேச போட்டி விலைமனுச் செய்முறைக்கூடாக தெரிவுசெய்யப்பட்ட எதிர்கால வாடகைக்கமர்த்துநர் ஒருவருடனான வாணிப முகாமைத்துவ உடன்படிக்கை ஒன்றின் கீழ் இந்த நிதியாண்டின் போது உலகளாவிய வாடகைக்கமர்த்தல் சந்தையில் ஈடுபடுத்தப்பட்டன. அவற்றிலிருந்து ஈட்டிய உயர் வருவாயானது இக்கப்பல்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட சரக்கு வருமானத்தைக்

காட்டிலும் உயர்வாக இருந்தமை மற்றும் அந்நேரத்தில் முன்வைக்கப்பட்ட நிலக்கரிக் கேள்வியில் நிலவிய நிச்சயமற்றதன்மை காரணமாக இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

அதற்கிணங்க, எம்வீ சிலோன் பிறீஸ் கப்பலானது நாளொன்றுக்கு 21,221.37/- ஐ.அ. டொலர் கொண்ட சராசரி வாடகைக்கமர்த்தல் வாடகை வீதத்தில் வாடகைக்கமர்த்தப்பட்டது அதேவேளை எம்வீ சிலோன் பிறின்சஸ்கப்பலானது நாளொன்றுக்கு 23,266.67/- ஐ.அ. டொலர் கொண்ட சராசரி வாடகைக்கமர்த்தல் வாடகை வீதத்தில் வாடகைக்கமர்த்தப்பட்டது.

அரசாங்கத் துறை இறக்குமதிகள்

415 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் கீழ் அரசாங்கத் துறை சார்ந்த கப்பற் சரக்குகளை காவிச்செல்வதற்கான அதிகாரத்தை இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம் கொண்டுள்ளது. அதற்கிணங்க, உலகம் முழுவதிலிருந்தும் இடம்சார் வாடகைக்கமர்த்தல் (space charter) மற்றும் கடற்பயண வாடகைக்கமர்த்தல் அடிப்படையில் மூன்றாம் தரப்பு கப்பல்களில் கொள்கலன்களில் அடைக்கப்பட்ட சரக்குகள், வாகனங்கள், தனித்தனியாக ஏற்றப்படவேண்டிய சரக்குகள், மற்றும் பாரமிகு சரக்குகள் போன்றவற்றை இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம் கையாண்டது.

அத்துடன், இந்த நிதியாண்டின் 3 ஆம் காலாண்டளவில் 500 ஜீப் (Jeep) வாகனங்கள் மற்றும் 500 பேருந்துகளை இறக்குமதி செய்யும் புதிய வியாபார வாய்ப்புகளை CSC இற்கூடாக கையாள்வதற்கு உறுதிப்படுத்தப்பட்டது.

சரக்குக் கையாள்கைச் சேவைகள்

அப்புறப்படுத்தல் மற்றும் முன்னளித்தல் வியாபாரமானது மிகவும் போட்டித்தன்மை வாய்ந்ததாக இருந்தாலும், CSC ஆனது இந்தத் துறையில் கணிசமான முன்னேற்றத்தை அடைந்துள்ளது. CSC ஆனது இந்த சேவைகளை அரச துறை அதேபோன்று தனியார் துறை வாடிக்கையாளர்களுக்கு வழங்குகின்றது. பன்முக மாதிரி போக்குவரத்துக் கோட்பாட்டின் தோற்றத்துடன், வழங்கற் சங்கிலியை வினைத்திறனாக முகாமித்தலானது சரக்கு அனுப்புநர்களுக்கும் சரக்குப் பெறுநர்களுக்கும் இடையில் போட்டியை உருவாக்கியுள்ளது, ஆகவே CSC ஆனது பொதிசெய்தல், அடையாளமிடல் (labelling), திணித்தல் (stuffing), பிணைத்தல் (lashing), சுங்க அப்புறப்படுத்தல் மற்றும் விநியோகம், புகையூட்டல் போன்ற வெவ்வேறுபட்ட சரக்குக் கையாள்கைச் சேவைகளுக்காக

திறமையான, ஆற்றல்மிக்க மற்றும் பதிவுசெய்யப்பட்ட சேவை வழங்குநர்களின் வலையமைப்புடன் சேர்ந்து செயலாற்றுகின்றது.

நிதிச் செயற்றிறன்

இலங்கை கப்பற் கூட்டுத்தாபனமானது (CSC) நிதியாண்டு 2021/22 உடன் ஒப்பிடுகையில் 3900.68 மில்லியன் ரூபாவாக கொண்ட செயற்பாட்டு இலாபமொன்றுடன் 77.24 % ஆல் திருப்திகரமான வளர்ச்சியொன்றைக் கொண்டிருந்தது. எனினும், நிதிச் செலவுகள் (அதாவது, மக்கள் வங்கிக் கடன் வட்டியும் இக்கடனின் செலாவணி நட்டமும்) 2022/23 ஆம் ஆண்டில் 4381.84 மில்லியன் ரூபாவாக பதிவுசெய்யப்பட்டன, அது முன்னைய நிதியாண்டுக்கு எதிராக (36.64%) குறைவாகும்.

2022/23 ஆம் ஆண்டின் போது, 6649.45 மில்லியன் ரூபா கொண்ட மொத்த வருமானத்தை இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தினால் அடையக்கூடியதாகவிருந்தது. முன்னைய 2021/22 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, இது அண்ணளவாக (15.58%) குறைவாகும். மேலும், நேரடிச் செயற்பாட்டுச் செலவுகள் 2022/23 ஆம் ஆண்டில் 3253.91 மில்லியன் ரூபாவாகவும் 2021/22 ஆம் ஆண்டில் 5706.57 மில்லியன் ரூபாவாகவும் அறிக்கையிடப்பட்டது. ஆகவே, நேரடிச் செயற்பாட்டுச் செலவுகளும் இவ்வாண்டின் போது அண்ணளவாக (43%) இனால் ஒப்பீட்டு ரீதியில் குறைந்துள்ளன.

இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தின் கப்பல் நடவடிக்கையிலான வருமானம்

கடந்த நிதியாண்டுடன் ஒப்பிடுகையில் சர்வதேச வாடகைக்கமர்த்தல் சந்தையில் வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான இரு கப்பல்களையும் ஈடுபடுத்தியதில் 2022/23 ஆம் ஆண்டில் அண்ணளவாக 79.19% வருமான அதிகரிப்பு உள்ளமை கருத்திற்கொள்ளப்பட்டுள்ளது.

மூன்றாம் தரப்புக் கப்பல்களில் நிலக்கரித் தொழிற்பாட்டிலிருந்தான முகவராண்மைத் தரகு மற்றும் கப்பலை வாடகைக்கமர்த்துவோர்களுக்கான தரகு என்பவற்றிலிருந்தும் சரக்கிறக்கல் நடவடிக்கையிலிருந்தும் உருவாக்கப்பட்ட வருமானமானது 2022/23 ஆம் ஆண்டில் (7.27%) இனால் குறைக்கப்பட்டிருந்தது.

சொந்தக் கப்பல் நடவடிக்கைகளிலிருந்தான வருமானமானது இவ்வாண்டின் போது இக்கம்பனியின் மொத்த வருமானத்தில் 80.25% ஆக பதிவுசெய்யப்பட்டது.

கப்பல் சாராமல் தொழிற்படும் பொது சரக்கனுப்புநர் (NVOCC) சேவையிலான வருமானம்

கப்பல் சாராமல் தொழிற்படும் பொது சரக்கனுப்புநர் (NVOCC) நடவடிக்கைகளிலிருந்து பிறப்பிக்கப்பட்ட வருமானமானது 2022/23 ஆம் நிதியாண்டில் 1802.12 மில்லியன் ரூபாவிலிருந்து 878.67 மில்லியன் ரூபாவாக குறைவடைந்திருந்தது. 2021/22 ஆம் நிதியாண்டின் போது விசேட கப்பற் சரக்கனுப்பல்களைக் கையாண்டமையால் வருமான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. ஆதலால், இவ்வருடத்தின் போது வருமானத்தில் (51%) குறைவொன்று ஒப்பீட்டு ரீதியில் கருத்திற்கொள்ளப்பட்டுள்ளது.

உலக அரசியல் குழப்பம், அந்நியச் செலாவணிப் பற்றாக்குறை, கடுமையான அரசிறைக் கொள்கைகள், பொருளாதாரச் சுருக்கம் போன்றவற்றால், அரச துறை நிறுவனங்கள் அவற்றின் வழக்கமான இறக்குமதிச் சரக்கனுப்பல்களுக்கு கட்டளையிடவில்லை என்பதுடன் பெரும்பாலான நிறுவனங்கள் 2022/23 ஆம் ஆண்டில் அவற்றின் விசேட சரக்கு அனுப்பல்களை உறுதிப்படுத்தவில்லை. எவ்வாறாயினும், 2022/23 ஆண்டின் கடைசி 04 மாதங்களில் CSC இனால் Ro/Ro கப்பல்களில் பாரந்தூக்கி (Crane) சரக்கனுப்பலையும் 349 பேருந்துகளையும் காவிச்செல்ல முடிந்ததன் காரணமாக தனித்தனியாக ஏற்றப்படவேண்டிய சரக்குகளின் (B/B) அளவுகள் கணிசமாக அதிகரித்தன.

சரக்குக் கையாள்கைச் சேவைகளிலிருந்தான வருமானம்

சரக்குக் கையாள்கை நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட வருமானமானது 2022/23 ஆம் நிதியாண்டில் 70.53 மில்லியன் ரூபாவாக அதிகரித்திருந்ததுடன் இது முன்னைய நிதியாண்டுக்கு எதிராக 288% அதிகரிப்பாகும். இது ஆண்டின் 3 ஆவது காலாண்டில் முன்நோக்கி தொடங்கப்பட்ட தளர்வுறாத சந்தைப்படுத்தல் பரப்புரைகளிலிருந்து CSC இற்கு கிடைத்த புதிய வியாபார வாய்ப்புகளின் விளைவாகும். இதன் விளைவாக, சீருடைகள், காகிதம், அரிசி, உதிரிப்பாகங்கள், பூசப்பட்ட காகித அட்டை மற்றும் தட்டுகள், ஆற்றல்மானிகள், தனிப்பட்ட பயணப்பை சரக்கனுப்பல் போன்ற இந்தப் புதிய சரக்கனுப்பல்களின் சரக்குக் கையாள்கை நடவடிக்கைகளை CSC இனால் கையாள முடிந்தது.

நாணய மதிப்பிறக்கம்

ஐக்கிய அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் மதிப்பிறக்கமானது கடந்த ஆண்டுகளின் போது இக்கம்பனியை எதிர்மறையாகப் பாதித்துள்ளது. 2022/23 ஆம் ஆண்டில், இது 12.38% இனால் அதிகரிக்கப்பட்டது. இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க வருடாந்தக் கணக்குகளில் கட்டாய ஏற்பாடொன்றாகவுள்ள 2,811.89 மில்லியன் ரூபா தொகையான கப்பல் கடன்களின் செலாவணி நட்டத்தை அதிகரிப்பதற்கு இது நேரடியாக பாதிப்பைச் செய்துள்ளது.

எவ்வாறாயினும், 2023.03.31 ஆம் திகதியிலுள்ளவாறு இரு கப்பல்களையும் கட்டுவதற்குப் பெறப்பட்ட கடனின் மூலதனக் கூறுகளின் 2092 மில்லியன் ரூபாவையும் கடன் வட்டித் தவணைக்கட்டணங்களின் 736 மில்லியன் ரூபாவையும் வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தினால் தீர்ப்பனவு செய்ய இயலுமாகவிருந்தது.

மேலும், குறைக்கப்பட்ட செலாவணி நட்டம் மற்றும் உரியவாறான கடன் வட்டிக் கொடுப்பனவு காரணமாக, 2022/23 ஆம் ஆண்டில் (624.91) மில்லியன் ரூபா நட்டமொன்று பதிவு செய்யப்பட்டது. ஆகையால், (4567.79) மில்லியன் ரூபா நட்டமொன்றாக (வரிக்குப் பின்னரான நட்டம்) காணப்பட்ட முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிகழாண்டில் நட்டத் தொகையை CSC இனால் குறைக்கக்கூடியதாகவிருந்தது.

ஊழியர்கள்

2023.03.31 ஆம் திகதியிலுள்ளவாறு இக்கம்பனியின் மொத்த ஊழியர் (நிரந்தரப் பதவியணி) எண்ணிக்கை 105 ஆக காணப்பட்டதுடன் சம்பளம் மற்றும் கூலிகளுக்கான செலவுகள் 2022/23 ஆம் ஆண்டில் 142.58 மில்லியன் ரூபாவாக காணப்பட்டது. 2022/23 ஆம் ஆண்டில் நிர்வாகச் செலவுகள் 246.34 மில்லியன் ரூபாவாக காணப்பட்டதுடன் 2021/22 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அண்ணளவாக (6.66%) ஆன குறைவினைக் காட்டுகின்றது.

தொழில் நிபுணத்துவ ரீதியிலும் கப்பல் துறையில் தொழில்நுட்ப அபிவிருத்திகளுக்கு ஒத்திசைவாகவும் இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டுத் தொழிற்பாடுகளை ஆற்றுவதற்கு நன்கு அனுபவம்வாய்ந்த / பயிற்றப்பட்ட அத்துடன் நன்கு தகைமைபெற்ற அலுவலர் குழாத்தினரைக் கொண்டிருக்கும் தேவைப்பாடு இனங்காணப்பட்டுள்ளது.

ஆதலால் இலங்கை கப்பற் கூட்டுத்தாபனமானது அலுவலர் குழாத்துப் பயிற்சி நோக்கங்களுக்காக வருடாந்தம் 2.00 மில்லியன் ரூபாவை ஒதுக்குகின்றது அத்துடன் பல்வேறுபட்ட கப்பல்சார் மற்றும் நிதி நிகழ்ச்சித்திட்டங்களில் 12 எண்ணிக்கையிலான அலுவலர்களைப் பயிற்றுவிப்பதற்கு 2022/23 ஆம் ஆண்டில் 0.21 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது.

இறுதியாக, பணிப்பாளர் சபை, எமது வரிசை அமைச்சு, எமது அனைத்து வாடிக்கையாளர்கள், வியாபாரப் பங்காளர்கள், முகவர்கள் மற்றும் ஏனைய அனைத்து அக்கறைதாரர்கள் CSCL இற்கு வழங்கிய தொடர் ஆதரவு மற்றும் ஒத்துழைப்புக்காக இத்தருணத்தில் பாராட்டுதலையும் நன்றியையும் அவர்களுக்கு நான் கூறுகின்றேன் அத்துடன் எதிர்வரும் ஆண்டிலும் அவர்களின் அதிகரித்த பங்குடமையையும் அனுசரணையையும் எதிர்பார்க்கின்றேன்.

டபிள்யு.எஸ். வீரமன்
தலைவர்

கொழும்பு
2023 ஓகஸ்ட் 13 ஆம் திகதி

வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்
2022/2023 இன் ஆண்டறிக்கையும் கணக்குகளும்

கம்பனியின் அலுவல்கள் தொடர்பில்
பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை

வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்களானோர், அதன் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படுவதன் பொருட்டு, 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இக் கம்பனியின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளுடன் சேர்த்து அவர்களின் அறிக்கையினை சமர்ப்பிப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றனர்.

ஆண்டின் மீளாய்வு

முன்நோக்கியுள்ள சவால்கள் உள்ளடங்கலாக நிகழ்கால நிதியாண்டின் போதும் இவ் அறிக்கையின் திகதி வரையிலுமுள்ள கம்பனியின் அலுவல்களானவை தலைவரின் மீளாய்வில் விபரிக்கப்பட்டுள்ளன. கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுடன் சேர்ந்த இவ் அறிக்கையானது இக் கம்பனியின் அலுவல்களின் நிலையினைப் பிரதிபலிக்கின்றது.

பிரதான செயற்பாடுகள் / முக்கியமான வியாபாரங்கள்

CSC ஆனது இலங்கைக் கொடியின் கீழ் செயற்படும் தேசிய கடல் மார்க்கமான சரக்கனுப்பல் நிறுவனமாகும். சரக்குகளை கடல் மார்க்கமாக எடுத்துச் செல்லுதல், சரக்குகளை இறுதி அமைவிடத்திற்கு வழங்குதல் மற்றும் கொண்டு செல்லல், இலங்கை இராஜதந்திர பணியாட்டொகுதியினரின் வீட்டுப் பொருட்கள் மற்றும் தனிப்பட்ட உடமைகளை சர்வதேச ரீதியில் நகர்த்துதல், சுங்க அலுவலக முகவராண்மைச் செயற்பாடுகள், கப்பல் முகவராண்மைச் சேவைகள், கப்பல் உரிமையாளர்கள், முகாமையாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள், கப்பல் வாடகைக்கமர்த்துநர்கள் போன்ற வியாபாரங்கள் இக் கம்பனியின் பிரதான செயற்பாடுகளாகும்.

கொள்கலன்களில் அடைக்கப்பட்டவை, தனித்தனியாக ஏற்றப்படவேண்டிய சரக்குகள், மொத்தச் சரக்குகள் (நிலக்கரி), வாகனங்கள், மீகன உபகரணச் சரக்கு, பார சரக்குகள் போன்ற வடிவத்தில், சகல வகையான சரக்குகளையும் இடநகர்த்துவதில் வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம் ஈடுபட்டுள்ளது.

மேற்போந்தவற்றுக்கு மேலதிகமாக, CSC ஆனது கடலோடிகளுக்கு கப்பல் மீதான பயிற்சி வசதிகளை வழங்கி தேசிய கடலோடிப் பயிற்சி முறைமைக்கு பங்களிக்கின்றது.

<u>நிதிக் கூற்றுக்கள்</u>

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் இணக்கமுற்று தயாரிக்கப்பட்ட இவ் ஆண்டறிக்கையிலுள்ள நிதிக் கூற்றுக்கள்.

<u>சுயாதீன கணக்காய்வாளர் அறிக்கை</u>

இவ் அறிக்கையின் நிதிக் கூற்றுக்கள் பற்றிய கணக்காய்வாளர் அறிக்கை.

<u>தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல்வாங்கல்</u>

இலங்கை கணக்கீட்டு நியமங்களில் (LKAS 24) விதித்துரைக்கப்பட்ட தகுதிவிதிகளுக்கிணங்க தொடர்புடைய தரப்பினர் அடையாளம் காணப்படுகின்றனர். ஆண்டறிக்கையில் வெளிப்படுத்தப்பட்ட குறிப்பு இலக்கம் 35 தொடர்புடைய தரப்பினர் என்பதைத் தவிர; மீளாய்வின் கீழான காலப்பகுதியின் போது மிகவும் சாதகமாகவோ அல்லது முன்னுரிமையாகவோ உள்ள தொடர்புடைய தரப்பினர்களுடன் எவ்வித கொடுக்கல்வாங்கலும் செய்யப்படவில்லை.

<u>கணக்கீட்டுக் கொள்கைகளும் விளக்கக் குறிப்புகளும்</u>

மீளாய்வின் கீழான நிதியாண்டின் போது இக் கம்பனியினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளில் எதுவித மாற்றங்களும் இல்லை. நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளும் விளக்கக் குறிப்புகளும்.

<u>நிதிப் பெறுபேறுகள் / இலாபம் மற்றும் பகிர்வுகள்</u>

இவ் அறிக்கையின் முழுமொத்த வருமானக் கூற்று.

<u>ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்</u>

மீளாய்வின் கீழான ஆண்டின் போது இக் கம்பனியானது ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றில் 243 மில்லியன் ரூபாவை முதலிட்டுள்ளது.

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 10 ஆனது முதலிடப்பட்ட ஆண்டின் போது ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றிலான அசைவு தொடர்பிலான தகவல்களை தருகின்றது.

முதலீடுகள்

நிதிக் கூற்றுக்கான குறிப்புகள் 13, 14, 15 மற்றும் 16 ஆகியன 2023 மார்ச் 31 ஆம் திகதியிலுள்ளவாறு இக் கம்பனி வைத்துள்ள நீண்டகால முதலீடுகள் பற்றிய விபரங்களை வெளிப்படுத்துகின்றன.

பங்கிலாபம்

2023 மார்ச் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த நிதியாண்டுக்காக பங்கிலாப கொடுப்பனவை பணிப்பாளர்கள் பரிந்துரைக்கவில்லை.

கூறப்பட்ட மூலதனம்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் நியதிகளுக்கு அமைவாக, இக் கம்பனியின் கூறப்பட்ட மூலதனமானது 2023 மார்ச் 31 ஆம் திகதியிலுள்ளவாறு 50,000,000 ரூபாவாகும். இவ் விபரங்களானவை நிதிக் கூற்றுக்கான குறிப்பு 23 இல் தரப்பட்டுள்ளன.

எதிர்பாராத நிகழ்வுப் பொறுப்புகள்

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 34 இல் எதிர்பாராத நிகழ்வுப் பொறுப்புகள் பற்றிய விபரங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

ஐந்தொகைக்குப் பின்னரான நிகழ்வு

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 36 இல் குறிப்பிடப்பட்டவற்றை விட, சீராக்கங்களை, அல்லது நிதிக் கூற்றுக்களில் சீராக்கத்தைத் தேவைப்படுத்துகின்ற வெளிப்படுத்தலைத் தேவைப்படுத்துகின்ற பொருண்மையான நிகழ்வுகள் எதுவும் ஐந்தொகைக்குப் பின்னரான தினத்தில் நிகழவில்லை.

சபை உப குழுக்கள்

கணக்காய்வுக் குழு

பணிப்பாளரின் பெயர்
திருமதி. எம்.ஜீ.என். பிரேமதிலக்க (தலைவர்)
திரு. ஜீ.யு.கே. அல்கேவத்தகே
திரு. ஈமல் குணசேகர

பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு, அழைப்பின் பேரில்
திருமதி. என்.ஏ.ஏச்.கே. விஜேரத்ன

<u>பணிப்பாளர்களின் ஊதியம்</u>

2023 மார்ச் 31 இன் நிதியாண்டின் போது பணிப்பாளர்களின் கட்டணமாக 488,500/- ரூபா கொண்ட தொகையொன்று (2021/2022 – 596,050/- ரூபா) செலுத்தப்பட்டது.

<u>தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு</u>

இக் கம்பனியின் வியாபாரத் திட்டங்களை பணிப்பாளர்கள் மீளாய்வு செய்துள்ளதுடன் முன்னுணரக்கூடிய எதிர்காலத்திற்கு தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவொன்றாக தொடர்வதற்குப் போதுமான வளங்களை இக் கம்பனி கொண்டுள்ளது என்று திருப்தியடைந்துள்ளனர். ஆதலால், வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்திற்கு அவ் அடிப்படையிலேயே நிதிக் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது.

<u>நியதிச்சட்டக் கொடுப்பனவுகள்</u>

பணிப்பாளர்கள் அவர்களின் அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை, அரசாங்கத்திற்கும் ஊழியர்களுக்குமான அனைத்து நியதிச்சட்ட நிதிக் கடப்பாடுகளும் ஒன்றில் உரியவாறு செலுத்தப்பட்டுள்ளனவென்றோ அல்லது நிதிக் கூற்றுக்களில் போதுமானளவு வழங்கப்பட்டுள்ளனவென்றோ திருப்தியடைந்துள்ளனர்.

சபையின் கட்டளையின்படி

டபிள்யு.எஸ். வீரமன்
தலைவர்

திரு. ஜீ.யு.கே. அல்கேவத்தகே
பணிப்பாளர்

ரி.எம்.வீ.எல். முத்துகம
கம்பனிச் செயலாளர்

கொழும்பு
2023 ஓகஸ்ட் 13 ஆம் திகதி

2013/14 இலிருந்து 2022/23 வரை CSCL இன் நிதிச் சிறப்புக்கூறுகள் ரூபா மில்லியன்

செயற்றிறன்	2013/14	2014/15	2015/16	2016/17	2017/18	2018/19	2019/20	2020/21	2021/22	2022/23
மொத்த வருமானம்	527	623	617	2,541	2,499	3,053	3,849	3,095	7,877	6,649
நேரடி செயற்பாட்டுச் செலவினங்கள்	(237)	(135)	(261)	(1,601)	(1,665)	(2,076)	(2,637)	(2,043)	(5,707)	(3,254)
மொத்த இலாபம்	290	488	356	940	834	977	1,212	1,052	2,170	3,395
ஏனைய வருமானம்	196	69	66	183	257	237	118	230	472	835
நிர்வாகச் செலவினங்கள்	(163)	(190)	(185)	(210)	(220)	(221)	(217)	(216)	(264)	(246)
சொத்துக்களின் பெறுமதிக்குறைவு	(29)	(139)	(51)	(42)	(60)	(133)	(268)	(162)	(177)	(84)
செயற்பாடுகளிலிருந்தான இலாபம்	294	228	186	871	811	860	845	904	2,201	3,900
வட்டிச் செலவுகள் - கப்பல் கடன்	-	-	(41)	(652)	(767)	(930)	(942)	(757)	(728)	(1,570)
வருமான வரிக்கும் செலாவணி நட்டத்திற்கும் முன்னரான இலாபம்/ (நட்டம்)	294	228	145	219	44	(70)	(97)	147	1,473	2,330
செலாவணி நட்டம்	-	-	(37)	(502)	(294)	(1,488)	(1,010)	(684)	(6,081)	(2,811)
இணை நிறுவனங்களின் இலாபப் பங்கு	15	12	16	13	17	35	22	10	40	47
வருமான வரிக்கு முன்னரான இலாபம்/ (நட்டம்)	309	240	124	(270)	(233)	(1,523)	(1,085)	(527)	(4,568)	(434)
ஆண்டுக்கான வருமான வரி	(59)	(115)	(10)	(7)	(12)	-	-	-	-	(191)
வருமான வரிக்கு பின்னரான இலாபம்/ (நட்டம்)	250	125	114	(277)	(245)	(1,523)	(1,085)	(527)	(4,568)	(625)
ஆண்டுக்கான பிற்போடப்பட்ட வரிச் சீராக்கம்	-	-	(40)	40	69	420	(69)	(286)	(1,197)	(1,232)
வருமான வரிக்கும் பிற்போடப்பட்ட வரிச் சீராக்கத்திற்கும் பின்னரான இலாபம்/ (நட்டம்)	250	125	74	(237)	(176)	(1,103)	(1,154)	(813)	(5,765)	(1,857)

முதன்மைக் குறிகாட்டிகள்	2013/14	2014/15	2015/16	2016/17	2017/18	2018/19	2019/20	2020/21	2021/22	2022/23
மொத்த இலாப வீதம்	55%	78%	58%	37%	33%	32%	31%	34%	28%	51%
அடிப்படை மற்றும் கலப்பு பங்கொன்றுக்கான உழைப்பு	50	25	15	(47)	(49)	(305)	(217)	(105)	(914)	(125)
நடைமுறை விகிதம்	2.04	2.08	1.07	0.91	1.05	1.23	1.27	1.15	0.90	0.81
மொத்த உரிமைமுதல்	1,209	1,329	1,393	1,145	1,029	(56)	(1,275)	(2,042)	(7,914)	(9,210)
மொத்தச் சொத்துகள்	2,132	7,090	11,034	13,629	13,792	13,672	13,730	12,093	12,471	13,137

வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்
2022/2023 இன் ஆண்டறிக்கையும் கணக்குகளும்

நிலைத்துநிற்கும்தன்மை பற்றிய அறிக்கை

கொழும்பு 01 இலுள்ள வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனமானது 2023/24 ஆம் ஆண்டிற்கான அதன் மூன்றாவது தொடர்ச்சியான நான்காவது நிலைத்துநிற்கும்தன்மை பற்றிய அறிக்கையை தொடக்கிவைத்தது. "எதிர்காலத்தில் நிலைத்துநிற்பதற்கான தற்காலத் தேவை" என்ற தலைப்பிடப்பட்ட இந்த அறிக்கையானது, நிலைத்துநிற்கும் வியாபாரத்தை நடத்துவதற்கான CSCL இன் கடப்பாட்டை சுட்டிக்காட்டுகின்றது.

உறுப்பு நாடுகளால் நிலைத்துநிற்கும் அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சிநிரலை (IMO SDGs தந்திரோபாயம்) அமுல்படுத்துவதில் அவற்றுக்கு மேலும் ஆதரவளிப்பதற்கு வளர்ந்துவரும் பிரச்சினைகள் மற்றும் வாய்ப்புகளை அடையாளங்கண்டு, பகுப்பாய்வு செய்து தீர்ப்பதற்கான IMO செயலகத்தின் C 122/3(a)/1.

பாதுகாப்பான, திடமான, தூய்மையான மற்றும் வினைத்திறனான கடல் போக்குவரத்துக்கான உலகளாவிய நியமங்களுக்கு பொறுப்பான ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு முகவராண்மை ஒன்றாக, சர்வதேச கடல்சார் நிறுவனம் (IMO) ஆனது 2030 நிகழ்ச்சிநிரலை அடைய உறுப்பு நாடுகளுக்கு உதவுவதில் முக்கியமான வகிபாகமொன்றைக் கொண்டுள்ளது.

IMO ஆனது 2030 நிகழ்ச்சிநிரலை நோக்கி முனைப்புடன் செயலாற்றிவருவதுடன் நிலைத்துநிற்கும் அபிவிருத்தியை இயலுமைப்படுத்தும் சர்வதேச கப்பல் தொழிலுக்கான சட்டவாக்க கட்டமைப்பை வழங்குவதனூடாகவும் திட்டவட்டமான ஆற்றல் விருத்தி செயற்பாடுகளுக்கூடாகவும் SDG களை அமுல்படுத்துவதற்குப் பங்களிக்கிறது.

IMO ஆனது 2030 நிகழ்ச்சிநிரலை முழுமையாக அமுல்படுத்துவதை ஆதரிக்கும் அதேவேளையில், அதன் பணியில் மிகப்பெரும் தாக்கமாகவுள்ள IMO SDGs தந்திரோபாயத்தினால் அடையாளம் காணப்பட்ட துறைகளாக SDG 14 (நீருக்கு அடியிலான வாழ்க்கை), SDG13 (காலநிலை மாற்றம்), SDG9 (கைத்தொழில், புத்தாக்கம் மற்றும் உட்கட்டமைப்பு) மற்றும் ஒட்டுமொத்தமான SDG17 (பங்குடமைகள் மற்றும் வளங்களைத் திரட்டுதல்) இற்கு அடுத்ததாக SDG5 (பால்நிலை சமத்துவம்) என்பன உள்ளன.

2019 உயிர்த்த ஞாயிறு (ஈஸ்டர்) தாக்குதல்கள், கொவிட்-19 உலகளாவிய தொற்றுநோய் மற்றும் தற்போது வெளிநாட்டுக் கடன் மற்றும் தீவிரமான பொருளாதார நெருக்கடி என்பவற்றை இலங்கை எதிர்கொண்டபடியால், பின்னடைவுகள் இருந்தபோதிலும், நாட்டின் 2030 நிகழ்ச்சிநிரல் கடப்பாடுகளை வழங்குவதற்கு தேசிய மற்றும் துணைத் தேசிய மட்டங்களில் கொள்கை நடவடிக்கைகளின் அமுலாக்கம் தொடர்ந்துவந்துள்ளது.

இவற்றுக்கிடையில், நிலைத்துநிற்கும் அபிவிருத்திப் பேரவையின் ஸ்தாபிப்பு, 2017 இல் 46 இலிருந்து 2021 இல் 104 ஆக SDG குறிகாட்டிகள் தொடர்பான தரவுக் கிடைப்பனவு அதிகரித்தல் மற்றும் SDG களுக்கான புத்தாக்க நிதியைத் திரட்டுவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. மேற்போந்த தேவைகளை அடைவதற்கு, CSCL ஆனது செயல்நிறைவேற்றத்திற்கு வலுவான தொழில்நுட்ப ரீதியான மற்றும் கூட்டாண்மை பின்னணியுடன்கூடிய ஆசியப் பிராந்தியத்தில் ஓர் ஆசிய அரசாங்க கப்பற்றுறைப் போட்டியாளராக IMO SGD குறிக்கோள்களை நிறைவேற்ற ஏற்கனவே திட்டமிட்டுள்ளது.

நிலைத்துநிற்கும் அபிவிருத்திக் குறிக்கோள்கள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் நிகழ்ச்சிநிரல் 2030 மற்றும் 2017.10.03 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்ட 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலங்கை நிலைத்துநிற்கும் அபிவிருத்திச் சட்டம் என்பவற்றுக்கிணங்க, இந்த அறிக்கையானது, கம்பனியின் பொருளாதார, சுற்றாடல் மற்றும் சமூக செயற்றிறன் ஆகிய மூன்று முக்கிய துறைகளைக் கருத்திற்கொண்டு, மீளாய்வின் கீழான ஆண்டின் போது கம்பனியின் நிலைத்துநிற்கும் தன்மையின் செயற்றிறன் பற்றிய கண்ணோட்டத்தை வழங்குகின்றது.

<u>சுற்றாடல்சார் நிலைத்துநிற்கும்தன்மை</u>

CSCL இன் இரு கப்பல்களான எம்வீ சிலோன் பிறீஸ் மற்றும் எம்வீ சிலோன் பிறின்சஸ் ஆகியவை IMO இன் ஆதரவில் கப்பல் நிர்வாகங்களால் உலகளாவிய ரீதியில் பின்பற்றப்பட்டுள்ள ஏற்புடைய சகல உமிழ்வு விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க கட்டப்பட்டு, செயற்படுத்தப்பட்டு, வடிவமைக்கப்பட்டுள்ளன. IMO இன் MARPOL உடன்படிக்கையின் இணைப்பு VI ஆனது சர்வதேச கப்பல் நடவடிக்கையிலிருந்து வெளியேறும் உமிழ்வுகளை ஒழுங்குறுத்துகின்றது. அவை பச்சைவீட்டு வாயு (GHG) உமிழ்வுகள், சக்தி வினைத்திறன் மற்றும் வளி மாசுபாடு ஆகியவற்றை உள்ளடக்குகின்றன.

MEPC.324 (75) தீர்மானத்துக்கிணங்க 2022 ஏப்பிறல் மாதம் முதல் செயல்வலுவிலுள்ள குறிப்பிட்ட கப்பல் வகைகளுக்கான EEDI கட்டம் 3 தேவைப்பாடுகளை முன்கூட்டியே அமுல்படுத்துதல் தொடர்பான MARPOL இணைப்பு VI இற்கான திருத்தங்களை, குறிப்பாக பின்பற்றுவதனூடாக EEDI மற்றும் SEEMP ஐ மையமாகக் கொண்டு தற்போதைய சக்தி வினைத்திறன் கட்டமைப்பை மேம்படுத்துதல்.

IMO இற்கிணங்க இக்கொள்கைக் கட்டமைப்பின் முக்கிய நோக்கங்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

1. சர்வதேச கப்பல் நடவடிக்கையிலிருந்து வெளியேறும் வருடாந்த பச்சைவீட்டு வாயு உமிழ்வுகளை, 2008 ஆம் ஆண்டிலிருந்த அவற்றின் அளவுடன் ஒப்பிடுகையில் 2050 ஆம் ஆண்டளவில் குறைந்தது 50 சதவீதத்தால் குறைத்தல், மற்றும் இந்த நூற்றாண்டில் சாத்தியப்படக்கூடிய அளவிற்கு விரைவாக கப்பல் நடவடிக்கையிலிருந்து வெளியேறும் GHG உமிழ்வுகளை முற்றிலுமாக இல்லாமற்செய்வதை நோக்கி செயலாற்றுதல்.

2. ஆரம்ப GHG தந்திரோபாயமானது சர்வதேச கப்பல் போக்குவரத்தின் காபன் செறிவில் 2030 ஆம் ஆண்டளவில் குறைந்தபட்சம் 40% ஆகவும், 2050 ஆம் ஆண்டளவில் 70% கொண்ட இலக்குடனும் ஒரு குறைப்பினை (ஒரு போக்குவரத்து பணிக்கு CO2 உமிழ்வைக் குறைத்தல்) தேவைப்படுகின்றது. இது 2008 ஆம் ஆண்டுடனான ஒப்பீடாகும்.



IMO GHG குறைப்புத் தந்திரோபாயம்

அனைத்து கப்பல்களும் அவற்றின் சக்தி வினைத்திறனை அளவிடும் பொருட்டு 2023 ஜனவரி 1 ஆம் திகதியிலிருந்து அவற்றின் அடையப்பெற்ற சக்தி வினைத்திறன் பற்றிய நடைமுறையிலுள்ள கப்பல் சுட்டியை (EEXI) கணிப்பிட வேண்டும் என்பதுடன் அவற்றின் வருடாந்த தொழிற்பாட்டு காபன் செறிவுக் குறிகாட்டி (CII) மற்றும் CII தரப்படுத்தலை அறிக்கையிடுவதற்காக தரவு சேகரிப்பைத் தொடங்க வேண்டும். ஒவ்வொரு கப்பலும் மற்றும் பெரிய மாற்றத்திற்கு உள்ளான ஒவ்வொரு கப்பலும் EEXI ஆல் தழுவப்படுகின்றன.

ஒவ்வொரு கப்பலுக்கும் மற்றும் கணிசமான மாற்றத்திற்கு உள்ளான ஒவ்வொரு கப்பலுக்கும், அடையப்பெற்ற சக்தி வினைத்திறன் பற்றிய நடைமுறையிலுள்ள கப்பல் சுட்டி (அடையப்பெற்ற EEXI) கணிப்பிடப்படுகின்றது (MARPOL இணைப்பு VI ஒழுங்குவிதி 23 அடையப்பெற்ற EEXI).

CSCL தொழில்நுட்பத் திணைக்களமானது IMO இன் மேற்கூறிய GHG குறைப்புத் தந்திரோபாயங்களை புரிந்துகொண்டுள்ளதுடன் இலங்கை அரசாங்கத்திற்கு சொந்தமான Panamax மொத்தச்சரக்குக் கப்பல்கள் இரண்டுடனும் ஒத்திசைவதற்கு அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பிரதான இயந்திரத்தின் தயாரிப்பாளர், MAN Energy Solutions நிறுவனம் ஆகும். இவ்வொழுங்குவிதியின் EEXI பெறுமதியால் பாதிக்கப்படும் ஒவ்வொரு கப்பலும் தனித்தனியாக கணிப்பிடப்பட வேண்டும். இப்பெறுபேறானது இவ்விரு கப்பல்கள் தொடர்பிலும் MAN primary Serve உடனும் CSCL உடனும் ஒருங்கிணைப்பு செய்வதன் மூலம் EEXI நியமங்களைப் பூர்த்திசெய்வதற்குப் பொருத்தமான சக்தி வரம்பை வழங்குகிறது.

முக்கிய நன்மைகள்

- AT2000 / AT3000 தொலைதூரக் கட்டுப்பாட்டு முறைமைகளில் இலகுவாக நிறுவுதல்
- பிரதான பாலத்திலிருந்து நேரடியாக இயக்கிக் கட்டுப்படுத்தக்கூடிய சக்தி வரம்பை (OPL) செயற்படுத்தியமை/இயக்கிக் கட்டுப்படுத்தியமை
- பதிவுகளை இயக்கிக் கட்டுப்படுத்தல் (Override logging)
- சிறந்த செயற்றிறனுக்காக உத்தமமாக்கப்பட்டமை (சேர்க்கை வளைவுகள் மதிப்பாய்வு செய்யப்பட்டு, உத்தமமாக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டது)

➢ உந்துவிசை உள்ளமைவில் குறைந்தபட்ச தேய்மானம் மற்றும் மிகக் குறைந்த சாத்தியமான எரிபொருள் எண்ணெய் நுகர்வு என்பவற்றுடன் முறைமை மட்ட OPL இற்கான நிலையான மற்றும் வினைத்திறனான உந்துவிசை கட்டுப்பாடு அமைப்பு

மேற்போந்தவற்றுக்கு மேலதிகமாக, மிகக் குறைந்த கந்தக எரிபொருள் எண்ணெய் (VLSFO) ஆனது IMO இன் கந்தக ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக 2020 ஜனவரி மாதம் முதல் எமது இயந்திரங்களால் (முக்கிய உந்துவிசை மற்றும் துணைக்கருவிகளுக்காக) நுகரப்பட்டுள்ளது.

தேவையான CII ஐ (காபன் செறிவுக் குறிகாட்டியை) அடைவதற்கு வியாபாரங்களுக்கு உதவுவதே SEEMP பகுதி III இன் குறிக்கோள் ஆகும். இந்த வருடாந்த தரப்படுத்தலைத் தொடர்புபடுத்துகின்ற தேவைப்படுத்தப்பட்ட கப்பல் குறித்தான ஆவணமாகவுள்ள SEEMP பகுதி III ஆனது CII ஐ அதிகரித்து, அதன்மூலம் தொடரும் மூன்று ஆண்டுகளில் கப்பலின் செயற்பாட்டு ஆற்றல்சக்தியை அதிகரிப்பதற்கான தந்திரோபாயத்தை சுட்டிக்காட்டுகிறது.

SEEMP பகுதி III என்பது மாறிவரும் செயற்றிறன் மற்றும் தேவையான அளவீடுகளை பிரதிபலிக்கும் வகையில் அடிக்கடி திருத்தப்பட்டு இற்றைப்படுத்தப்படுகின்ற ஒரு இயங்குநிலை ஆவணமாகும். 2023 ஜனவரி 1 ஆம் திகதியிலிருந்து, இணக்கப்பாட்டு உறுதிப்படுத்தலுடன் (CoC) சேர்த்து உரிய கப்பலில் இது செல்லுபடியானதாக்கப்பட்டு சேமிக்கப்பட வேண்டும்.



Year	Reduction from 2019 ref. (mid-point of C-rating band)
2023	5 %
2024	7 %
2025	9 %
2026	11 %
2027-2030	To be decided

IMO: தேவைப்படுத்தப்பட்ட IMO நடவடிக்கை காபன் செறிவுத் தரப்படுத்தல்கள்

CII ஆனது கணிப்பிடப்பட்டு, ஏதேனும் திருத்தக் காரணிகள் மற்றும் கடற்பயண மாற்றங்கள் உட்பட முன்னைய வருடத்திற்கான முழு DCS தரவுகளுடனும் சேர்த்து 2024 ஆண்டில் ஆரம்பிக்கும் தரவு சேகரிப்பு முறைமை (DCS) சரிபார்ப்பவருக்கு அறிக்கையிடப்பட வேண்டும். ஐந்து வருடங்களுக்கு கப்பலில் வைத்திருக்க வேண்டிய DCS இணக்கப்பாட்டுக் கூற்று (SoC) ஆனது அடையப்பெற்ற CII மற்றும் சுற்றாடல் தரப்படுத்தல் (A முதல் E வரை) ஆகியவற்றைக் குறிப்பிடும். SoC வெளியிடப்படுவதற்கு முன், SEEMP பகுதி III ஆனது ஒரு திருத்த நடவடிக்கைத் திட்டத்துடன் இற்றைப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் மூன்று தொடர்ச்சியான D தரப்படுத்தல்கள் அல்லது ஒரு E தரப்படுத்தல் உள்ளதாயின் உறுதிப்படுத்தப்பட வேண்டும். தேவையான CII ஏன் பூர்த்தி செய்யப்படவில்லை என்பதற்கான பகுப்பாய்வானது திருத்த நடவடிக்கைத் திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும். அது ஒரு புதிய அமுலாக்கத் தந்திரோபாயத்தையும் உள்ளடக்க வேண்டும்.

எமது கப்பல்களின் CII குறிகாட்டிக்கிணங்க, எம்வீ. சிலோன் பிறீஸ் மற்றும் எம்வீ. சிலோன் பிறின்செஸ் கப்பல்கள் C வகுதியில் உள்ளன. ஆதலால் எமது கப்பல்கள் அடுத்த 3 வருடங்களுக்கு CII பெறுமதிகளுடன் இணங்குகின்றன, ஆனால் கப்பல்களின் நுகர்வை விருத்திசெய்ய வேண்டியுள்ளது.

<u>சமூக நிலைத்துநிற்கும்தன்மை</u>

இன்று நாம் அனைவரும் நமது அன்றாட வாழ்வில் சாதாரணமாக எடுத்துக்கொள்ளும் பெரும்பாலான விடயங்களுக்கு கடலோடிகளையே சார்ந்திருக்கிறோம். ஒரு மில்லியனுக்கும் அதிகமான கடலோடிகள் உலகளாவிய கப்பற்றொகுதியை இயக்குகிறார்கள் - அவர்கள் பில்லியன் கணக்கான மக்களுக்கு வாழ்க்கையின் அத்தியாவசியப் பொருட்களையும் ஆடம்பரப் பொருட்களையும் கொண்டு வருகிறார்கள். கப்பல் போக்குவரத்து உலகிற்கு இன்றியமையாதது - ஆனால் கடலோடிகள் இல்லாமல் கப்பல் போக்குவரத்து இருக்காது. ஆதலால் இலங்கைப் பல்கலைக்கழகங்களின் 52 பயிலிளவல் உத்தியோகத்தர்களுக்கு ஒரே நேரத்தில் இரண்டு கப்பல்களிலும் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. சாதாரணமாக 21 கடலோடிகளானோர் (உத்தியோகத்தர்களும் ஏனைய கப்பற் பணியாளர் குழு உறுப்பினர்களும்) தமது குடும்பங்களின் சமூக நிலைத்துநிற்கும்தன்மையைப் பூர்த்தி செய்வதற்காக இலங்கை பொருளாதாரத்திற்கு ஐ.அ.டொலர் வருமானத்தைப் பங்களிப்புச் செய்தனர்.

IMO ஆனது அதன் கடல்சார்ந்த பெண்கள் நிகழ்ச்சித்திட்டத்திற்கூடாக, பெண்கள் தமது கடல்சார் நிறுவனங்களில் ஆண்களுடன் இணைந்து பயிற்சி பெறவும், கடல்சார் கைத்தொழிலுக்குத் தேவைப்படும் உயர் மட்ட ஆற்றலை அடைந்துகொள்ளவும் இயலுமாகும் வகையில் அதன் உறுப்பு நாடுகளை ஊக்குவிக்கின்றது. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் கடல்சார் துறையில் பெண்களுக்கு உயர்மட்ட தொழில்நுட்ப பயிற்சிக்கான அணுகலை எளிதாக்குவதன் மூலம் IMO ஆனது குறித்த பால்நிலை ஐக்கியத்திற்கூடாக பால்நிலை சமத்துவத்திற்கும் பெண்களின் வலுவூட்டலுக்கும் ஆதரவளிக்கின்றது. கடல்சார் நிர்வாகங்கள், துறைமுகங்கள் மற்றும் கடல்சார் பயிற்சி நிறுவனங்களில் தொழில் அபிவிருத்தி வாய்ப்புகளுக்கு பெண்கள் அடையாளம் காணப்பட்டு தெரிவுசெய்யப்படும் சூழலை உருவாக்குவதன் மூலமும், நாட்டிலுள்ள அனைத்து முன்னணி கடல்சார் கல்லூரிகளின் நெருங்கிய ஒத்துழைப்புடனும் CSCL ஆனது உலக அளவில் IMO வின் மேலே குறிப்பிடப்பட்ட எதிர்காலத் திட்டங்களை ஊக்குவித்து ஆதரவளிக்கின்றது. பால்நிலை சமத்துவமானது எமது அலுவலகத்தில் மட்டுமின்றி எமது கப்பல்களிலும் உறுதிப்படுத்தப்படுகின்றது அத்துடன் 2021 ஆம் ஆண்டில் இரு பெண் கடலோடிகளுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது. 6 மாதங்களாக கப்பலில் வெற்றிகரமாக அவர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

ஊ.சே.நி./ஊ.ந.பொ.நி (EPF/ETF) மற்றும் காப்புறுதிக் கொள்கை ஆவணங்களுக்கு சந்தாப்பணம் செலுத்துவதன் மூலமான நட்டஈடு அடங்கலாக கப்பற் பணியாளர் ஊதியங்களைச் செலுத்தும் போது, கப்பல்களில் சகல மருத்துவ மற்றும் ஏனைய சுகாதார வசதிகளை வழங்கியும் சர்வதேச தொழில் நிறுவன (ILO) ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியும் CSC ஆனது கைத்தொழில் நியமங்களைப் பூர்த்திசெய்வதற்கு முழுச் சிறப்பாகச் செயலாற்றியுள்ளது.

பாதுகாப்பை ஓர் அடிப்படை மனித உரிமையாக நாம் நோக்குகின்றோம், அத்துடன் மோசமான பணி நிலைமைகளானவை ஊழியர்களின் உற்பத்தித்திறன் மற்றும் பயனுறுதிவாய்ந்ததன்மை என்பவற்றில் மட்டுமின்றி அவர்களது குடும்பங்கள் மற்றும் சமூகங்களிலும் தாக்கத்தைக் கொண்டுள்ளன. எமது முதன்மையான முன்னுரிமைகளில் ஒன்று எமது ஆளணியின் பாதுகாப்பே ஆகும். எமது இரு கப்பல்களிலும் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கு ISM முறைமையை நாம் வெற்றிகரமாக அமுல்படுத்தியுள்ளோம்.

தொடர்பாடலானது கடலோடிகளின் சோர்வைக் குறைப்பதற்கு பிரதான தேவைப்பாடாகும் என்பதை புரிந்துகொண்டு, கப்பலிலுள்ள அனைத்து கடலோடிகளுக்கும் வைஃபை (Wi-Fi) வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

பொருளாதார நிலைத்துநிற்கும்தன்மை



மூலங்கள்: IHS, OECD, UN

கடல்சார் வர்த்தகமானது (உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) மற்றும் சனத்தொகையுடன் சேர்ந்து) தொடர்ந்து விரிவடையும்.

எமது இரு கப்பல்களும் உலகளவில் வர்த்தகத்தில் ஈடுபட்டு ஒரு நாளைக்கு சுமார் 20,000.00 ஐ.அ.டொலரை வாடகைக்கமர்த்தல் வாடகையாக சம்பாதிக்கின்றன. ஒவ்வோர் ஆண்டும் செப்டெம்பர் மாதத்திலிருந்து மார்ச் மாதத்தின் இறுதி வரை நிலக்கரியை எடுத்துச்செல்லும் நடவடிக்கைக்குப் பிறகு இந்தச் செயற்பாடு தொடர்ந்துவந்துள்ளது.

நாளாந்த செயற்பாட்டுச் செலவு (DOC) 2022 ஆம் 2023 ஆம் ஆண்டுகளில் ஒரு கப்பலுக்கு சுமார் 4,500.00 ஐ.அ.டொலராக பேணப்பட்டதுடன் 2023/2024 ஆம் ஆண்டில் ஒரு கப்பலுக்கு 5,000.00 ஐ.அ.டொலராக மதிப்பிடப்பட்டுள்ளது.

CSCL ஆனது கடலோடிகளால் உருவாக்கப்பட்ட வெளிநாட்டு வருமானத்தை மையப்படுத்தியது; ஆதலால் பயிற்றப்பட்ட பயிலிளவல்களில் சிலர் CSCL கப்பல்களுக்கு உள்ளீர்க்கப்பட்டனர், அதேவேளை மற்றவர்களுக்கு ஏனைய பல்வேறுபட்ட கப்பல் கம்பனிகளில் உயர் தரநிலை அதிகாரிகளாக பணியாற்ற வழிகாட்டப்பட்டது. அவர்கள் அனைவரும் ஆண்டுதோறும் நாட்டிற்கு கணிசமான அளவு அந்நிய செலாவணியை கொண்டுவந்து முனைப்புடன் கடல் சேவையில் ஈடுபட்டு வருகின்றனர். சொந்தக் குடும்பங்களின் சமூக மற்றும் பொருளாதார நிலையை உயர்த்துவதில் அவர்களின் ஈடுபாடானது, CSCL இனால் அமுல்படுத்தப்பட்ட பயிற்சி மற்றும் வர்த்தகக் கோட்பாட்டின் பயனாக, தேசத்தின் பொருளாதார சுபீட்சத்தின் மிகப்பெரும் விளைவை உருவாக்குகின்றது.

MLC மற்றும் இணக்கப்பாட்டு ஆவணம் (DOC) என்பவற்றுக்கூடாக, CSCL இன் வியாபார அபிவிருத்திப் பிரிவினால் வெளிநாட்டுக் கப்பல்களுக்கு இலங்கைக் கடலோடிகள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு வருகின்றனர்.

இன்று, CSCL ஆனது, CEPETCO உடன் இணைந்து Supramax தாங்கிக்கப்பலைக் கொள்வனவு செய்ததன் மூலம் உருவாக்கப்பட்ட வருமானப் பட்டியலை அதிகரித்துள்ளதுடன் சுரங்க அமைச்சிற்கு நிபுணத்துவப் பங்களிப்பை வழங்குவதன் மூலம் கனியமணலை ஏற்றுமதிசெய்ய எதிர்பார்க்கின்றது. எம்வீ. சிலோன் பிறீஸ் மற்றும் எம்வீ. சிலோன் பிறின்செஸ் கப்பல்கள் சார்பில் SEEMP iii உடன் இணக்கமுறும் பொருட்டு கப்பல்களின் எரிபொருள் நுகர்வைக் குறைப்பதன் மூலம்எரிபொருட்களைக் குறைக்க முடியும் என்பதுடன் இது ஒரு மிகப்பெரும் பொருளாதார நன்மையாகும்.

கணக்காய்வுக் குழு அறிக்கை

கணக்காய்வுக் குழுவின் உள்ளடக்க கட்டமைப்பு

இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தின் (CSC) பணிப்பாளர் சபையினால் கணக்காய்வுக் குழு நியமிக்கப்படுவதுடன் இச் சபைக்கு அது நேரடியாக அறிக்கையிடுகின்றது. இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வுக் குழுவானது நிதியாண்டின் போது சுயாதீன நிறைவேற்றுத்தரம் சாராத பணிப்பாளர்கள் மூவரை உள்ளடக்கியது:

திருமதி. எம்.ஜீ.என். பிரேமதிலக்க - தலைவர்

திரு. ஜீ.யு.கே. அல்கேவத்தகே - உறுப்பினர்

திரு. ஈமல் குணசேகர - உறுப்பினர்

கணக்காய்வுக் குழுவின் வகிபாகம்

இக் கம்பனியின் நிதி அலுவல்கள் சம்பந்தமான சகல விடயங்களையும் பரிசீலிப்பதற்கு இக் கணக்காய்வுக் குழுவிற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளதுடன் பணிப்பாளர் சபை அதன் கடமைகளை பயனுறுதி வாய்ந்த விதத்தில் ஆற்றுவதற்கு இக் குழு உதவுகின்றது. வெளிப்படுத்துகையின் தயாரிப்பு, முன்வைப்பு மற்றும் போதுமான தன்மை என்பவற்றை இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் (SLFRS/LKAS) இக் கணக்காய்வுக் குழு பரிசீலிப்பதுடன் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கும் அத்துடன் உரிய ஏனைய நிதி அறிக்கையிடல் தொடர்புபட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் தேவைப்பாடுகளுக்கும் இணங்க நிதி அறிக்கையிடல் தேவைப்பாடுகள் உள்ளனவா என்பது பற்றியும் பரிசீலிக்கின்றது.

சபையின் இறுதி அங்கீகாரத்திற்கு முன்னர் வருடாந்த நிதிக் கூற்றுக்களை இக் கணக்காய்வுக் குழு மீளாய்வுசெய்து பரிந்துரைத்தது.

இக் கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுக்களானவை இக் கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் பற்றிய நிலைப்பாட்டையும் அது தொடர்புபடும் காலப்பகுதிக்கான பெறுபேறுகளையும் துல்லியமாகப் பிரதிபலிக்கின்றன எனும் நியாயமான உறுதிப்பாடுகளை பெற்றுக்கொள்ளும் பொருட்டு இக் கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறைகளின் போதுமானதன்மை மற்றும் முறையான தொடர்ச்சியான தொழிற்பாடு என்பவற்றையும் இக் கணக்காய்வுக் குழு மீளாய்வுசெய்தது. தேவைப்படும் போது சுயாதீனமான உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்படுவதுடன், இக் கூட்டுத்தாபனத்திற்குள் உள்ளகக் கட்டுப்பாட்டுச் சுற்றாடலை மேலும் வலுப்படுத்தும் நோக்குடன் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் மீளாய்வு செய்யப்பட்டு முகாமையுடன் கலந்துரையாடப்பட்டுள்ளன. இக் கம்பனியின் பிரதான வியாபார மற்றும் கட்டுப்பாட்டு இடர்களையும் இக் கணக்காய்வுக் குழு மதிப்பீடு செய்தது.

கூட்டங்கள்

நான்கு கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் 2022/23 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்டன. பணிப்பாளர்களின் / உறுப்பினர்களின் கணக்காய்வுக் குழுக் கூட்ட வருகை பின்வருமாறு.

திருமதி. எம்.ஜீ.என். பிரேமதிலக்க (4/4)

திரு. ஜீ.யு.கே. அல்கேவத்தகே (1/4)

திரு. ஈமல் குணசேகர (2/4)

திருமதி. என்.ஏ.எச்.கே. விஜேரத்ன – அழைப்பின் பேரில் (4/4)

கூட்டமொன்றுக்கு சமுகமளிப்பதற்கு பணிப்பாளர்களுக்கு இயலாதிருப்பின் நிகழ்ச்சிநிரலிலுள்ள ஏதேனும் விடயங்கள் தொடர்பில் குழுத் தலைவருடன் கலந்துரையாடி காரணமொன்றுக்காக கோரிக்கையிடுவதற்கான சந்தர்ப்பத்தை அவர்கள் கொண்டுள்ளனர்.

தேசிய கணக்காய்வு அலுவலகத்திலிருந்தான பிரதிநிதி, வரிசை அமைச்சின் பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பொது முகாமையாளர், பிரதிப் பொது முகாமையாளர்கள், உதவிப் பொது முகாமையாளர்கள் மற்றும் பிரிவுத் தலைவர்கள் ஆகியோரும் இக் கணக்காய்வுக் குழுவின் அழைப்பின் பேரில் இக் கூட்டத்திற்கு சமுகமளித்தனர். இக் குழுவின் கூட்ட அழைப்பாளராக உள்ளகக் கணக்காய்வாளர் தொழிற்படுகின்றார்.

மீளாய்வுகள்:

சம்பந்தப்பட்ட ஆண்டு சார்பில் பின்வருவனவற்றை கணக்காய்வுக் குழு மீளாய்வு செய்தது.

1. **ஆண்டறிக்கைகள்: 2020/21 மற்றும் 2021/22:**

   பரிந்துரை:

   இக்கணக்காய்வுக் குழுவானது தரப்பட்ட கால அட்டவணைக்குள் ஆண்டறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு பரிந்துரைத்தது. ஆண்டறிக்கையை சமர்ப்பிக்கும் செய்முறையானது அமைச்சுக்கன்றி பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும் போதே நிறைவுறுகின்றது, எனவே ஆண்டறிக்கைகள் தொடர்பாக வெளியிடப்பட்ட புதிய அறிவுறுத்தல் குறித்து அறிந்திருக்குமாறு இக்குழுவுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

   2021/22 ஆம் ஆண்டறிக்கைச் செய்முறையை ஏப்பிறல் மாதத்தில் பூர்த்திசெய்ய வேண்டுமென்று குழு பரிந்துரைத்தது.

2. **Lanka Coal Company (LCC) நிறுவனத்திடமிருந்தான அறவீடுகள்:**

   பரிந்துரை:

   LCC நிறுவனத்திடமிருந்து தற்போதைய வருமதியையும் நிலுவையாகவுள்ள மிகவும் காலங்கடந்த தொகைகளையும் அறவிடும் செய்முறையைப் பின்பற்றுமாறு குழு பரிந்துரைத்தது. LCC சார்பாக ஒரு கொடுப்பனவுத் திட்டத்தைத் தயாரிக்குமாறும் அத்துடன் கடன் அறவீட்டு முன்னேற்றம் மற்றும் மீதமுள்ள நிலுவைகளின் கால முதிர்வுப் பகுப்பாய்வு என்பவற்றைச் சுட்டிக்காட்டும் அறிக்கையொன்றைத் தயாரிக்குமாறும் அது பரிந்துரைத்தது.

மேலும் இக்கொடுப்பனவுத் திட்டமானது வரிசை அமைச்சுகளுக்கூடாக LCC இற்கு அனுப்பப்பட வேண்டுமென்றும் கணக்காய்வுக் குழு அறிவுறுத்தியது.

நிலுவைத் தொகைகள் தொடர்பான பொழிப்பு அறிக்கையானது ஒரு குறிப்பாக சபைக் கூட்டத்திற்கு வழங்கப்பட வேண்டுமென்று இக்குழு பரிந்துரைத்தது.

சபையானது இதனை செயலாளருடன் கலந்துரையாடுவதற்கு உடன்பட்டதுடன், சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கூட்டத்தினை ஒழுங்குசெய்வதற்கென இவ்விடயங்களை (கால முதிர்வுப் பகுப்பாய்வு மற்றும் இக்கூட்டத்தில் எந்தெந்தத் தரப்பினர் உள்வாங்கப்படுகின்றனர் என்னும் விடயங்களுடன்) செயலாளருக்கு அனுப்புவதற்கும் சபைக் கூட்டத்தில் தீர்மானமெடுக்கும் பொருட்டு சபைக்கு இக்கோரிக்கையினை அனுப்புவதற்கும் கணக்காய்வுக் குழு தீர்மானித்தது.

3. தொழில்நுட்பப் பிரிவுக்கு கணனி அடிப்படையிலான கப்பல் முகாமைத்துவ மென்பொருள்

தொகுப்பு (Package):

பரிந்துரை:

இக் குழுவானது சபைக் கூட்டத்திற்கும் கணக்காய்வுக் குழுவுக்கும் முன்னேற்ற அறிக்கையினைச் சமர்ப்பிக்குமாறு பரிந்துரைத்தது. சேவை வழங்குநரிடம் எமது தேவைப்பாடுகளை விளக்குவதற்கு குழுவொன்றை நியமிக்குமாறு இக்குழுவுக்கு அறிவுறுத்தப்பட்டது.

4. வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை:

பரிந்துரை:

வணிக கப்பல் செயலகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் பதில் தாமதமடைந்தால், அடுத்து வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்காக தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் (NILS) போன்ற இன்னுமொரு நிறுவனத்திடமிருந்து உதவியைப் பெற்று இச்செய்முறையைத் துரிதப்படுத்துமாறு இக்குழு பரிந்துரைத்தது.

5. **சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட சொத்து அல்லாதது:**

பரிந்துரை:

குழு அறிக்கையை சபைக்கு முன்னளிக்குமாறு கணக்காய்வுக் குழு அறிவுறுத்தியது.

6. **பொருள் கணக்கெடுப்பு 2021/22, 2022/23:**

பரிந்துரை:

- கப்பல்கள் கொழும்பு துறைமுகத்திற்கு வரும் போது, கப்பல்களில் சொத்து சரிபார்ப்பை மேற்கொள்ளுமாறு குழு பரிந்துரைத்தது.
- அத்துடன், கப்பல் மீதான சொத்தின் பௌதிக இருப்பை உறுதிசெய்வதற்கு பொருத்தமான பொறிமுறையைப் பேணுமாறு கப்பல்களின் இரு தலைவர்களுக்கும் கோரிக்கை விடுத்தது அத்துடன் கப்பல் தலைவரினால் சான்றுப்படுத்தப்பட்ட அறிக்கையொன்றை பொருட் கணக்கெடுப்பு குழுவின் அறிக்கையுடன் இணைப்பதற்கு ஏதுவாக ஒவ்வொரு ஆண்டும் ஏப்பிறல் மாதம் 30 ஆம் திகதியன்றோ அதற்கு முன்னரோ சமர்ப்பிக்குமாறு கோரிக்கையும் விடுத்தது.

7. **கணக்காய்வு ஐயவினாக்களுக்கு முன்னரான கூட்டம்:**

பரிந்துரை:

அரசாங்க கணக்காய்வாளர்களுடன் கூட்டமொன்றை ஒழுங்குசெய்வதற்கான முன்கோரிக்கைகள் முறைசார்ந்து விடுக்கப்பட வேண்டும் என்றும், கணக்காய்வாளர்களுக்கான முறைசார்ந்த கடிதத்தில் பொது முகாமையாளர் (GM) அல்லது உதவிப் பொது முகாமையாளர் (நிதி) கையொப்பமிட்டால் சிறந்தது என்றும் பரிந்துரைக்கப்படுகின்றது.

8. **கணக்காய்வு ஐயவினாக்கள்:**

பரிந்துரை:

கணக்காய்வு ஐயவினாக்களுக்கு விடையளிப்பதற்கு கூடுதலான நேரத்தை நாம் எடுப்பதாயின் அத்தாமதம் பற்றி அரசாங்க கணக்காய்வுக்கு கடிதமொன்றை நாம் அனுப்ப வேண்டும் என்று குழு தெரிவித்தது.

9. **கப்பலை வாடகைக்கமர்த்தும் தரப்பினர்களால் செய்யப்படும் குறை/ மிகைக் கொடுப்பனவுகள்:**

பரிந்துரை:

ஈ) வருமான மூலங்களைக் கருத்திற்கொண்டு வருடாந்த செயல் திட்டத்தில் இலக்குகளையும் செயற்றிறன் குறிகாட்டிகளையும் அர்த்தமுள்ள விதத்தில் கம்பனி உருவாக்கியிருக்கவில்லை அத்துடன், அது மீளாய்வின் கீழான ஆண்டுக்காக அதன் இலக்குகளை உருவாக்குகையில், முன்னைய ஆண்டின் திட்டமிடப்பட்ட இலக்குகள் மீதும் கம்பனியின் எதிர்வுகூறல்களைச் செய்யும் போது உண்மையான நிலமை மீதும் கவனத்தைச் செலுத்தாமல் இலகுவாக அடையக்கூடிய இலக்குகளை அது தொடர்பான செயற்றிறன் மதிப்பீட்டுடன் சுட்டிக்காட்டி உருவாக்குவதை முன்னெடுத்திருந்தது. இதை விட, அத்தகைய வருமான மூலங்களை இனங்காணும் போது இவ்வாண்டின் போது பிறப்பிக்க முடியாத வருமான மூலங்களையும் செயல் திட்டத்தில் உள்ளடக்கியுள்ளது. அது தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

வருமான மூலம்	செயல் திட்டத்திற்கு அமைவாக		உண்மையான செயற்றிறன்		வருமான சதவீதம்
	வருமானம்	செலவினம்	வருமானம்	செலவினம்	(%)
நிலக்கரிப் போக்குவரத்து	3,128	2,675	-	-	
வாடகைக்கமர்த்தல் வருமானம்	2,293	816	5,337	1,893	133%
சரக்கு தொடர்பில் கப்பலை வாடகைக்கமர்த்துவோருக்கான தரகு	72	-	-	-	
சரக்கிறக்கல் தொடர்பில் கப்பலை வாடகைக்கமர்த்துவோருக்கான தரகு	472	-	314	-	-33%
நிலக்கரி வழங்கல் கப்பல்களுக்கான முகவராண்மைச் சேவைகளின் ஏற்பாடு	41		15		-63%
கொள்கலன்களில் பொதிகளைக் காவிச்செல்லல்	564	496	760	611	35%

சுங்கத்திலிருந்து சரக்குகளை அப்புறப்படுத்தல் மற்றும் அவற்றை விநியோகித்தல்	20	12	67	47	235%

உ) 415 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கிணங்க, கம்பனியானது இறக்குமதி சரக்குகளை அரசாங்கத்திற்கு மிகவும் சாதகமான முறையில் கொண்டுசெல்லத் தவறும் சூழ்நிலையில் மட்டுமே வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனமானது கையுதிர்ப்பு அறிவித்தலை வெளியிட வேண்டும். கம்பனியால் பிறப்பிக்கப்பட வேண்டிய சரக்கு வீதங்களானவை வழங்குநரால் இணங்கிக்கொள்ளப்பட்ட சரக்கு வீதங்களை விட அதிகமாக இருக்கும் போது, கம்பனியானது கையுதிர்ப்பு அறிவித்தல் ஒன்றின் மூலம் அவ்விடயம் பற்றி இறக்குமதியாளருக்கு அறிவிக்க வேண்டும் என்ற போதிலும், கப்பல் சரக்கனுப்பல்களின் பின்னர் செய்யப்பட்ட கையுதிர்ப்புக் கோரிக்கைகள், அவசர கொள்வனவுகள் மற்றும் CIF விகிதங்களின்படி கையளிக்கப்பட்டுவரும் பெறுகை போன்ற காரணங்களாலும் பிற காரணங்களாலும் 2019/20 ஆம் ஆண்டின் போது 319 ஆம் இலக்கங்கொண்ட, 2020/21 ஆம் ஆண்டின் போது 298 ஆம் இலக்கங்கொண்ட, 2021/22 ஆம் ஆண்டின் போது 185 ஆம் இலக்கங்கொண்ட மற்றும் 2022/23 ஆம் ஆண்டின் போது 118 ஆம் இலக்கங்கொண்ட சுற்றறிக்கைத் தேவைப்பாடுகளிலிருந்து விலகி கையுதிர்ப்பு அறிவித்தல்களை வெளியிடுவதுமுன்னெடுக்கப்பட்டிருந்தது.

ஊ) முழுமையாக அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனமாக, அரச துறையில் இறக்குமதிச் சரக்குகளை கொண்டுசெல்வதனூடாக அதன் இலாபத்தை அதிகரிக்கும் பொறுப்பும், அதேபோன்று சரக்கு வீதங்களின் போட்டியான முறைமையொன்றில் கம்பனியுடன் வெளிநாட்டு கப்பல் கம்பனிகளால் தந்திரமாக கையாளப்படும் அரச துறை இறக்குமதிகளைக்

கைப்பற்றும் பொறுப்பும் இக்கம்பனியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள போதிலும், கம்பனியின் சரக்குக் கொண்டுசெல்லல் வீதங்களானவை சரக்கு இறக்குமதி வர்த்தகத்தில் ஈடுபட்ட வழங்குநரின் சரக்கு வீதங்களை விட அதிகமாக இருந்த விடயத்தைக் கருத்திற்கொண்டு 174, 163, 150 மற்றும் 67 ஆம் இலக்கங்கள் கொண்ட கையுதிர்ப்பு அறிவித்தல்களானவை முறையே 2019/2020 ஆம் ஆண்டிலிருந்து 2022/23 ஆம் ஆண்டு வரையிலான 4 ஆண்டு காலப்பகுதியின் போது வெளியிடப்பட்டிருந்தன.

ஏ) வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் இராஜதந்திர உத்தியோகத்தர்களுக்கு சொந்தமான இறக்குமதி மற்றும் ஏற்றுமதி பயணப்பொதிகள் மற்றும் உடமைகளை கையாளுதல், பொதிசெய்தல், எடுத்துச்செல்லுதல் மற்றும் இசைவாக்கம் செய்தல் ஆகிய பணிகள் வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன அத்துடன், தொடர்புபட்ட சேவையை வழங்குபவராக இருக்கும் வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனமானது சம்பந்தப்பட்ட அத்தகைய விலை விகிதங்கள் தொடர்பில் தீர்மானங்களை எடுப்பதில் பொறுப்புடையதாக இருக்க வேண்டும் என்ற போதிலும், வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் பணிப்பாளர் நாயகத்தின் 2023 ஜனவரி 25 ஆம் திகதிய FA/OAM & D/HD/CSC/GEN ஆம் இலக்க கடிதத்திற்கிணங்க தொடர்புபட்ட விலைசார் கூறுவிலைகள் நிர்ணயிக்கப்படுவது வெளிச்சத்திற்கு வந்தது.

2.2.4 பின்வரும் அவதானிப்புகளுக்கானவற்றை விட, கம்பனியின் வளங்களானவை 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஏ) ஆம் பிரிவின் தேவைப்பாட்டிற்கு அமைவாக கால வரையறைக்குள்ளும் ஏற்புடைய சட்டங்களுடன் இணக்கமுற்றும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதி வாய்ந்ததாகவும் கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என உரைப்பதற்கும்.

(அ) 2020 நவம்பர் 10 ஆம் திகதியன்று, வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனமும் TERO MARINE ASIA PACIFIC PTE LTD நிறுவனமும் 6 வருட காலப்பகுதிக்கு கம்பனியின் கப்பல்களுக்கான கணனி அடிப்படையிலான கப்பல் முகாமைத்துவ முறைமையொன்றை நடைமுறைப்படுத்தும் நோக்கத்திற்காக 102,800 ஐ.அ.டொலருக்கான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டன. இந்த முறைமையானது முதலாவது வருடத்தில் 03 கட்டங்களாக அமுல்படுத்த திட்டமிடப்பட்டதுடன், முற்பணமாக 2,903,208 (15,400 ஐ.அ.டொலர்) ஐயும் முறைமை வடிவமைப்பை ஏற்றுக்கொண்டதற்காக 1,563,087 (7,700 ஐ.அ.டொலர்) ஐயும் மொத்தமாக 4,466,295 ரூபாவைச் செலவழித்து 02 கப்பல்களுக்கும் இம்முறைமை நிறுவப்பட்ட பின்னர் 3 வருட காலப்பகுதி கடந்த பின்னருங்கூட, இக்கணனி முறைமை தொழிற்படும் நிலையில் அமைக்கப்படவில்லை அத்துடன் அதுபற்றிய மீளாய்வினை மேற்கொண்ட பின்னர் கம்பனியின் எதிர்கால நடவடிக்கைகளுக்காக அது பயன்படுத்தப்படுமா இல்லையா என்பது குறித்து முகாமையின் தரப்பில் நடவடிக்கை எடுக்கத் தவறியதால் சம்பந்தப்பட்ட செலவினம் செயலற்ற செலவாக மாறியிருந்தது.

(ஆ) சர்வதேச வகைப்படுத்தல் சங்கங்களின் சம்மேளனத்தின் (International Federation of Classification Societies) உறுப்பினர் சங்கம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட செல்லுபடியாகும் கடற்பயணத் தகுதிச் சான்றிதழ் அல்லது வகைப்படுத்தல் சங்கச் சான்றிதழைச் சமர்ப்பிக்காத காரணத்தினாலும், புத்தளம் லக்விஜய மின்நிலையத்திற்கு நிலக்கரியைக் கொண்டுசெல்லும் கப்பல்களுக்கு பன்முக சேவைகளை வழங்கும் நோக்கத்திற்காக விலைமனுக்களைக் கோரிய பின்னர் தெரிவுசெய்யப்பட்ட இரு (02) படகு சேவைகள் தொடர்பில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைக்கிணங்க தொழில்நுட்ப மதிப்பீட்டில் குறிப்பிடத்தக்க துலங்கல் காணப்படாத காரணத்தினாலும், உரிய ஒப்பந்தத்தை வழங்குவதற்கு பரிந்துரைக்கப்பட்டிருக்கவில்லை.

மேலும், குறித்துரைக்கப்பட்ட கரையோர பணிநிலை உத்தியோகத்தரால் குறித்த படகுகளை பௌதிக ரீதியில் சரிபார்த்த போது, விலைமனுக் கோரலில் விதித்துரைக்கப்பட்ட தகுதிவிதிகளை இவ்விரு விலைமனுதாரர்களும் பூர்த்திசெய்திருக்கவில்லை என்பதும் 2014/15 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை இவ்விரு படகு வழங்குநர்கள் மாத்திரமே விலைமனுக்களை சமர்ப்பித்திருக்கும் சூழ்நிலை காணப்பட்டது என்பதும் அத்துடன் இவ்வழங்குநர்களில் வைக்கப்பட்ட சேவை நம்பிக்கையினை மாத்திரம் சார்ந்து அவசர சேவையினைக் கருத்திற்கொண்டு இரு விண்ணப்பதாரர்களினாலும் சமர்ப்பிக்கப்பட்ட விலைசார் கூறுவிலைகளில் 2022 செப்டம்பர் 21 ஆம் திகதியன்று இப்பெறுகை கையளிக்கப்பட்டிருந்தது என்பதும் உறுதிப்படுத்தப்பட்டது. 2023/24 ஆம் ஆண்டிலும், இந்த சேவைக்காக இந்த இரண்டு வழங்குநர்களுக்கும் இப்பெறுகை வழங்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பான விலைமனுத் தகுதிவிதிகளை பூர்த்திசெய்யாத காரணத்தால், அத்தகைய படகுகளில் பயணிக்கும் உத்தியோகத்தர்களின் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினை உள்ளது என்பதும், அத்துடன் இந்தக் குறைபாடுகளைக் கருத்திற்கொண்டு விபத்து ஏற்படும் பட்சத்தில் காப்புறுதி நன்மைகளை உரிமைக்கோரிக்கையிடும் இடர் காணப்படுகின்றது என்பதும் அவதானிக்கப்பட்டது.

2.3 ஏனைய விடயங்கள்

(அ) நிதி நிலைமைக் கூற்றுக்கிணங்க, 2023 மார்ச் 31 ஆம் திகதியிலுள்ளவாறு வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தினால் அறவிடத்தக்க வியாபாரக் கடன்பெறுநர்களின் பெறுமதி 2,070,761,878 ரூபாவாகும்.

அதில், 1,034,044,153 ரூபா கொண்ட மீதிகளானவை 4 வருடங்களுக்கும் மேலாக அறவிடப்படவில்லை என்பதுடன் அத்தகைய மீதிகளிலும் 257,530,960 ரூபா 1 முதல் 4 வருட காலப்பகுதிக்கு அறவிடப்படாமலிருக்கும் அதேவேளை

2022/2023 ஆம் ஆண்டின் போது எழுந்த வியாபாரக் கடன்படுநர்களின் பெறுமதி 779,186,765 ரூபாவாக இருந்தது. மேற்போந்த வியாபாரக் கடன்படுநர்களுக்கிடையில், உள்நாட்டு அரசாங்கம் மற்றும் பகுதியளவு அரசாங்க நிறுவனங்கள் என்பன 1,525,359,729 ரூபாவை கம்பனிக்கு செலுத்த வேண்டியிருந்தது, அதிலும், 618,045,453 ரூபாவானது 03 வருடங்களுக்கு மேற்பட்ட கடன்படுநர்களாக காணப்பட்டது என்பதும், 2023 மார்ச் 31 ஆம் திகதியிலுள்ளவாறு 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதிக்கு மேலாக வெளிநாட்டு மற்றும் ஏனைய வியாபாரக் கடன்படுநர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மீதி 163,752,420 ரூபாவாக இருந்தது என்பதும் வெளிப்படுத்தப்பட்டது.

(ஆ) விபத்தினைச் சந்தித்த எம்வீ சிலோன் பிறீஸ் கப்பல் தொடர்பில் பின்வரும் விடயங்கள் வெளிச்சத்திற்கு வந்தன:

i. 2020 ஆம் ஆண்டில் சீனாவின் ஜியாங்யின் துறைமுகத்தில் மீன்பிடிக் கப்பலுடன் எம்வீ சிலோன் பிறீஸ் கப்பல் மோதியதன் காரணமாக, கம்பனிக்கு உறப்பட்ட மொத்த நட்டம் அண்ணளவாக 16,999,188 ரூபாவாக இருந்தது. இந்தக் கப்பலின் காப்புறுதிக் காப்பீடு தொடர்பான உடன்படிக்கைக்கு ஏற்ப 100,000 ஐ.அ.டொலர் கொண்ட கழிபடக்கூடிய பெறுமதியானது மேற்போந்த நட்டப் பெறுமதியை விடக் குறைவாக இருந்தமையால் அத்தகைய நட்டத்தை கம்பனி தாங்க வேண்டியிருந்தது. மேலும், 2021 யூன் 06 ஆம் திகதியன்று சிங்கப்பூரில் லியோபோல்ட் என்ற கப்பலுடன் மீண்டும் ஒருதடவை இக்கப்பல் மோதிய சம்பவத்துடன் தொடர்புபட்ட நட்டமானது இவ்வறிக்கைத் திகதியிலுள்ளவாறுகூட கணிப்பிடப்பட்டிருக்கவில்லை.

ii. கப்பலுக்கு ஏற்பட்ட சேதம் குறித்து விசாரணை நடாத்தவும், அதற்குப் பொறுப்பான தொடர்புபட்ட தரப்பினரை அடையாளம் காணவும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதும், 2020 ஓகஸ்ட் 28 ஆம் திகதிய

01/2020 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கையின் 2.3 ஆம் பந்திக்கு அமைவாக அரசாங்க நிதித் திணைக்களத்திற்கு அது பற்றிய முழுமையான விபரங்களுடன்கூடிய அத்தகைய சேதம் பற்றிய அறிக்கையை கம்பனி அனுப்ப வேண்டுமென்ற போதிலும் அத்தகைய எந்த அறிக்கையும் இல்லை என்பதும் வெளிப்பட்டது.

(இ) 2021 செப்டெம்பர் 21 ஆம் திகதியன்று Lanka Coal (Private) Limited நிறுவனத்திற்கும் இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்திற்கும் இடையே எட்டப்பட்ட நிலக்கரி கொண்டுசெல்லல் உடன்படிக்கையின் 19 ஆம் பந்திக்கிணங்க, கம்பனிக்கு செலுத்தத்தக்க காலதாமதங்கள்/ நிறுத்தங்கள் தொடர்பான அனைத்து உரிமைக்கோரிக்கைகளும் சரக்கேற்றல் அல்லது விடுவிப்பு முடிந்த பின்னர் முப்பது (30) நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும் என்ற போதிலும், 2023 ஓகஸ்ட் 14 ஆம் திகதியளவில்கூட அத்தகைய உரிமைகோரிக்கைகளின் 2 விலைப்பட்டியல்கள் அடங்கிய 3,728,788 ரூபா பெறுமதியான தொகையை கம்பனியால் அறவிட முடியாமலிருந்தது.

டபிள்யு.பி.சி விக்ரமரத்ன, கணக்காய்வாளர் அதிபதி

வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்

முழுமொத்த வருமானக் கூற்று

மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது		2023	2022
	குறிப்புகள்	ரூபா.	ரூபா.
வருமானம்	4	6,649,456,322	7,876,816,356
நேரடி செயற்பாட்டுச் செலவினங்கள்		(3,253,912,278)	(5,706,572,098)
மொத்த இலாபம்		**3,395,544,044**	**2,170,244,258**
ஏனைய வருமானம்	5	835,579,200	471,548,197
நிர்வாகச் செலவினங்கள்	40	(246,344,628)	(263,944,537)
சொத்துக்களின் பெறுமதிக்குறைவிற்கு முன்னர் செயற்பாடுகளிலிருந்தான இலாபம்		3,984,778,616	2,377,847,918
சொத்துக்களின் பெறுமதிக்குறைவு		(84,096,715)	(177,070,299)
செயற்பாடுகளிலிருந்தான இலாபம்	6	3,900,681,901	2,200,777,619
நிதிச் செலவுகள்	7	(4,381,840,810)	(6,808,841,215)
இணை நிறுவனங்களின் இலாபப் பங்கு - (வரி கழித்த)	14.2	47,553,798	40,277,522
வரிக்கு முன்னரான இலாபம்/ (நட்டம்)		**(433,605,111)**	**(4,567,786,074)**
வருமான வரி வருமானம்/ (செலவுகள்)	8	(191,305,299)	-
வருமான வரிக்குப் பின் ஆண்டுக்கான இலாபம்/ (நட்டம்)		**(624,910,410)**	**(4,567,786,074)**
ஆண்டுக்கான பிற்போடப்பட்ட வரிச் சீராக்கம்	17	(1,232,219,356)	(1,197,593,218)
வருமான வரிக்கும் பிற்போடப்பட்ட வரிச் சீராக்கத்திற்கும் பின்னர் ஆண்டுக்கான இலாபம்/ (நட்டம்)		**(1,857,129,766)**	**(5,765,379,292)**
அடிப்படை மற்றும் கலப்பு பங்கொன்றுக்கான உழைப்பு	9	**(125)**	**(914)**
ஆண்டுக்கான இலாபம்/(நட்டம்)		(1,857,129,766)	(5,765,379,292)

ஏனைய முழுமொத்த வருமானம்			
விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதான நிதிச் சொத்துக்களின் நியாயப்பெறுமதி மாற்றங்கள் மீதான இலாபம்/(நட்டம்)	16.1	(7,989,951)	36,062,107
இடர் கணிப்பீடுசார் எடுகோள்களின் மாற்றங்களிலிருந்து எழுகின்ற இலாபம்/(நட்டம்)	29.1	2,179,262	7,581,992
காணி விற்பனை		(3,065,444)	-
காணி மறுமதிப்பீடு		241,863,000	-
இணை நிறுவனங்களின் ஏனைய முழுமொத்த வருமானப் பங்கு - (வரி கழித்த)	14.2	89,946,369	5,402,037
ஆண்டுக்கான மொத்த முழுமொத்த வருமானம்		**(1,534,196,530)**	**(5,716,333,156)**

கணக்கீட்டுக் கொள்கைகளும் 6 தொடக்கம் 40 வரையான பக்கங்களிலுள்ள குறிப்புகளும் நிதிக் கூற்றுக்களின் இன்றியமையாத பகுதியொன்றை உருவாக்குகின்றன.

வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்

நிதி நிலமைக் கூற்று

மார்ச் 31 இலுள்ளவாறு		**2023**	**2022**
	குறிப்புகள்	ரூபா.	ரூபா.
சொத்துக்கள்			
நடைமுறையல்லாச் சொத்துக்கள்			
ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்	10	9,290,839,316	8,868,252,162
மூலதன நடைபெறும் வேலை – கட்டடம்	10.1	315,610	-
மூலதன நடைபெறும் வேலை – கப்பல்களை கரையில் வைத்துப் பழுதுபார்க்கும் வேலை	11	-	119,621,698
அருவச் சொத்து	12	-	-
துணை நிறுவனத்திலுள்ள முதலீடு	13	-	-
இணை நிறுவனங்களிலுள்ள முதலீடு	14	569,950,345	432,803,300
விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ள நிதி சொத்துக்கள்	16	47,693,210	55,683,161
பிற்போடப்பட்ட வரிச் சொத்து	17	-	-
மொத்த நடைமுறையல்லாச் சொத்துக்கள்		**9,908,798,481**	**9,476,360,322**
நடைமுறைச் சொத்துக்கள்			
இருப்புகள்		470,903,927	310,846,104
வியாபார மற்றும் ஏனைய வருமதிகள்	18	951,582,262	1,472,984,001
நியதிச்சட்ட வருமதிகள்	19	8,486,749	8,481,465
முதிர்வுக்காக வைத்திருக்கப்படும் முதலீடுகள்	20	464,999,999	447,289,305
குறுங்கால முதலீடுகள்	21	26,268,205	25,533,587
காசும் காசுக்குச் சமமானவையும்	22	1,305,653,577	729,586,947
மொத்த நடைமுறைச் சொத்துக்கள்		**3,227,894,718**	**2,994,721,409**
மொத்த சொத்துக்கள்		**13,136,693,199**	**12,471,081,730**

உரிமைமுதலும் பொறுப்புக்களும்

உரிமைமுதல்

கூறப்பட்ட மூலதனம்	23	50,000,000	50,000,000
உரிமைமுதல் மூலதனத்திற்கு எதிரான பங்களிப்பு	24	543,939,497	543,939,497
மூலதன ஒதுக்கு	25	767,029,766	767,029,766
மறுபடிவிலைமதிப்பு ஒதுக்கு	26	241,863,000	3,065,444
விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ள நிதி சொத்துக்கள் ஒதுக்கு		42,213,018	50,202,969
நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புகள்		(10,855,139,608)	(9,328,463,864)
மொத்த உரிமைமுதல்		**(9,210,094,328)**	**(7,914,226,189)**

நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்

நீண்டகால கடன்பெறல்கள்	28	16,111,945,799	16,032,891,614
ஓய்வுபெறல் பயன் கடப்பாடு - பணிக்கொடை	29	29,348,420	35,244,807
பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு	17	2,237,360,024	1,005,140,668
மொத்த நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்		**18,378,654,242**	**17,073,277,089**

நடைமுறைப் பொறுப்புக்கள்

வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள்	30	1,792,767,053	1,555,707,720
குறுங்கால கடன்பெறல்	31	1,862,180,167	1,657,034,724
நியதிச்சட்ட சென்மதிகள்	32	266,576,020	70,699,752
அட்டுறு செலவினங்கள்	33	46,610,045	28,588,636
மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்		**3,968,133,284**	**3,312,030,830**
மொத்த உரிமைமுதலும் பொறுப்புக்களும்		**13,136,693,199**	**12,471,081,730**

கணக்கீட்டுக் கொள்கைகளும் 6 தொடக்கம் 40 வரையான பக்கங்களிலுள்ள குறிப்புகளும் நிதிக் கூற்றுக்களின் இன்றியமையாத பகுதியொன்றை உருவாக்குகின்றன.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணக்கமுற்று இந்நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

பதில் பொது முகாமையாளர் | உதவிப் பொது முகாமையாளர்- நிதி

இந்நிதிக் கூற்றுக்களை தயாரித்து முன்னளிப்பதற்கு பணிப்பாளர் சபை பொறுப்புடையது.

சபைக்காகவும் சபையின் சார்பிலும் அங்கீகரிக்கப்பட்டு ஒப்பமிடப்பட்டது.

பணிப்பாளர் | பணிப்பாளர்

வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்

உரிமைமுதல் மாற்றக் கூற்று

2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

	கூறப்பட்ட மூலதனம் ரூபா.	**உரிமைமுதல் மூலதனத்திற்கு எதிரான பங்களிப்பு ரூபா.**	**மூலதன ஒதுக்கு ரூபா.**	**மறுபடி விலைமதிப்பு ஒதுக்கு ரூபா.**	**விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ள நிதிச் சொத்துக்கள் ஒதுக்கு ரூபா.**	**நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புகள் ரூபா.**	**மொத்தம் ரூபா.**
2021 ஏப்பிறல் 1 ஆம் திகதியிலுள்ளவாறு மீதி	50,000,000	543,939,497	767,029,766	3,065,444	14,140,862	(3,419,789,063)	(2,041,613,494)
முன்னைய ஆண்டுச் சீராக்கம்						(156,279,539)	(156,279,539)
ஆண்டுக்கான இலாபம்	-	-	-	-	-	(5,765,379,292)	(5,765,379,292)
ஏனைய முழுமொத்த வருமானம்	-	-	-	-	36,062,107	12,984,029	49,046,136
2022 மார்ச் 31 ஆம் திகதியிலுள்ளவாறு மீதி	**50,000,000**	**543,939,497**	**767,029,766**	**3,065,444**	**50,202,969**	**(9,328,463,864)**	**(7,914,226,190)**
முன்னைய ஆண்டுச் சீராக்கம்						238,328,391	238,328,391
ஆண்டுக்கான நட்டம்	-	-	-	-	-	(1,857,129,766)	(1,857,129,766)
காணி விற்பனை				(3,065,444.00)			(3,065,444)
காணி மறுபடி விலைமதிப்பு				241,863,000.00			241,863,000
ஏனைய முழுமொத்த வருமானம்	-	-	-	-	(7,989,951)	92,125,631	84,135,680
2023 மார்ச் 31 ஆம் திகதியிலுள்ளவாறு மீதி	**50,000,000**	**543,939,497**	**767,029,766**	**241,863,000**	**42,213,018**	**(10,855,139,608)**	**(9,210,094,328)**

கணக்கீட்டுக் கொள்கைகளும் 6 தொடக்கம் 40 வரையான பக்கங்களிலுள்ள குறிப்புகளும் நிதிக் கூற்றுக்களின் இன்றியமையாத பகுதியொன்றை உருவாக்குகின்றன.

வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்

காசுப் பாய்ச்சற் கூற்று

மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது	**2023**	**2022**
	ரூபா.	**ரூபா.**
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
வரிக்கு முன்னரான இலாபம்/(நட்டம்)	(433,605,111)	(4,567,786,074)
செம்மையாக்கல்:		
பெறுமானத்தேய்வு	438,441,316	420,194,198
நிலையான சொத்துக்களின் விற்பனை மீதான இலாபம் / நட்டம்	-	-
பணிக்கொடைக்கான ஏற்பாடு	5,892,015	4,990,179
பங்கிலாப வருமானம்	(142,606)	-
இணை நிறுவனங்களின் இலாபப் பங்கு - (வரி கழித்த)	(47,553,798)	(40,277,522)
வியாபாரக் கடன்பட்டோரின் பெறுமதிக்குறைவிற்கான ஏற்பாடு	84,096,715	177,070,299
வருமான வரிக்கான ஏற்பாடு	(191,305,299)	
செலாவணி நட்டம்/ (இலாபம்)	1,580,013,648	5,626,477,113
முன்னைய ஆண்டுச் சீராக்கம்	(43,328,774)	(156,279,539)
அறவிடமுடியாக் கடனைப் பதிவழித்தல்	-	(15,013,046)
காப்புறுதி வருமதிக்கான ஏற்பாடு	-	(81,790,947)
வட்டி வருமானம்	(172,649,328)	(45,379,467)
வட்டிச் செலவு	1,569,949,481	727,535,758
தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான செயற்பாட்டு இலாபம்	**2,789,808,261**	**2,049,740,953**
இருப்புக்களில் (அதிகரிப்பு)/ குறைவு	(160,057,823)	(50,188,062)
வியாபார மற்றும் ஏனைய வருமதிகளில் (அதிகரிப்பு)/ குறைவு	521,401,740	(489,526,366)
வியாபார மற்றும் ஏனைய சென்மதிகளில் அதிகரிப்பு/(குறைவு)	237,059,333	723,729,212
நியதிச்சட்ட வருமதிகளில் (அதிகரிப்பு)/ குறைவு	(5,284)	2,124,686
நியதிச்சட்ட சென்மதிகளில் அதிகரிப்பு/(குறைவு)	195,876,268	(1,870,408)
அட்டுறு செலவினங்களில் அதிகரிப்பு/(குறைவு)	18,021,410	(620,131)
செயற்பாடுகளிலிருந்து பிறப்பிக்கப்பட்ட காசு	**3,602,103,905**	**2,233,389,884**

செலுத்தப்பட்ட பணிக்கொடை	(9,609,140)	(2,569,705)
செலுத்தப்பட்ட வட்டி	(736,111,518)	(689,860,773)
செலுத்தப்பட்ட வரிகள்	-	-
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு	**2,856,383,247**	**1,540,959,405**
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
நிலையான சொத்துக்களின் கொள்வனவு	(23,799,142)	(44,312,659)
கப்பல்களை கரையில் வைத்து பழுதுபார்க்கும் செலவுக்கான கொடுப்பனவுகள்	(319,252,224)	(119,621,698)
மூலதன நடைபெறும் வேலை – கட்டடங்கள்	(315,610)	-
நிலையான சொத்துக்களின் அகற்றலிலிருந்தான ஆதாயங்கள்	-	-
முதிர்வுக்காக வைத்திருக்கப்படும் நிதிச் சொத்துக்களிலிருந்தான தேறிய ஆதாயங்கள்/ (முதலீடுகள்)	(17,710,694)	(326,673,409)
குறுங்கால முதலீடுகளிலான தேறிய முதலீடு	(734,618)	(693,978)
பெற்றுக்கொள்ளப்பட்ட வட்டி	173,074,704	44,764,963
பெற்றுக்கொள்ளப்பட்ட பங்கிலாபம்	495,728	353,122
முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு	**(188,241,856)**	**(446,183,657)**
நிதி நடவடிக்கையிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
கப்பல் கடன் மீள்கொடுப்பனவு	(2,092,074,761)	(1,213,855,701)
நிதி நடவடிக்கையிலிருந்தான தேறிய காசு	**(2,092,074,761)**	**(1,213,855,701)**
காசும் காசுக்குச் சமமானவற்றிலும் தேறிய அதிகரிப்பு	**576,066,630**	**(119,079,953)**
ஆண்டுத் தொடக்கத்தில் காசும் காசுக்குச் சமமானவையும்	**729,586,947**	**848,666,900**
ஆண்டிறுதியில் காசும் காசுக்குச் சமமானவையும் குறிப்பு 22	**1,305,653,577**	**729,586,947**

கணக்கீட்டுக் கொள்கைகளும் 6 தொடக்கம் 40 வரையான பக்கங்களிலுள்ள குறிப்புகளும் நிதிக் கூற்றுக்களின் இன்றியமையாத பகுதியொன்றை உருவாக்குகின்றன.

2023 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கான கணக்கீட்டுக் கொள்கைகளும் நிதிக் கூற்றுக்களுக்கான விளக்கக் குறிப்புகளும்

1. பொதுவான தகவல்கள்

1.1 அமைவு மற்றும் சட்ட வடிவம்

இலங்கை கப்பற் கூட்டுத்தாபனமானது (CSC) 1971 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க இலங்கை கப்பற் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டதுடன் 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் 1992 ஆம் ஆண்டு யூன் மாதம் 01 ஆம் திகதியிலிருந்து (PBS/CGB) 121 எனும் பதிவு இலக்கத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டது.

வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனமானது (CSCL) 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க புதிய கம்பனிகள் சட்டத்தின் கீழ் 2008 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 ஆம் திகதியிலிருந்து PB227 எனும் பதிவு இலக்கத்தின் கீழ் மீள்பதிவுசெய்யப்பட்டதுடன் அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் மற்றும் இக்கம்பனியின் பிரதான வியாபார இடம் என்பன இல. 27, சேர் ராஷிக் பரீட் மாவத்தை, கொழும்பு 01 எனும் முகவரியிலுள்ள MICH கட்டடத்தில் அமைந்துள்ளன.

1.2 பிரதான செயற்பாடும் தொழிற்பாடுகளின் தன்மையும்

இவ்வாண்டின் போது, கப்பல் சரக்கனுப்பல், கப்பல்களை உடமையாக்குதல் மற்றும் கப்பல்களை வாடகைக்கமர்த்துதல், கப்பல் சாராமல் தொழிற்படும் பொதுச் சரக்கனுப்புநர் (NVOCC) மற்றும் சரக்குக் கையாள்கை தொடர்பான முகாமைத்துவ சேவைகளை வழங்குதலே இக்கம்பனியின் பிரதான செயற்பாடுகளாக இருந்தன.

மீளாய்வின் கீழான நிதியாண்டின் போது இக்கம்பனியின் பிரதான செயற்பாடுகளின் தன்மையில் குறிப்பிடத்தக்க மாற்றங்களும் எவையும் இல்லை.

1.3 ஊழியர்களின் எண்ணிக்கை

2023 மார்ச் 31 ஆம் திகதியிலுள்ளவாறு இக் கம்பனியின் மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 106 ஆகும் (2022 மார்ச் 31 – 117).

1.4 அறிக்கையிடல் திகதி

இக் கம்பனியின் நிதி அறிக்கையிடல் காலப்பகுதியானது மார்ச் 31 ஆம் திகதியன்று முடிவடைவதுடன் இணைக் கம்பனிகளின் நிதி அறிக்கையிடல் காலப்பகுதியானது டிசெம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைகின்றது. இக் கம்பனியின் அறிக்கையிடல் காலப்பகுதியின் முடிவிற்கும் இணைக் கம்பனிகளின் அறிக்கையிடல் காலப்பகுதியின் முடிவிற்கும் இடையில் நிகழும் குறிப்பிடத்தக்க கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் எவையேனுமிருப்பின் அவற்றை இக் கம்பனி சீராக்குகின்றது.

1.5 நிதிக் கூற்றுக்களின் அங்கீகாரம்

இந் நிதிக் கூற்றுக்கள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டதுடன் 2023 ஓகஸ்ட் 14 ஆம் திகதியன்று வெளியீட்டிற்காக அதிகாரமளிக்கப்பட்டன.

2. தயாரிப்பிற்கான அடிப்படை

2.1 இணக்கப்பாட்டுக் கூற்று

முழுமொத்த வருமானக் கூற்று, நிதி நிலமைக் கூற்று, உரிமைமுதல் மாற்றக்கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புகள் என்பவற்றை உள்ளடக்கும் இக்கம்பனியின் நிதிக் கூற்றானது இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் குறித்துரைக்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (SLFRSs மற்றும் LKASs) இணங்கவும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் இணக்கமுறும் விதத்திலும் தயாரிக்கப்பட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

2.2 அளவீட்டு அடிப்படை

நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டுள்ள விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ள நிதிச் சொத்துக்களாக குறித்தொதுக்கப்பட்ட விலைகூறப்பட்ட முதலீடுகள் மற்றும் காணியின் மறுபடி விலைமதிப்பு என்பவற்றுக்கானவற்றைத் தவிர இக் கம்பனியின் நிதிக் கூற்றுக்களானவை வரலாற்றுக் கிரய மரபொழுங்கின் கீழ் தயாரிக்கப்படுகின்றன. நிதிக் கூற்றுக்களைப் பாதிக்கும் பணவீக்க காரணிகளுக்காக சீராக்கங்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

2.3 ஒப்பீட்டு இலக்கங்கள்

முன்னைய காலப்பகுதி தொடர்பான ஒப்பீட்டுத் தகவல்களை நிதிக் கூற்றுக்கள் தருகின்றன. கணக்கீட்டுக் கொள்கையொன்றின் கடந்தகாலப் பிரயோகமொன்று, கடந்தகால மீள்கூற்றொன்று, அல்லது நிதிக் கூற்றுக்களில் உருப்படிகளின் மீள்வகைப்படுத்தலொன்று காணப்படும் போது முன்னைய காலப்பகுதியின் ஆரம்பத்தில் நிதி நிலமை பற்றிய மேலதிக கூற்றொன்றை இக்கம்பனி முன்வைக்கின்றது.

2.4 தொழிற்பாட்டு மற்றும் முன்வைப்பு நாணயம்

இக் கம்பனியின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட உருப்படிகளானவை, இக் கம்பனி தொழிற்படுகின்ற முதன்மையான பொருளாதாரச் சூழலின் நாணயத்தை (தொழிற்பாட்டு நாணயத்தை) பயன்படுத்தி அளவிடப்படுவதுடன் மிகக்கிட்டிய ரூபா பெறுமதிக்கு மட்டந்தட்டப்படுகின்றது.

இக் கம்பனியின் தொழிற்பாட்டு மற்றும் முன்வைப்பு நாணயமான இலங்கை ரூபாக்களில் (Rs.) இந்நிதிக் கூற்றுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

2.5 மதிப்பீடுகளையும் திறனாய்வுத் தீர்வுகளையும் பயன்படுத்தல்

SLFRSs மற்றும் LKASs என்பவற்றுடன் ஒத்திசைவாக நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பானது கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரயோகத்தையும் சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்கள் என்பவற்றின் அறிக்கையிடப்பட்ட தொகைகளையும் பாதிக்கும் திறனாய்வுத் தீர்வுகளையும், மதிப்பீடுகளையும் எடுகோள்களையும் முகாமை உருவாக்குவதைத் தேவைப்படுத்துகின்றது. இம் மதிப்பீடுகளிலிருந்து உண்மையான பெறுபேறுகள் வேறுபடலாம்.

மதிப்பீடுகளும் உட்கிடையான எடுகோள்களும் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றன. மதிப்பீடு திருத்தப்படும் காலப்பகுதியிலும் பாதிக்கப்படும் ஏதேனும் எதிர்கால காலப்பகுதிகளிலும் கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள் கண்டறியப்படுகின்றன.

2.6 பொருண்மை மற்றும் திரட்சி

ஒத்த விடயத்தின் ஒவ்வொரு பொருண்மையான வகுப்பும் நிதிக் கூற்றுக்களில் வெவ்வேறாக முன்வைக்கப்பட்டுள்ளன. மாறுபட்ட பண்பு அல்லது தொழிற்பாடொன்றைக் கொண்ட விடயங்களானவை பொருண்மையற்றதாக இருந்தாலொழிய வெவ்வேறாக முன்வைக்கப்பட்டுள்ளன.

2.7 தொடர்ந்துசெல்லும் எண்ணக்கரு

நிதிக் கூற்றுக்களானவை தொடர்ந்துசெல்லும் எண்ணக்கரு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்காக 1,857.12 மில்லியன் ரூபா (2022 மார்ச் 31 இல் 5,765.37 மில்லியன் ரூபா) தேறிய நட்டமொன்று கம்பனிக்கு உறப்பட்டுள்ளது. ஐந்தொகைத் திகதியிலுள்ளவாறு கம்பனியின் தேறிய சொத்துக்களின் பெறுமதியானது கம்பனியின் கூறப்பட்ட மூலதனத்தை (50 மில்லியன் இலங்கை ரூபா) விஞ்சியுள்ளதுடன் மூலதன நிலமையில் தீவிரமான நட்டமொன்று உள்ளது. அறிக்கையிடல் திகதியிலுள்ளவாறு கம்பனியின் தேறிய சொத்துக்களானவை 9,210,094,328 ரூபா கொண்ட (2021/2022 – 7,914,226,190 ரூபா எதிர்மறைப் பெறுமானம்) எதிர்மறைப் பெறுமானத்தைக் காட்டுகின்றன. மேற்போந்த நிதி விளைவுகளுக்கு பின்வருவன பிரதான காரணமாகும்;

- கப்பல் கடனுக்குச் செலுத்தப்பட்டுவரும் உயர்வான வட்டிக் கூறு
- முழுமொத்த வருமானக் கூற்றுக்குச் சாட்டுதல் செய்யப்பட்ட இரு கப்பல்களினதும் பெறுமானத் தேய்வு
- ஐக்கிய அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாவின் மதிப்பிறக்கம் காரணமாக முழுமொத்த வருமானக் கூற்றுக்குச் சாட்டுதல் செய்யப்பட்ட விசேட செலாவணி நட்டங்கள்
- 2016/17 ஆம் ஆண்டிலிருந்து 2022/23 ஆம் ஆண்டுவரை வரிக்குப் பின்னரான தேறிய நட்டங்கள் எழுகின்றமை.

  மேற்கூறப்பட்ட காரணிகளானவை தொடர்ந்துசெல்லும் எண்ணக்கருவாக தொடர்வதற்கான CSC இன் ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க நிச்சயமற்றதன்மையினை உருவாக்கலாம் என்ற போதிலும், தொடர்ந்துசெல்லும் எண்ணக்கருவாக தொடர்வதற்கான கம்பனியின் ஆற்றல் மூலம் கம்பனியானது பின்வரும் தணிப்புக் காரணிகளின் அடிப்படையில் வியாபாரத்தைக் கலைப்பதற்கோ முடிவுறுத்துவதற்கோ உத்தேசிக்கவில்லை.
- CSC ஆனது முழுமையாக அரசாங்கத்துக்கு உடமையான வியாபார நிறுவனமாகும் என்பதுடன் 71,910,464,32 ஐ.அ.டொலர் தொகையான கப்பல் கடன்களும் 2034 யூன் 03 ஆம் திகதிவரை தொடரும் திறைசேரி உத்தரவாதத்துடன் வழங்கப்பட்டுள்ளன.
- வங்கிக்குச் செலுத்த வேண்டிய கடன் மூலதனம் மற்றும் வட்டி தொடர்பில் இக்கம்பனி தவணை தவறவில்லை என்பதுடன் வட்டி மற்றும் மூலதன தவணைக் கொடுப்பனவுகள் நிலுவையாக உள்ள போது வங்கி அவற்றை முழுமையாகத் தொடர்ந்து பெற்றுக்கொண்டுள்ளது.

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

- பழைய கப்பல்களை மீள்சுழற்சிக்குப் பயன்படுத்துதல் மற்றும் புதிய கப்பல்களின் நிர்மாணிப்பைக் குறைத்தல் என்பன வழங்கல் மற்றும் கேள்வியின் சமநிலையற்ற தன்மையை வழமைக்குக் கொண்டுவரும் என்பதுடன், அது 2022/2023 ஆம் ஆண்டிலிருந்து கப்பற் சந்தையில் சாதகமான திருப்பத்தை விளைவித்துள்ளது.
- CSC ஆனது கப்பல்கள் பற்றிய நிபந்தனை அறிக்கையைப் பெற்றுக்கொண்டுள்ளது, அது "சிறந்த மற்றும் நன்கு பேணப்பட்ட நிலமையில், கப்பல்கள் பொதுவாக இருந்தன அத்துடன் சகல உபகரணங்களும் சிறந்த மற்றும் தொழிற்படக்கூடிய நிலமையில் காணப்பட்டன, சிறந்த நம்பகரமான பதிவுகளைக் காட்டியுள்ள, பிரசித்தமான மற்றும் நம்பகரமான ஐரோப்பிய உற்பத்தியாளர்களின் இயந்திரம் மற்றும் ஏனைய இயந்திர சாதனங்கள் கப்பல்களுக்கு அளிக்கப்படுவதால், சகல உபகரணங்களும் நன்கு தொழிற்படக்கூடிய நிலையில் காணப்பட்டன. 19 வருடங்கள் என்று எதிர்பார்க்கப்பட்ட தொழில்நுட்ப ஆயுட்காலத்தை இக்கப்பல்களால் எட்ட முடியும் என்று முடிவுசெய்யப்பட்டது" என்று குறிப்பிடுகின்றது. உயர் நியமத்துடன்கூடிய தொழில்நுட்ப வினைத்திறனுடன் இக்கம்பனியால் இக்கப்பல்கள் தொழில்நிபுணத்துவத்துடனும் வினைத்திறனாகவும் முகாமை செய்யப்பட்டுள்ளன என்பதையே இது குறிக்கின்றது. மேலும், இக்கப்பல்கள் எதிர்பார்க்கப்பட்ட ஆயுட்காலத்தைக் கொண்டிருக்கும் என்பதை இது குறிக்கின்றது.
- திறைசேரியின் கீழுள்ள இலங்கை மக்கள் வங்கி மற்றும் பிரதான பங்குதாரரான இலங்கை அரசாங்கத் தொழில்முயற்சித் திணைக்களம் இரண்டிற்கும் இடையில் காணப்படும் வலுவான உறவானது எந்தவொரு பிரச்சினைகளையும் சாதகமான முறையில் தீர்ப்பதற்கு உதவும் என்று நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்.
- இரு வருட காலத்திற்கு எம்.வீ. சிலோன் பிறீஸ் மற்றும் எம்.வீ. சிலோன் பிறின்செஸ் ஆகிய CSC இன் கப்பல்களை சர்வதேச வாடகைக்கமர்த்தல் நோக்கத்திற்காக CSC இற்கும் M/s Wallem Shipping (Singapore) Pte. Ltd. (Commercial) நிறுவனத்திற்கும் இடையில் வாணிப முகாமைத்துவ உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது. ஆதலால், கடன் தவணைக் கொடுப்பனவு நிலுவையாக உள்ள போது அதனைத் தீர்ப்பதற்கு காசுப் பாய்ச்சல் அனுமதிக்கும்.
- செயற்பாட்டு மற்றும் நிர்வாகச் செலவுகள் மீதான தொடர்ச்சியான கட்டுப்பாடானது CSC இற்கு சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.
- சந்தையில் தோன்றும் ஏதேனும் புதிய வாய்ப்புகளைக் கைப்பற்றும் நோக்குடன் கப்பல் கைத்தொழிலில் அபிவிருத்திகளை இக்கம்பனி தொடர்ந்து பின்பற்றும்.

3. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் வெளியிடப்பட்ட SLFRSs மற்றும் LKASs என்பவற்றுக்கு இணங்க இந்நிதிக் கூற்றுக்களானவை இக் கம்பனியினால் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பிரயோகிக்கப்பட்ட பிரதான கணக்கீட்டுக் கொள்கைகள் கீழே விதித்துரைக்கப்பட்டுள்ளன. இக் கொள்கைகளானவை வேறு வகையில் குறிப்பிடப்பட்டாலொழிய தரப்பட்டுள்ள சகல ஆண்டுகளுக்கும் தொடர்ச்சியாகப் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

3.1 அந்நியச் செலாவணி கொடுக்கல் வாங்கல்கள் / மாற்றம்

அந்நியச் செலாவணிகளிலான கொடுக்கல் வாங்கல்களானவை, கொடுக்கல் வாங்கல் திகதியில் நிலவும் அந்நியச் செலாவணி வீதத்தில் இலங்கை ரூபாக்களுக்கு மாற்றப்படுகின்றன. நிதி நிலமைக் கூற்றுத் திகதியில் வெளிநாட்டு நாணயங்களில் வெளிப்படுத்தப்படும் நாணயச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன அத் திகதியில் நிலவும் அந்நியச் செலாவணி வீதத்தில் இலங்கை ரூபாக்களுக்கு மாற்றப்படுகின்றன. மாற்றம் தொடர்பில் எழும் அந்நியச் செலாவணி வேறுபாடுகளானவை இலாபம் அல்லது நட்டத்தில் கண்டறியப்படுகின்றன. வரலாற்றுக் கிரயத்தில் குறிப்பிடப்படும், வெளிநாட்டு நாணயங்களில் வெளிப்படுத்தப்படும் நாணயம் சாரா சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன கொடுக்கல் வாங்கல் திகதியில் நிலவும் அந்நியச் செலாவணி வீதத்தில் இலங்கை ரூபாக்களுக்கு மாற்றப்படுகின்றன.

3.2 இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முழுமொத்த வருமானம் பற்றிய கூற்று

இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முழுமொத்த வருமானம் பற்றிய கூற்றை முன்வைக்கும் நோக்கத்திற்காக, செலவினத் தொழிற்பாட்டு முறையானது கம்பனிச் செயற்றிறன் கூறுகளை நியாயமாகப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற படியால், அம்முறை பின்பற்றப்படுகின்றது.

3.2.1 வருமானம்

கம்பனியின் வருமானமானது கடற்பயண வருமானம், சொந்தக் கப்பல்களிலிருந்தான சரக்கு வருமானம், சொந்தக் கப்பல்களிலிருந்தான வாடகைக்கமர்த்தல் வருமானம், நிலக்கரிக் கப்பல்களிலிருந்தான வாடகைக்கமர்த்தல் வருமானம், அப்புறப்படுத்தல் மற்றும் முன்னளித்தல் வருமானம் அத்துடன் முகவராண்மை மற்றும் கப்பலை வாடகைக்கமர்த்துவோருக்கான தரகு என்பவற்றை உள்ளடக்குகின்றது.

பொருட்கள் அல்லது சேவைகளை கைம்மாற்றுவதற்கு உரித்துள்ளதென கம்பனி எதிர்பார்க்கும் ஆதாயத்தைப் பிரதிபலிக்கின்ற ஒரு தொகையில் அந்தப் பொருட்கள் அல்லது சேவைகளின் கட்டுப்பாடு வாடிக்கையாளருக்கு மாற்றப்படும் போது வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம் கண்டறியப்படுகின்றது.

வருமான ஒப்பந்தங்களுக்கான கொடுக்கல்வாங்கல் விலையினை நிர்ணயிக்கையில், கம்பனியானது மாறக்கூடிய ஆதாய விளைவுகள், குறிப்பிடத்தக்க நிதிக் கூறுகளின் இருப்பு, காசல்லா ஆதாயம் மற்றும் வாடிக்கையாளருக்கான ஆதாயம் (ஏதுமிருப்பின்) என்பவற்றைக் கருத்திற்கொள்கின்றது.

நிறுவனங்களின் வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களுக்கு ஒவ்வொரு மாதிரிப் படிமுறையினையும் பிரயோகிக்கும் போது உரிய விடயங்கள் மற்றும் சூழ்நிலைகள் அனைத்தையும் கருத்திற்கொண்டு திறனாய்வுத் தீர்வை அவை பிரயோகிப்பதை SLFRS தேவைப்படுத்துகின்றது. ஒப்பந்தமொன்றைப் பெற்றுக்கொள்தல் பற்றிய அதிகரிப்புச் செலவுகள் மற்றும் ஒப்பந்தமொன்றை நிறைவேற்றுதலுடன் நேரடியாகத் தொடர்புபட்ட செலவுகள் என்பவற்றுக்கான கணக்கீட்டையும் இந்நியமம் குறித்துரைக்கின்றது.

வருமானம் கண்டறியப்படுவதற்கு முன்னர் பின்வரும் திட்டவட்டமான கண்டறிதல் தகுதிவிதிகளும் பூர்த்திசெய்யப்பட வேண்டும்.

(அ) கடற்பயண வருமானம்

சேவைகளை நிறைவுசெய்தலின் அடிப்படையில் சேவைகள் வழங்கப்படும் காலப்பகுதியில் சரக்கு கையாளல் மற்றும் போக்குவரத்துச் சேவைகளிலிருந்து எழும் வருமானமானது கண்டறியப்படுவதுடன் வழங்கப்பட்ட உண்மையான சேவைகளின் அடிப்படையிலும் வாடிக்கையாளருக்கு வாக்குறுதியளிக்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளை மாற்றுவதன் மூலம் செயற்றிறன் கடப்பாட்டை நிறுவனம் பூர்த்திசெய்யும் போதும் மதிப்பிடப்படுகின்றது.

(ஆ) வாடகைக்கமர்த்தல் வருமானம்

உடனடி வாடகைக்கமர்த்தல் ஒழுங்குகள்

கம்பனியின் உடனடி வாடகைக்கமர்த்தல் ஒழுங்குகள் என்பது பொதுவாக குறுகிய காலத்தைக் கொண்ட சரக்குப் போக்குவரத்துச் சேவைக்கான தனித்த கடற்பயணங்களுக்கானதாகும் என்பதுடன் கப்பல் எரிபொருள் அறை மற்றும் துறைமுக/ கால்வாய் கட்டணங்கள் அதேபோன்று பொதுக் கப்பல் தொழிற்படுத்தல் செலவுகள் என்பவற்றை உள்ளடக்கும், கடற்பயணத்தின் போது உறப்படும் சகல செலவுகளுக்கும் கம்பனி பொறுப்புடையதாகும். அதற்கிணங்க, உடனடி வாடகைக்கமர்த்தல் ஒழுங்குகளின் கீழ், வாடகைக்கமர்த்தல் காலப்பகுதியில் கப்பலின் பாவனையுடன் இணைந்த முக்கிய தொழிற்படுத்தல் தீர்மானங்கள் மற்றும் பொருளாதார நன்மைகள் என்பன கம்பனியையே சாரும்.

மாற்றப்படவுள்ள பொருட்கள் அல்லது சேவைகள் தொடர்பில் ஒவ்வொரு தரப்பினரதும் உரிமைகளை நிறுவனத்தினால் இனங்காண முடியும் அத்துடன் மாற்றப்படவுள்ள பொருட்கள் அல்லது சேவைகளுக்கான கொடுப்பனவு நியதிகளை நிறுவனத்தினால் இனங்காண முடியும் என்ற SLFRS 15 இற்கிணங்க கம்பனியானது வருமானம் கண்டறிதல் வழிகாட்டலை பிரயோகிக்கின்றது.

கம்பனியானது அதன் போக்குவரத்துச் சேவைகளுக்கு கைம்மாற்றாக பெற்றுக்கொள்வதற்கு உரித்துள்ளதென எதிர்பார்க்கும் ஆதாயமானது ஏற்றல் இறக்கல் அடிப்படையில் (அதாவது, துறைமுகத்தில் சரக்கு ஏற்றப்படும் நேரத்திலிருந்து கடற்பயணம் முடிந்த பின்னர் அது இறக்கப்படும் நேரம் வரை) கடற்பயணக் காலப்பகுதிக்கு விகிதாசாரமாக வருமானமாகக் கண்டறியப்படுகின்றது.

கால வாடகைக்கமர்த்தல் ஒழுங்குகள்

கம்பனியின் கால வாடகைக்கமர்த்தல் ஒழுங்குகள் என்பது திட்டவட்டமான காலப்பகுதியொன்றுக்கானதாகும் என்பதுடன் கால வாடகைக்கமர்த்தல் காலப்பகுதியின் போது கப்பலின் பயன்பாடு தொடர்பிலான முக்கிய தீர்மானங்கள் வாடகைக்கமர்த்துநரையே சாரும். கால வாடகைக்கமர்த்தல் ஒழுங்குகளில், கப்பலுக்கு பணியாளர்களை அமர்த்துதல், பராமரிப்பு மற்றும் காப்புறுதி என்பவற்றுக்கு கம்பனி பொறுப்புடையதாகும் என்பதுடன் கப்பல் எரிபொருள் அறைகள் மற்றும் துறைமுக/ கால்வாய் செலவுகளை வழக்கமாக உள்ளடக்கும், கடற்பயணம் குறித்தான செலவுகளுக்கு பொதுவாக வாடகைக்கமர்த்துநர் பொறுப்புடையவராவார்.
கடற்பயணங்களில் கப்பல் பயன்படுத்தப்படுவது எப்படி மற்றும் எப்போது என்பதை நிர்ணயிப்பதற்கான அதன் உரிமைகளில் போதுமானளவு சுதந்திரத்தை வாடகைக்கமர்த்துநர் கொண்டுள்ளதாலும் கடற்பயணத்தின் போது உறப்படும் செலவுகளுக்கும் வாடகைக்கமர்த்துநர் பொறுப்புடையதாலும், கப்பலின் பாவனை மீதான கட்டுப்பாடு குறித்துரைக்கப்பட்ட கால வாடகைக்கமர்த்தல் காலப்பகுதியின் போது வாடகைக்கமர்த்துநருக்கு மாற்றப்படுவதால் கப்பலின் பாவனையிலிருந்தான பொருளாதார நன்மைகளை வாடகைக்கமர்த்துநர் பெறுகின்றார். அதற்கிணங்க, கால வாடகைக்கமர்த்தலுக்கான வருமானமானது வாடகைக்கமர்த்தல் காலப்பகுதிக்கு விகிதாசாரமாக நேர்கோட்டு அடிப்படையில் கண்டறியப்படுகின்றது.

(இ) சரக்குக் கையாள்கை/ அப்புறப்படுத்தல் மற்றும் முன்னளித்தல் வருமானம்

பெயர்குறித்து நியமிக்கப்பட்ட இடம் வரையில் சரக்கு வழங்கல் திகதியை வேலை நிறைவுத் திகதியாக மொத்த சரக்குக் கையாள்கைத் தீர்வுக் கோட்பாட்டில் கருதப்படுகின்றது. வருமானமானது சேவைகளை நிறைவுசெய்வதன் பேரில் கண்டறியப்படுவதுடன் வழங்கப்பட்ட உண்மையான சேவைகளின் அடிப்படையிலும் வாடிக்கையாளருக்கு வாக்குறுதியளிக்கப்பட்ட பொருட்களை மாற்றுவதன் மூலம் செயற்றிறன் கடப்பாட்டை நிறுவனம் பூர்த்திசெய்யும் போதும் மதிப்பிடப்படுகின்றது.

(ஈ) முகவராண்மை மற்றும் கப்பலை வாடகைக்கமர்த்துவோருக்கான தரகு

சேவைகளை நிறைவுசெய்தலின் அடிப்படையில் சேவைகள் வழங்கப்படும் காலப்பகுதியில் வருமானமாக முகவராண்மைக் கட்டணம் கண்டறியப்படுகின்றது.

(உ) வட்டி

கடனழிவு செய்யப்பட்ட கிரயத்தில் அளவிடப்பட்ட அனைத்து நிதிக் கருவிகளுக்கும் விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதாக வகைப்படுத்தப்பட்ட வட்டியைத் தாங்கும் நிதிச் சொத்துக்களுக்கும், வட்டி வருமானம் அல்லது செலவினமானது பயனுறுதிவாய்ந்த வட்டி வீத (EIR) முறையினைப் பயன்படுத்தி பதிவுசெய்யப்படுகின்றது, அவ்வீதமானது நிதிக் கருவியின் எதிர்பார்க்கப்பட்ட ஆயுட்காலத்திற்கூடாக அல்லது பொருத்தமானவிடத்து குறுங்காலத்திற்கூடாக மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுக் கொடுப்பனவுகளை அல்லது பெறுவனவுகளை நிதிச் சொத்து அல்லது பொறுப்பின் தேறிய கொண்டுசெல்லல் தொகைக்கு துல்லியமாக கழிவிடுகின்றது. வட்டி வருமானமானது இலாப அல்லது நட்டக் கூற்றில் நிதி வருமானத்தில் உள்ளடக்கப்படுகின்றது.

(ஊ) இலாபங்களும் நட்டங்களும்

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் அத்துடன் முதலீடுகள் உள்ளடங்கலான ஏனைய நடைமுறையல்லாச் சொத்துக்கள் என்பவற்றின் விற்பனையிலிருந்து எழுகின்ற வருமான இயல்பொன்றின் தேறிய இலாபங்களும் நட்டங்களுமானவை, விற்பனையின் மீதான ஆதாயத்திலிருந்து அத்தகைய சொத்துக்களின் கொண்டு செல்லல் தொகையையும் தொடர்புபட்ட விற்பனைச் செலவுகளையும் கழித்ததன் பின்னர், இலாபம் அல்லது நட்டத்திற்காக கணக்கிடப்படுகின்றன.

(எ) ஏனைய வருமானம்

ஏனைய வருமானமானது அட்டுறு அடிப்படையில் கண்டறியப்படுகின்றது.

(ஏ) பங்கிலாப வருமானம்

கொடுப்பனவைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமை உண்டாகும் போது பங்கிலாப வருமானம் கண்டறியப்படுகின்றது.

3.2.2 செலவினம் கண்டறிதல்

வியாபாரத்தை நடாத்திச் செல்வதிலும் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றை வினைத்திறனான நிலமையில் பேணுவதிலும் உறப்படும் சகல செலவினங்களும் ஆண்டுக்கான இலாபத்தை அல்லது நட்டத்தை எட்டும் வருமானத்திற்கு சாட்டுதல் செய்யப்பட்டுள்ளன.

நிதிச் செலவுகள்

நிதிச் செலவானது பிரதானமாக கடன்பெறுகைகள் தொடர்பான வட்டிச் செலவுகளையும் கடன்பெறுகைகள் தொடர்பான செலாவணி நட்டங்களையும் உள்ளடக்குகின்றது. தகவுறு சொத்தொன்றின் கொள்ளல், நிர்மாணம் அல்லது உற்பத்திக்கு நேரடியாக சொந்தமில்லாத கடன்பெறுகைச் செலவுகளும் செலாவணி நட்டங்களும் பயனுறுதிவாய்ந்த வட்டி முறையினைப் பயன்படுத்தி இலாப அல்லது நட்டக் கூற்றில் கண்டறியப்படுகின்றன.

3.3 வருமான வரிச் செலவு

இக் காலப்பகுதிக்கான வரிச் செலவானது நிகழ்கால வரி மற்றும் பிற்போடப்பட்ட வரி என்பவற்றை உள்ளடக்குகின்றது. ஏனைய முழுமொத்த வருமானமாக கண்டறியப்படும் வருமான அல்லது செலவின வகையொன்றின் காரணமாக ஏற்படும் மாற்றமொன்றும் ஏனைய முழுமொத்த வருமானத்தில் நேரடியாக கண்டறியப்படும் என்பதைத் தவிர, வரியானது இலாபம் அல்லது நட்டத்தில் கண்டறியப்படுகின்றது.

(அ) நிகழ்கால வருமான வரிகள்

அறிக்கையிடல் திகதியில் சட்டமாக்கப்பட்ட அல்லது கணிசமானளவிற்கு சட்டமாக்கப்பட்ட வரி வீதங்கள் மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பில் செலுத்தத்தக்க வரிக்கான ஏதேனும் சீராக்கம் என்பவற்றைப் பயன்படுத்தி, ஆண்டுக்கான வரிவிதிக்கக்கூடிய வருமானம் மீது செலுத்தத்தக்க எதிர்பார்க்கப்படும் வரியே நிகழ்கால வரியாகும்.

2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் அதன் பின்னரான அதன் திருத்தங்கள் என்பவற்றுக்கு இணங்க இக் கம்பனியின் வரிப் பொறுப்பு கணிப்பிடப்பட்டுள்ளது.

(ஆ) பிற்போடப்பட்ட வரி

நிதிக் கூற்றுக்களில் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் கொண்டுசெல்லல் தொகைகளுக்கும் அவற்றின் ஒத்த வரி அடித்தளங்களுக்கும் இடையிலான வேறுபாடுகள் மீது பிற்போடப்பட்ட வரி கண்டறியப்படுகின்றது (தற்காலிக வேறுபாடுகளாக அறியப்படுவது).
எதிர்காலத்தில் வரிவிதிக்கக்கூடிய இலாபத்தை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் சகல தற்காலிக வேறுபாடுகளுக்காகவும் பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்கள் கண்டறியப்படுகின்றன. எதிர்காலத்தில் வரிவிதிக்கக்கூடிய இலாபத்தைக் குறைப்பதற்கு எதிர்பார்க்கப்படும் சகல தற்காலிக வேறுபாடுகளுக்காகவும் அத்துடன் ஏதேனும் பயன்படுத்தப்படாத வரி நட்டங்கள் அல்லது பயன்படுத்தப்படாத வரி ஆதாயங்களுக்காகவும் பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் கண்டறியப்படுகின்றன. நிகழ்கால அல்லது மதிப்பிடப்பட்ட எதிர்கால வரிவிதிக்கக்கூடிய இலாபத்தின் அடிப்படையில் , அறவிடப்படாதிருப்பதற்கு கூடுதல் சாத்தியப்பாடுடைய ஆகக்கூடிய தொகையில் பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் அளவிடப்படுகின்றன.

பிற்போடப்பட்ட வரியின் கொண்டுசெல்லல் தொகையானது ஒவ்வோர் அறிக்கையிடல் திகதியிலும் மீளாய்வு செய்யப்படுவதுடன் எதிர்கால வரிவிதிக்கக்கூடிய இலாபங்களின் நிகழ்கால மதிப்பீட்டைப் பிரதிபலிப்பதற்கு சீராக்கப்படுகின்றது. எவையேனும் சீராக்கங்களானவை இலாபம் அல்லது நட்டத்தில் கண்டறியப்படுகின்றன.

அறிக்கையிடல் காலப்பகுதியின் இறுதிக் காலமளவில் சட்டமாக்கப்பட்டுள்ள அல்லது கணிசமானளவிற்கு சட்டமாக்கப்பட்டுள்ள வரி வீதங்களின் அடிப்படையில் பிற்போடப்பட்ட வரிச் சொத்து காசாக்கப்படுவதற்கு அல்லது பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு தீர்க்கப்படுவதற்கு எதிர்பார்க்கும் ப்பகுதிகளின் வரிவிதிகாலக்கக்கூடிய இலாபத்திற்கு (வரி நட்டத்திற்கு) ஏற்புடையதாகவிருப்பதற்கு எதிர்பார்க்கப்படும் வரி வீதங்களில் பிற்போடப்பட்ட வரி கணிப்பிடப்படுகின்றது.

சொத்துக்களும் விலைமதிப்புக்கான அடிப்படைகளும்

நிதிநிலமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களாக வகைப்படுத்தப்படும் சொத்துக்களானவை காசும், அத்துடன் இக் கம்பனி வியாபாரத்தின் சாதாரண தொழிற்பாட்டு வட்டத்தின் போது அல்லது அறிக்கையிடல் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் என்பவற்றில் எது குறைவான காலப்பகுதியைக் கொண்டதோ அக்காலப்பகுதிக்குள் காசாக்கப்பட எதிர்பார்க்கப்படுபவைகளும் ஆகும். நடைமுறைச் சொத்துக்களை விட ஏனைய சொத்துக்களானவை, இக் கம்பனியானது நிதிநிலமைத் திகதியிலிருந்து ஒரு வருட காலப்பகுதிக்கு அப்பாற்பட்டு வைத்திருக்க உத்தேசிப்பவை ஆகும்.

3.4 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்

(அ) ஆரம்ப கண்டறிதலும் அளவீட்டு அடிப்படையும்

நிதிநிலமைக் கூற்றில் மறுமதிப்பீட்டுத் தொகையில் கொண்டு செல்லப்படும் காணி தவிர ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் திரண்ட பெறுமானத் தேய்வையும் திரண்ட பெறுமதிக்குறைவு நட்டங்களையும் கழித்த கிரயத்தில் குறிப்பிடப்படுகின்றன. சொத்தினை அமைவிடத்திற்கு கொண்டுவருவதற்கும் முகாமையினால் உத்தேசிக்கப்படும் விதத்தில் தொழிற்படும் ஆற்றலைக் கொண்டிருப்பதற்கு இதற்கு அவசியமான நிலமைக்கும் நேரடிக் காரணமான செலவினத்தை வரலாற்றுக் கிரயம் உள்ளடக்குகின்றது. சுயமாக நிர்மாணிக்கப்படும் சொத்துக்களின் கிரயமானது மூலப்பொருள் கிரயத்தையும் நேர்கூலியையும் உள்ளடக்குகின்றது.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றின் ஒரு வகையானது வெவ்வேறுபட்ட பயனுள்ள ஆயுட்காலங்களைக் கொண்டுள்ள பிரதான உபகூறுகளை உள்ளடக்கியிருக்குமாயின், ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றின் வெவ்வேறுபட்ட வகைகளாக அவை கணக்கிடப்படுகின்றன.

(ஆ) அடுத்துறும் செலவினம்

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றின் ஒரு வகையின் பாகங்களை பதிலீடு செய்வதற்கான கிரயமானது உறப்படும் போது, அப் பதிலீட்டு பாகமானது இக் கம்பனிக்கு அதிகரித்த எதிர்கால நலன்களை வழங்குமென எதிர்பார்க்கப்படின், அத்தகைய ஒரு வகையின் அக் கிரயத்தை, அத்தகைய வகையின் கொண்டு செல்லல் தொகையுடன் இக் கம்பனி சேர்க்கின்றது. பதிலீடு செய்யப்பட்ட பாகத்தின் கொண்டு செல்லல் தொகையானது கண்டறிதலிலிருந்து நீக்கப்படுகின்றது. ஏனைய சகல திருத்தங்களும் பராமரிப்பும் அவை உறப்படும் காலப்பகுதியின் போது இலாபம் அல்லது நட்டத்திற்குச் சாட்டுதல் செய்யப்படுகின்றன.

(இ) கண்டறிதலிலிருந்து நீக்குதல்

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றின் ஒரு வகையின் கொண்டுசெல்லல் தொகையானது அகற்றலில் அல்லது எந்தவொரு எதிர்கால பொருளாதார நன்மைகளும் அதன் பயன்பாட்டிலிருந்து எதிர்பார்க்கப்படாத போது கண்டறிதலிலிருந்து நீக்கப்படுகின்றது. கண்டறிதலிலிருந்து நீக்கம் தொடர்பான இலாபங்களும் நட்டங்களும் இலாபம் மற்றும் நட்டத்தில் கண்டறியப்படுவதுடன் இலாபங்கள் வருமானமாக வகைப்படுத்தப்படுவதில்லை.

(ஈ) பெறுமானத்தேய்வு

காணிக்கு பெறுமானத் தேய்விடப்படுவதில்லை. நேர்கோட்டு முறையினைப் பயன்படுத்தி, ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றின் ஏனைய வகைகளின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலங்களுக்கு சொத்துக்களின் எஞ்சிய பெறுமதியைக் கழித்து அவற்றின் கிரயத்தை குறித்தொதுக்கும் பொருட்டு இலாபம் அல்லது நட்டத்திற்கு பெறுமானத்தேய்வானது சாட்டுதல் செய்யப்படுகின்றது. சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலங்கள் பின்வருமாறு:

சொத்துக்கள்	**ஆண்டுகள்**
கட்டடங்கள்	20
கப்பல்கள்	25
மோட்டார் வாகனங்கள்	25
தளபாடமும் பொருத்துகளும்	10
அலுவலக உபகரணங்களும் கணனிகளும்	05

காலக்கிரமத்தில் கப்பல்களை கரையில்வைத்துப் பழுதுபார்க்கும் செலவானது மூலதனமாக்கப்பட்டு அடுத்த கப்பல்களை கரையில்வைத்துப் பழுதுபார்க்கும் திகதி வரையான காலப்பகுதிக்கு பெறுமானத் தேய்விடப்படுகின்றன. பெறுமானத்தேய்வுக் காலப்பகுதி முடிவதற்கு முன்பாக குறிப்பிடத்தக்க கரையில்வைத்துப் பழுதுபார்க்கும் செலவுகள் உறப்படும் போது, முன்னைய கரையில்வைத்துப் பழுதுபார்த்தல் தொடர்பான மீதமுள்ள செலவுகள் அடுத்துவரும் கரையில்வைத்துப் பழுதுபார்க்கும் மாதத்தில் பதிவழிக்கப்படுகின்றன.

கரையில்வைத்துப் பழுதுபார்த்தல் 5 வருடங்கள்

சொத்தொன்று பாவனைக்கு கிடைக்கக்கூடியதாகவுள்ள போது அதன் பெறுமானத் தேய்வானது ஆரம்பிப்பதுடன், அச்சொத்தானது விற்பனைக்கு வைத்திருக்கப்படுவதாக வகைப்படுத்தப்படும் திகதிக்கும் அச் சொத்து கண்டறிதலிலிருந்து நீக்கப்படும் திகதிக்கும் முன்னராக முடிவுறுகின்றது.

(உ) ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றின் பயனுள்ள ஆயுட்காலம்

கடந்த அறிக்கையிடல் திகதியிலிருந்து குறிப்பிடத்தக்க மாற்றமொன்று சுட்டிக்காட்டப்படுவதாக இருப்பின் சொத்துக்களின் எஞ்சியுள்ள பெறுமதிகள், பயனுள்ள ஆயுட்காலங்கள் மற்றும் பெறுமானத்தேய்வு முறைகள் என்பன மீளாய்வு செய்யப்படுவதுடன் பொருத்தமுடையதாகவிருப்பின் சாத்தியப்படும் விதத்தில் சீராக்கப்படுகின்றன, அத்துடன் LKAS 16 இன் 51 ஆம் பந்திக்கிணங்க இது சீராக்கப்பட்டுள்ளது. இப் பெறுமதிகள், வீதங்கள் மற்றும் முறைகளை மதிப்பிடுவதில் முகாமையின் திறனாய்வுத் தீர்வு பிரயோகிக்கப்படுகின்றது, ஆதலால் அவை நிச்சயமற்றதன்மைக்கு உட்பட்டவை ஆகும்.

அகற்றலின் பேரில், விற்கப்படும் உருப்படியின் தேறிய அகற்றல் ஆதாயத்திற்கும் கொண்டுசெல்லல் பெறுமதிக்கும் இடையிலான வேறுபாடானது இலாபம் அல்லது நட்டத்தில் கண்டறியப்படுவதுடன், ‘ஏனைய வருமானத்தில்’ அல்லது ‘ஏனைய செயற்பாட்டுச் செலவுகளில்’ உள்ளடக்கப்படுகின்றது.

(ஊ) கப்பல்களின் பெறுமதிக்குறைவு

நிறுவனத்தின் கப்பல்களின் கொண்டுசெல்லல் தொகைகளானவை ஒவ்வொரு வருடமும் பெறுமதிக்குறைவிற்காக சோதிக்கப்படுகின்றன.

கப்பலின் பயன்பாட்டிலுள்ள பெறுமதியை மதிப்பிடும் போது, நிறுவனமானது எதிர்கால வாடகைக்கமர்த்தல் வீதங்கள், கப்பல் தொழிற்பாட்டுச் செலவுகள், மற்றும் கப்பலின் மதிப்பிடப்பட்ட எஞ்சியுள்ள பயனுள்ள ஆயுட்காலம் மற்றும் எஞ்சியுள்ள பெறுமதிகள் என்பனவற்றைப் பற்றிய எடுகோள்களை உருவாக்கியுள்ளது. இந்த எடுகோள்களானவை வரலாற்று ரீதியான மற்றும் சுழற்சிமுறையான போக்குகள் அதேபோன்று எதிர்கால எதிர்பார்க்கைகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டவை. சாத்தியமான பெறுமதிக் குறைவினை மதிப்பிடுவதற்கு பயன்படுத்தப்பட்ட எடுகோள்கள் நியாயமாகவும் பொருத்தமானதாகவும் உள்ளன என்று முகாமை நம்புகின்றது, எனினும் அத்தகைய எடுகோள்கள் பெரிதும் தற்சார்புடையவையாகும்.

கப்பல்களின் விற்பனைக் கிரயப் பெறுமதியை கழித்து நியாயப் பெறுமதியை மதிப்பிடுகையில், 2023 மார்ச் 31 ஆம் திகதியிலுள்ளவாறு சந்தைப் பெறுமதியின் அடிப்படையில் தொழில்சார் விலைமதிப்பீட்டாளரிடமிருந்து சுயாதீன விலைமதிப்பொன்றை முகாமை பெற்றுக்கொண்டுள்ளது. கப்பல்களின்

பெறுமதியானது அறிக்கையிடல் திகதியிலுள்ளவாறு குறிப்பிடத்தக்களவிற்கு மாறியிருக்கவில்லை என்பது முகாமையின் அபிப்பிராயமாகும்.

3.5 அருவச் சொத்து

கொள்ளல் செய்யப்படும் கணனி மென்பொருளானது, குறித்த மென்பொருளையும் முறைமைகளையும் கொள்ளல் செய்வதற்கும் பயன்பாட்டிற்கு கொண்டுவருவதற்கும் உறப்படும் கிரயங்களின் அடிப்படையில் மூலதனமாக்கப்படுகின்றது. கொள்ளல் செய்யப்படும் அருவச் சொத்துக்களானவை திரண்ட கடனழிவையும் திரண்ட பெறுமதிக்குறைவு நட்டங்களையும் கழித்த கிரயத்தில் குறிப்பிடப்படுகின்றன. இக் கிரயங்களானவை அவற்றின் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலங்களின் மீது பின்வருமாறு கடனழிவு செய்யப்படுகின்றன:

கணனி மென்பொருள்	05 ஆண்டுகள்

கணனி மென்பொருளைப் பேணுவதுடன் இணைந்த கிரயங்களானவை உறப்படும் போது செலவொன்றாக கண்டறியப்படுகின்றன.

3.6 கடன்பெறல் கிரயங்கள்

தகவுறு சொத்தின் கிரயத்தின் பகுதியாக கடன்பெறல் கிரயங்கள் மூலதனமாக்கப்படுகின்றன சந்தர்ப்பமாகவுள்ள, அச்சொத்தின் கொள்ளல், நிர்மாணம் அல்லது உற்பத்தி காரணமாக நேரடியாக அக்கிரயங்கள் ஏற்படும் ஒரு வீச்சினைத் தவிர, அவை உறப்படும் காலப்பகுதியில் செலவொன்றாக அவை கண்டறியப்படுகின்றன.

3.7 காசும் காசுக்குச் சமமானவையும்

அறிந்த காசுத் தொகைகளாக இலகுவாக மாற்றக்கூடியதும் பெறுமதி மாற்றத்தில் முக்கியத்துவம் குறைந்த இடருக்கு உட்பட்டதுமான கையிலுள்ள காசு, கேள்வி வைப்புகள் மற்றும் மூன்று மாதங்களுக்குக் குறைவான குறுங்கால வைப்புகள் என்பனவே காசும் காசுக்குச் சமமானவையும் ஆகும்.

காசுப் பாய்ச்சற் கூற்று நோக்கத்திற்காக, கையிலுள்ள காசையும், அத்துடன் நிலுவையிலுள்ள வங்கி மேலதிகப்பற்றுக்களைக் கழித்து வங்கிகளிலுள்ள வைப்புகளையும் காசும் காசுக்குச் சமமானவையும் உள்ளடக்குகின்றது. கொள்ளல் திகதியிலிருந்து மூன்று மாதங்கள் அல்லது அதற்கும் குறைவான குறுங்கால முதிர்வுகளுடன்கூடிய முதலீடுகளும் காசுக்குச் சமமானவையாக கருதப்படுகின்றன.

3.8 நிதி சாராச் சொத்துக்களின் பெறுமதிக் குறைவு

ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும், நிதி சாராச் சொத்துக்களானவை பெறுமதிக்குறைவு நட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன என்னும் ஏதேனும் சுட்டிக்காட்டல் காணப்படுகின்றதா என்பதை நிர்ணயிக்கும் பொருட்டு அச் சொத்துக்கள் மீளாய்வு செய்கின்றன.

சாத்தியமான பெறுமதிக்குறைவு பற்றிய சுட்டிக்காட்டல் ஒன்று காணப்படுமாயின், ஏதேனும் பாதிக்கப்பட்ட சொத்தின் (அல்லது தொடர்புபட்ட சொத்துக்களின் தொகுதியின்) மீளப்பெற்றுக்கொள்ளக்கூடிய தொகையானது மதிப்பிடப்படுவதுடன் அதன் கொண்டுசெல்லல் தொகையுடன் ஒப்பிடப்படுகின்றது. மதிப்பிடப்பட்ட மீளப்பெற்றுக்கொள்ளக்கூடிய தொகையானது குறைவாக இருக்குமாயின், கொண்டுசெல்லல் தொகையானது அதன் மதிப்பிடப்பட்ட மீளப்பெற்றுக்கொள்ளக்கூடிய தொகைக்கு குறைக்கப்படுவதுடன், பெறுமதிக்குறைவு நட்டமானது இலாபம் அல்லது நட்டத்தில் உடனடியாகக் கண்டறியப்படுகின்றது.

ஒத்ததாக, ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும், இருப்பினது ஒவ்வொரு வகையினதும் (அல்லது ஒத்த வகைகளின் தொகுதியின்) கொண்டுசெல்லல் தொகையினை, பூர்த்தி செய்வதற்கும் விற்பதற்குமான கிரயங்கள் கழித்த அதன் விற்பனை விலையுடன் ஒப்பிடுவதன் மூலம் பெறுமதிக் குறைவிற்காக இருப்புகள் மதிப்பிடப்படுகின்றன. இருப்பினது ஒரு வகையானது (அல்லது ஒத்த வகைகளின் தொகுதியானது) பெறுமதி குறைவடையுமாயின், அதன் கொண்டுசெல்லல் தொகையானது, பூர்த்தி செய்வதற்கும் விற்பதற்குமான கிரயங்கள் கழித்த விற்பனை விலைக்கு குறைக்கப்படுவதுடன், பெறுமதிக்குறைவு நட்டமானது இலாபம் அல்லது நட்டத்தில் உடனடியாகக் கண்டறியப்படுகின்றது.

பெறுமதிக்குறைவு நட்டமொன்று பின்னர் மீள்திரும்பினால், சொத்தின் (அல்லது தொடர்புபட்ட சொத்துக்களின் தொகுதியின்) கொண்டுசெல்லல் தொகையானது அதன் மீளப்பெற்றுக்கொள்ளக்கூடிய தொகையின் (இருப்புகளாக இருக்கும் பட்சத்தில், பூர்த்தி செய்வதற்கும் விற்பதற்குமான கிரயங்கள் கழித்த விற்பனை விலை) திருத்தப்பட்ட மதிப்பீட்டிற்கு, ஆனால் முன்னைய ஆண்டுகளில் அச்சொத்திற்காக (அல்லது தொடர்புபட்ட சொத்துக்களின் தொகுதிக்காக) பெறுமதிக்குறைவு நட்டம் எதுவும் கண்டறியப்படாதிருந்திருந்தால் நிர்ணயிக்கப்பட்டிருந்திருக்கும் தொகையினை விஞ்சாமல், அதிகரிக்கப்படுகின்றது. பெறுமதிக்குறைவு நட்டமொன்றின் மீள்திரும்பலொன்று இலாபத்தில் அல்லது நட்டத்தில் உடனடியாகக் கண்டறியப்படுகின்றது.

3.9 இருப்புகள்

வழக்கொழிந்த மற்றும் குறைவான நகரும் வகைகளுக்கான உரிய ஒதுக்கீடுகளை மேற்கொண்டதன் பின்னர், இருப்புகளானவை கிரயம் மற்றும் தேறிய காசாக்கக்கூடிய பெறுமதி என்பவற்றில் குறைவான பெறுமதியில் மதிப்பிடப்படுகின்றன. இருப்புகளானவை நுகர்வுப் பொருட்களை உள்ளடக்குகின்றன.

இருப்புக்களை அவற்றின் தற்போதய அமைவிடத்திற்கும் நிலமைகளுக்கும் கொண்டுவருவதில் உறப்பட்ட கிரயமானது முதல் வந்தது முதல் வெளியே (FIFO) அடிப்படையில் கொள்வனவுக் கிரயத்தில் கணக்கிடப்படுகின்றது.

மதிப்பிடப்பட்ட பூர்த்தியாக்கல் கிரயம் மற்றும் விற்பனையை மேற்கொள்வதற்கு அவசியமான மதிப்பிடப்பட்ட கிரயம் என்பவற்றைக் கழித்து சாதாரண வியாபார நடவடிக்கையில் இருப்புக்களை விற்கக்கூடிய விலையே தேறிய காசாக்கக்கூடிய பெறுமதியாகும்.

3.10 நிதியியல் சாதனங்கள்

நிறுவனமொன்றின் நிதிச் சொத்தொன்றுக்கும் மற்றுமொரு நிறுவனமொன்றின் ஏதேனும் நிதிப் பொறுப்புக்கு அல்லது உரிமைமுதல் சாதனத்திற்கும் அதிகரிப்பைத் தருகின்ற ஏதேனுமொரு ஒப்பந்தமே நிதியியல் சாதனமாகும்.

3.10.1 நிதி சொத்துக்கள்

கடனழிவு செய்யப்பட்ட கிரயம், ஏனைய முழுமொத்த வருமானத்திற்கு (OCI) ஊடான நியாயப் பெறுமதி, மற்றும் இலாபம் அல்லது நட்டத்திற்கூடான நியாயப் பெறுமதி ஆகியவற்றில் பின்னர் அளவிடப்படுவதால் நிதிச் சொத்துக்கள் ஆரம்பக் கண்டறிதலில் வகைப்படுத்தப்படுகின்றன.

ஆரம்பக் கண்டறிதலில் நிதிச் சொத்துக்களை வகைப்படுத்தலானது நிதிச் சொத்துக்களின் ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல் பண்புகளிலும் அவற்றை முகாமிப்பதற்கான நிறுவனத்தின் வியாபார மாதிரியிலும் தங்கியுள்ளது. குறிப்பிடத்தக்க நிதிக் கூறொன்றை உள்ளடக்காத அல்லது நிறுவனம் நடைமுறைச் சாத்தியமான வழிமுறையை பிரயோகித்துள்ள வியாபார வருமதிகள் நீங்கலாக, நிறுவனமானது, நிதிச் சொத்தொன்று இலாபம் அல்லது நட்டத்திற்கூடான நியாயப் பெறுமதியில் காணப்படாத பட்சத்தில், கொடுக்கல்வாங்கல் செலவுகளைக் கூட்டி அதன் நியாயப் பெறுமதியில் நிதிச் சொத்தொன்றை ஆரம்பத்தில் அளவிடுகின்றது. குறிப்பிடத்தக்க நிதிக் கூறொன்றை உள்ளடக்காத அல்லது நிறுவனம் நடைமுறைச் சாத்தியமான வழிமுறையை பிரயோகித்துள்ள வியாபார வருமதிகளானவை SLFRS 15 இன் கீழ்

நிர்ணயிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல் விலையில் அளவிடப்படுகின்றன.

கடனழிவு செய்யப்பட்ட கிரயத்தில் அல்லது ஏனைய முழுமொத்த வருமானத்திற்கு (OCI) ஊடான நியாயப் பெறுமதியில் நிதிச்சொத்தொன்றை வகைப்படுத்தி அளவிடுவதற்கு, மூலதன நிலுவைத் தொகையில் 'மூலதனம் மற்றும் வட்டியின் தனித்த கொடுப்பனவுகளாக (SPPI)' உள்ள காசுப் பாய்ச்சல்களுக்கு அதிகரிப்பை தர வேண்டியுள்ளது.

இந்த மதிப்பீடானது SPPI சோதனையாக குறிப்பிடப்படுவதுடன் ஒரு சாதன மட்டத்தில் செயலாற்றப்படுகின்றது.

நிதிச் சொத்துகளை முகாமிப்பதற்கான கம்பனியின் வியாபார மாதிரியானது, காசுப் பாய்ச்சல்களை உருவாக்கும் பொருட்டு அதன் நிதிச் சொத்துகளை அது எவ்வாறு முகாமிக்கின்றது என்பதைக் குறிப்பிடுகின்றது. ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களை சேகரிப்பதிலிருந்தும், நிதிச் சொத்துகளை விற்பனை செய்வதிலிருந்தும் அல்லது இவ்விரண்டிலிருந்தும் காசுப் பாய்ச்சல்கள் விளையப்பெறுமா என்பதை இவ்வியாபார மாதிரி நிர்ணயிக்கின்றது.

சந்தை இடத்தில் ஒழுங்குவிதி அல்லது வழக்கமான நடவடிக்கை மூலம் உருவாக்கப்பட்ட கால அட்டவணை ஒன்றுக்குள் சொத்துகளின் வழங்கலைத் தேவைப்படுத்துகின்ற நிதிச் சொத்துகளின் கொள்வனவுகள் அல்லது விற்பனைகளானவை (ஒழுங்கு முறை வர்த்தகங்கள்) வர்த்தகத் திகதியில், அதாவது கம்பனி சொத்தினைக் கொள்வனவு செய்வதற்கு அல்லது விற்பதற்கு கடப்பாடுடைய திகதியில் கண்டறியப்படுகின்றன.

3.10.2 நிதி சொத்துக்களின் அடுத்துறும் அளவீடு

அடுத்துறும் அளவீட்டு நோக்கங்களுக்காக, நிதிச் சொத்துகளானவை நான்கு வகுதிகளில் வகைப்படுத்தப்படுகின்றன;

- கடனழிவு செய்யப்பட்ட கிரயத்தில் நிதிச் சொத்துகள் (கடன் சாதனங்கள்)
- திரண்ட இலாபங்கள் மற்றும் நட்டங்களின் மீள்சுழற்சியுடன் ஏனைய முழுமொத்த வருமானத்திற்கு (OCI) ஊடான நியாயப் பெறுமதியில் நிதிச் சொத்துகள் (கடன் சாதனங்கள்)
- கண்டறிதலிலிருந்து நீக்குதலின் பேரில் திரண்ட இலாபங்கள் மற்றும் நட்டங்களின் மீள்சுழற்சியின்றி ஏனைய முழுமொத்த வருமானத்திற்கு (OCI) ஊடான நியாயப் பெறுமதியில் குறித்துரைக்கப்பட்ட நிதிச் சொத்துகள் (உரிமைமுதல் சாதனங்கள்)
- இலாபம் அல்லது நட்டத்திற்கூடான நியாயப் பெறுமதியில் நிதிச் சொத்துகள்

கம்பனியின் நிதிச் சொத்துக்களில் பெரும்பாலானவை கடனழிவு செய்யப்பட்ட கிரயத்திலுள்ள நிதிச் சொத்துகளை (கடன் சாதனங்கள்) பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. SLFRS 9 ஐப் பின்பற்றுவதற்கு முன்னர், கடனழிவு செய்யப்பட்ட கிரயத்திலுள்ள நிதிச் சொத்துகளானவை கடன்களும் வருமதிகளுமாக வகைப்படுத்தப்பட்டன. பின்வரும் நிபந்தனைகள் இரண்டும் பூர்த்திசெய்யப்படின் கம்பனியானது கடனழிவு செய்யப்பட்ட கிரயத்தில் நிதிச் சொத்துகளை அளவிடுகின்றது:

- ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களை சேகரிக்கும் பொருட்டு நிதிச் சொத்துகளை வைத்திருக்கும் நோக்கத்துடன் வியாபார மாதிரியொன்றுக்குள் நிதிச் சொத்து வைத்திருக்கப்படல், அத்துடன்
- மூலதன நிலுவைத் தொகையில் மூலதனம் மற்றும் வட்டியின் தனித்த கொடுப்பனவுகளாக உள்ள காசுப் பாய்ச்சல்களுக்கு குறித்துரைக்கப்பட்ட திகதிகளில் நிதிச் சொத்துகளின் ஒப்பந்த நியதிகள் அதிகரிப்பை தருதல்.

கடனழிவு செய்யப்பட்ட கிரயத்திலுள்ள நிதிச் சொத்துகளானவை பின்னர் பயனுறுதி வாய்ந்த வட்டிவீத (EIR) முறையினைப் பயன்படுத்தி அளவிடப்படுவதுடன் பெறுமதிக் குறைவிற்கு உட்படுகின்றன. சொத்தானது கண்டறிதலிலிருந்து நீக்கப்படும் போது, மாற்றஞ்செய்யப்படும் போது அல்லது பெறுமதி குறைக்கப்படும் போது இலாபங்களும் நட்டங்களும் இலாபம் அல்லது நட்டத்தில் கண்டறியப்படுகின்றன.

நிறுவனத்தின் கடனழிவு செய்யப்பட்ட கிரயத்திலுள்ள நிதிச் சொத்துகளானவை காசும் காசுக்குச் சமமானவற்றையும், வியாபார மற்றும் ஏனைய வருமதிகளையும், ஏனைய நிதிச் சொத்துகளையும் உள்ளடக்குகின்றன. இலாபம் அல்லது நட்டத்திற்கூடான நியாயப் பெறுமதியிலான நிதிச் சொத்துகளானவை இலாபம் அல்லது நட்டக் கூற்றில் கண்டறியப்பட்ட நியாயப் பெறுமதியிலான தேறிய மாற்றங்களுடன்கூடிய நியாயப் பெறுமதியில் நிதி நிலமைக் கூற்றில் கொண்டுசெல்லப்படுகின்றன.

ஏனைய முழுமொத்த வருமானத்திற்கு (OCI) ஊடான நியாயப் பெறுமதியில் வகைப்படுத்துவதற்கு நிறுவனமானது மாற்றமுடியாதவாறு தெரிவுசெய்திருக்காத பட்டியற்படுத்தப்பட்ட உரிமை முதலீடுகளை இவ்வகுதி உள்ளடக்குகின்றது. பட்டியற்படுத்தப்பட்ட உரிமை முதலீடுகளின் பங்கிலாபங்களும், கொடுப்பனவு உரிமை உருவாக்கப்பட்டுள்ள போது இலாபம் அல்லது நட்டக் கூற்றில் ஏனைய வருமானமாக கண்டறியப்படுகின்றது.

3.10.3 கண்டறிதலிலிருந்து நீக்குதல்

ஒரு நிதிச் சொத்து (அல்லது, ஏற்புடையதானவிடத்து, நிதிச் சொத்தொன்றின் ஒரு பகுதி அல்லது ஒத்த நிதிச் சொத்துகளின் தொகுதியொன்றின் பகுதி) பின்வரும் நிலமையின் போது பிரதானமாகக் கண்டறிதலிலிருந்து நீக்கப்படுகின்றது (அதாவது, நிறுவனத்தின்

நிதி நிலமையிலிருந்து நீக்கப்படல்):

சொத்திலிருந்து காசுப் பாய்ச்சல்களைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமைகள் முடிவடைந்துள்ள போதுஅல்லது

சொத்திலிருந்து காசுப் பாய்ச்சல்களைப் பெற்றுக்கொள்வதற்கான அதன் உரிமைகளை கம்பனி மாற்றியுள்ள போது அல்லது ‘கடந்துசெல்லும் (pass-through)’ ஒழுங்கு ஒன்றின் கீழ் மூன்றாந்தரப்பொன்றுக்கு பொருண்மையான காலதாமதமின்றி, பெறப்பட்ட காசுப்பாய்ச்சல்களை முழுமையாக செலுத்துவதற்கான கடப்பாடொன்றைப் பொறுப்பேற்றுள்ள போது; அத்துடன் ஒன்றில்

(அ) கம்பனியானது சொத்தின் சகல இடர்களையும் வெகுமதிகளையும் கணிசமானளவிற்கு மாற்றியிருத்தல், அல்லது

(ஆ) கம்பனியானது சொத்தின் சகல இடர்களையும் வெகுமதிகளையும் கணிசமானளவிற்கு மாற்றாதிருத்தல் அல்லது தக்கவைத்திருக்காதிருத்தல், ஆனால் சொத்தின் கட்டுப்பாட்டை மாற்றியிருத்தல்.

சொத்திலிருந்து காசுப் பாய்ச்சல்களைப் பெற்றுக்கொள்வதற்கான அதன் உரிமைகளை கம்பனி மாற்றியுள்ள போது அல்லது கடந்துசெல்லும் (pass-through) ஒழுங்கு ஒன்றில் கைச்சாத்திட்டுள்ள போது, உரிமைத்துவத்தின் இடர்களையும் வெகுமதிகளையும் இது தக்கவைத்துள்ளதா அத்துடன் எந்தளவிற்கு என்பதை இது மதிப்பிடுகின்றது. சொத்தின் சகல இடர்களையும் வெகுமதிகளையும் கணிசமானளவிற்கு இது மாற்றியிராத அல்லது தக்கவைத்திராத போது அல்லது சொத்தின் கட்டுப்பாட்டை மாற்றியிராத போது, மாற்றப்பட்ட சொத்தினை அதன் தொடர்ச்சியான உள்வாங்கல் அளவிற்கு கம்பனி தொடர்ந்து கண்டறிகின்றது. அச்சந்தர்ப்பத்தில், இணைந்த பொறுப்பொன்றையும் கம்பனி கண்டறிகின்றது. கம்பனி தக்கவைத்துள்ள உரிமைகளையும் கடப்பாடுகளையும் பிரதிபலிக்கின்ற ஓர் அடிப்படையில் மாற்றப்பட்ட சொத்தும் இணைந்த பொறுப்பும் அளவிடப்படுகின்றன.

மாற்றப்பட்ட சொத்தின் மீதான உத்தரவாதமொன்றின் வடிவத்தை எடுக்கின்ற தொடர்ச்சியான உள்வாங்கலானது சொத்தின் ஆரம்ப கொண்டுசெல்லல் தொகை மற்றும் மீளச்செலுத்துமாறு கம்பனியை கோரக்கூடிய ஆதாயத்தின் உச்சபட்ச தொகை என்பவற்றில் குறைவாகவுள்ள தொகையில் அளவிடப்படுகின்றது.

3.10.4 நிதிச் சொத்துக்களின் பெறுமதிக் குறைவு

இலாபம் அல்லது நட்டத்திற்கூடான நியாயப் பெறுமதியில் வைக்கப்படாத சகல கடன் சாதனங்களுக்கும் எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்டங்களுக்கான (ECLs) படியொன்றை நிறுவனம் கண்டறிகின்றது. ஒப்பந்தத்திற்கிணங்க ஒப்பந்தக் காசுப்பாய்ச்சல் நிலுவைக்கும் ஆரம்ப பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தின் அண்ணளவான பெறுமதியில் கழிவிடப்பட்ட நிறுவனம் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் சகல காசுப்பாய்ச்சல்களுக்கும் இடையிலான வேறுபாட்டினை எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்டங்கள் (ECLs) அடிப்படையாகக் கொண்டுள்ளன.

எதிர்பார்க்கப்பட்ட காசுப்பாய்ச்சல்களானவை வைக்கப்பட்ட பிணையத்தின் விற்பனையிலிருந்து அல்லது ஒப்பந்த நியதிகளுக்கு இன்றியமையாத ஏனைய கடன் முன்னேற்றங்களிலிருந்து கிடைக்கும் காசுப்பாய்ச்சல்களை உள்ளடக்குகின்றன.

எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்டங்கள் (ECLs) இரு கட்டங்களில் கண்டறியப்படுகின்றன. ஆரம்பக் கண்டறிதலிலிருந்து கடன் இடரில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காணப்படாத கடன் வெளிக்காட்டல்களுக்காக, அடுத்த 12 மாதங்களுக்குள் (12 மாத ECL) சாத்தியமாகவுள்ள தவணை தவறும் நிகழ்வுகளிலிருந்து விளையப்பெறும் கடன் நட்டங்களுக்காக ECLs வழங்கப்படுகின்றன. ஆரம்பக் கண்டறிதலிலிருந்து கடன் இடரில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காணப்பட்டுள்ள அந்தக் கடன் வெளிக்காட்டல்களுக்காக, தவணை தவறும் காலத்தைப் பொருட்படுத்தாமல், வெளிக்காட்டலின் எஞ்சிய ஆயுட்காலத்திற்கு எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்டங்களுக்காக (ஆயுட்கால ECL ஒன்று) கடன் படியொன்று தேவைப்படுத்தப்படுகின்றது.

வியாபார வருமதிகளுக்காக, பெறுமதிக் குறைவிற்கான தேவைப்பாடானது சகல வாடிக்கையாளர்களுக்கும் தனித்தனியான அடிப்படையில் ஒவ்வோர் அறிக்கையிடல் திகதியிலும் பகுப்பாய்வு செய்யப்படுகின்றது. தனித்தனியான முக்கியத்துவமுடைய வாடிக்கையாளர்கள் அனைவரும் திட்டவட்டமான பெறுமதிக் குறைவிற்காக மதிப்பிடப்படுகின்றனர். திட்டவட்டமாக பெறுமதி குறைக்கப்படாமல் உள்ளவர்கள், உறப்பட்டுள்ள ஆனால் இதுவரை இனங்காணப்படாத ஏதேனும் பெறுமதிக் குறைவிற்காக பின்னர் கூட்டாக மதிப்பிடப்படுகின்றனர். தனித்தனியாக முக்கியத்துவமற்ற சொத்துகளானவை ஒத்த இடர்ப் பண்புகளுடன்கூடிய சொத்துக்களுடன் சேர்த்து தொகுதிகளாக்கி பெறுமதிக் குறைவிற்காக கூட்டாக மதிப்பிடப்படுகின்றன.

3.10.5 நிதிப் பொறுப்புகள்

(அ) ஆரம்பக் கண்டறிதலும் அளவீடும்

இலாபம் அல்லது நட்டத்திற்கூடான நியாயப் பெறுமதியில் நிதிப் பொறுப்புகளாகவும், கடன்கள் மற்றும் கடன்பெறுகைகள், சென்மதிகளாகவும், அல்லது பொருத்தமுடையதாக பயனுறுதி வாய்ந்த நிதிப் பாதுகாப்பு ஒன்றில் நிதிப் பாதுகாப்பு சாதனங்களாக குறித்துரைக்கப்பட்ட பெறுதிகளாகவும் ஆரம்பக் கண்டறிதலில் நிதிப் பொறுப்புகள் வகைப்படுத்தப்படுகின்றன.

சகல நிதிப் பொறுப்புகளும் ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் கண்டறியப்படுவதுடன், கடன்கள் மற்றும் கடன்பெறுகைகள் மற்றும் சென்மதிகள் எனும் போது, நேரடிக் காரணமான கொடுக்கல் வாங்கல் செலவுகள் கழித்து கண்டறியப்படுகின்றன.

வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள், வட்டியைத் தாங்கும் கடன்கள் மற்றும் வங்கி மேலதிகப்பற்றுகள் உள்ளடங்கலான கடன்பெறுகைகள் என்பவற்றை கம்பனியின் நிதிப் பொறுப்புகள் உள்ளடக்குகின்றன.

கம்பனியானது இலாபம் மற்றும் நட்டத்திற்கூடான நியாயப் பெறுமதியில் நிதிப் பொறுப்புகளையும் பெறுதியாகவுள்ள நிதிச் சாதனங்களையும் கொண்டிருப்பதில்லை.

(ஆ) கடன்களும் கடன்பெறுகைகளும்

கம்பனிக்கு மிகப் பொருத்தமான வகுதி இதுவாகும். ஆரம்பக் கண்டறிதலின் பின்னர், வட்டியைத் தாங்கும் கடன்கள் மற்றும் கடன்பெறுகைகள் என்பன EIR முறையினைப் பயன்படுத்தி கடனழிவு செய்யப்பட்ட கிரயத்தில் பின்னர் அளவிடப்படுகின்றன. பொறுப்புகள் கண்டறிதலிலிருந்து நீக்கப்படும் போதும் அதேபோன்று EIR கடனழிவுச் செய்முறைக்கூடாகவும் இலாபம் அல்லது நட்டத்தில் இலாபங்களும் நட்டங்களும் கண்டறியப்படுகின்றன.

கொள்ளல் மீதான ஏதேனும் கழிவு அல்லது வட்டத்தையும் மற்றும் EIR இன் இன்றியமையாத பகுதியொன்றாகவுள்ள கட்டணங்கள் அல்லது செலவுகளையும் கவனத்திற்கொண்டு கடனழிவுக் கிரயம் கணிப்பீடு செய்யப்படுகின்றது. முழுமொத்த வருமானக் கூற்றில் நிதிச் செலவுகளாக EIR கடனழிவு உள்ளடக்கப்படுகின்றது. வட்டியைத் தாங்கும் கடன்கள் மற்றும் கடன்பெறுகைகள் என்பவற்றுக்கு இவ்வகுதி பொதுவாக ஏற்புடையது.

கண்டறிதலிலிருந்து நீக்குதல்

நிதிப் பொறுப்பொன்றானது, அப்பொறுப்பின் கீழான கடப்பாடு விடுவிக்கப்படும் போது அல்லது இரத்துச்செய்யப்படும் போது அல்லது முடிவடையும் போது கண்டறிதலிலிருந்து நீக்கப்படுகின்றது. தற்போதுள்ள நிதிப் பொறுப்பானது கணிசமானளவு வேறுபட்ட நியதிகளின்படி அதே கடன்வழங்குநரிடமிருந்து மற்றுமொரு நிதிப் பொறுப்பினால் பதிலீடு செய்யப்படும் போது, அல்லது தற்போதுள்ள பொறுப்பின் நியதிகள் கணிசமானளவிற்கு மாற்றப்படும் போது, அத்தகைய பரிமாற்றம் அல்லது மாற்றமானது ஆரம்பப் பொறுப்பினைக் கண்டறிதலிலிருந்து நீக்குதலாகவும் புதிய பொறுப்பொன்றைக் கண்டறிதலாகவும் கருதப்படுகின்றது. உரிய கொண்டுசெல்லல் தொகைகளிலுள்ள வேறுபாடானது இலாபம் அல்லது நட்டக் கூற்றில் கண்டறியப்படுகின்றது.

3.10.6 நிதிச் சாதனங்களை ஈடாக்குதல்

- கண்டறியப்பட்ட தொகைகளை ஈடாக்குவதற்கு தற்போது அமுல்படுத்தக்கூடிய சட்ட உரிமை காணப்பட்டால், அத்துடன்
- தேறிய அடிப்படையில் தீர்ப்பனவு செய்வதற்கு, அல்லது ஒரே நேரத்தில் சொத்துகளைக் காசாக்கி பொறுப்புகளைத் தீர்ப்பதற்கான உத்தேசம் காணப்பட்டால்

நிதிச் சொத்துகளும் நிதிப் பொறுப்புகளும் ஈடாக்கப்பட்டு தேறிய தொகை நிதி நிலமைக் கூற்றில் அறிக்கையிடப்படுகின்றது.

3.10.7 நியாயப் பெறுமதி அளவீடுகள்

நியாயப் பெறுமதியில் அளவிடப்படும் நிதிச் சாதனங்கள் மற்றும் நிதி சாரா சொத்துகள் சார்பான நியாயப் பெறுமதியுடன் தொடர்புபட்ட வெளிப்படுத்தல்கள்.

நியாயப் பெறுமதி என்பது அளவீட்டுத் திகதியில் சந்தைப் பங்குபற்றுநர்களுக்கிடையில் ஒழுங்குமுறையான கொடுக்கல்வாங்கல் ஒன்றில் சொத்தொன்றை விற்பனை செய்வதற்குப் பெற்றுக்கொள்ளப்படும் அல்லது பொறுப்பொன்றை மாற்றுவதற்குச் செலுத்தப்படும் விலை ஆகும். சொத்தை விற்பனை செய்வதற்கு அல்லது பொறுப்பை மாற்றுவதற்கான கொடுக்கல்வாங்கலானது, ஒன்றில்

- சொத்து அல்லது பொறுப்பிற்கான பிரதான சந்தையில்,

அல்லது

- பிரதான சந்தை காணப்படாத போது, சொத்து அல்லது பொறுப்பிற்கான மிக அனுகூலமான சந்தையில்

இடம்பெறும் என்ற அனுமானத்தினை நியாயப் பெறுமதி அளவீடு அடிப்படையாகக் கொண்டது.

பிரதான அல்லது மிக அனுகூலமான சந்தையினை நிறுவனம் அணுகக்கூடியதாக இருக்க வேண்டும். சந்தைப் பங்குபற்றுநர்கள் தமது பொருளாதார நலனுக்காக செயற்படுகின்றனர் எனக் கருதி, சொத்து அல்லது பொறுப்பொன்றினை விலையிடும் போது சந்தைப் பங்குபற்றுநர்கள் பாவிக்கும் எடுகோள்களைப் பயன்படுத்தி அச்சொத்து அல்லது பொறுப்பின் நியாயப் பெறுமதி அளவிடப்படுகின்றது.

நிதிசாரா சொத்தொன்றின் நியாயப் பெறுமதி அளவீடானது, சொத்தின் அதியுச்ச மற்றும் அதிசிறந்த பயன்பாட்டில் அதனைப் பயன்படுத்துவதன் மூலம் அல்லது அச்சொத்தினை அதன் அதியுச்ச மற்றும் அதிசிறந்த பயன்பாட்டில் பயன்படுத்தும் மற்றுமொரு சந்தைப் பங்குபற்றுநருக்கு அதனை விற்பனை செய்வதன் மூலம் பொருளாதார நலன்களை உருவாக்குவதற்கான சந்தைப் பங்குபற்றுநரின் ஆற்றலைக் கருத்திற்கொள்கின்றது.

சூழ்நிலைகளுக்குப் பொருத்தமானதாகவுள்ள, அத்துடன் போதுமான தரவுகளானவை உரிய அவதானிக்கத்தக்க உள்ளீடுகளின் பயன்பாட்டை உச்சப்படுத்தியும் அவதானிக்க முடியாத உள்ளீடுகளின் பயன்பாட்டை இழிவளவாக்கியும் நியாயப் பெறுமதியில் அளவிடுவதற்கு கிடைக்கத்தக்கதாகவுமுள்ள விலைமதிப்பு நுட்பங்களை நிறுவனம் பயன்படுத்துகின்றது.

மீண்டெழும் அடிப்படையில் நிதிக் கூற்றுக்களில் கண்டறியப்படும் சொத்துகள் மற்றும் பொறுப்புகளுக்காக, ஒவ்வொரு அறிக்கையிடல் காலப்பகுதியின் முடிவிலும், வகைப்படுத்தலை மீள அளவிடுவதன் மூலம் (ஒட்டுமொத்தமாக நியாயப் பெறுமதி அளவீட்டிற்கு முக்கியமான ஆகக் குறைந்த மட்ட உள்ளீட்டின் அடிப்படையில்) அதிகாரப் படிநிலையின் மட்டங்களுக்கிடையில் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளனவா என்பதை நிறுவனம் வரையறுக்கின்றது.

நியாயப் பெறுமதி வெளிப்படுத்தல்களின் நோக்கத்திற்காக, சொத்து அல்லது பொறுப்பின் தன்மை, பண்புகள் மற்றும் இடர்களின் அடிப்படையில் சொத்துகளினதும் பொறுப்புகளினதும் வகுப்புகளையும் அத்துடன் கீழுள்ள 3.10.8 விற்பனைக்காக வைத்திருக்கப்படும் நடைமுறையல்லாச் சொத்துகள் என்பதில் விளக்கியவாறு நியாயப் பெறுமதி அதிகாரப் படிநிலையின் மட்டத்தையும் நிறுவனம் வரையறுத்துள்ளது.

3.10.8 விற்பனைக்காக வைத்திருக்கப்படும் நடைமுறையல்லாச் சொத்துகள்

பயன்பாட்டைத் தொடர்வதைக் காட்டிலும் விற்பனைக் கொடுக்கல்வாங்கல் ஒன்றுக்கூடாக நடைமுறையல்லாச் சொத்துகளினதும் அகற்றல் தொகுதிகளினதும் கொண்டுசெல்லல் தொகைகள் பிரதானமாக அறவிடப்படுமாயின் அவற்றை விற்பனைக்காக வைத்திருக்கப்படுவதாக கம்பனி வகைப்படுத்துகின்றது. விற்பனைக்காக வைத்திருக்கப்படுபவையாக வகைப்படுத்தப்பட்ட நடைமுறையல்லாச் சொத்துகளும் அகற்றல் தொகுதிகளும் அவற்றின் கொண்டுசெல்லல் தொகையினதும் விற்பனைக் கிரயங்கள் கழித்த நியாயப் பெறுமதியினதும் குறைவான தொகையில் அளவிடப்படுகின்றன. நிதிச் செலவுகள் மற்றும் வருமான வரிச் செலவு என்பன நீங்கலாக சொத்தொன்றின் (அகற்றல் தொகுதி) அகற்றலுடன் தொடர்புபட்ட நேரடிக் காரணமான அதிகரிப்புச் செலவுகளே விற்பனைக்கான கிரயங்கள் ஆகும்.

விற்பனை உயர் சாத்தியமுடையதாக இருக்கும் போது அத்துடன் சொத்து அல்லது அகற்றல் தொகுதியானது அதன் தற்போதய நிலமையில் உடனடி விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாக உள்ள போது மாத்திரமே விற்பனை வகைப்படுத்தலுக்காக வைத்திருக்கப்படுவதற்கான தகுதிவிதிகள் பூர்த்திசெய்யப்பட்டதாக கருதப்படும்.

விற்பனைக்கு குறிப்பிடத்தக்க மாற்றங்கள் செய்யப்படும் என்பதும் அல்லது விற்பனைக்கான தீர்மானம் மீளப்பெறப்படும் என்பதும் சாத்தியமற்றவை என்பதை விற்பனையைப் பூர்த்திசெய்வதற்குத் தேவைப்படும் நடவடிக்கைகள் சுட்டிக்காட்ட வேண்டும். சொத்தினை விற்பதற்கான திட்டத்திற்கு முகாமை அர்ப்பணிப்புச் செய்ய வேண்டும் என்பதுடன் வகைப்படுத்தல் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் விற்பனையை பூர்த்திசெய்வதற்கு எதிர்பார்க்க வேண்டும்.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் மற்றும் அருவச் சொத்துக்கள் என்பன விற்பனைக்காக வைத்திருக்கப்படுவதாக வகைப்படுத்தப்பட்டதும் பெறுமானத் தேய்விடப்படுவதில்லை அல்லது கடனழிவு செய்யப்படுவதில்லை. விற்பனைக்காக வைத்திருக்கப்படுவதாக வகைப்படுத்தப்பட்ட சொத்துகளும் பொறுப்புகளும் நிதி நிலமைக் கூற்றில் நடைமுறை உருப்படிகளாக புறம்பாக முன்வைக்கப்படுகின்றன.

விற்பனைக்காக வைத்திருக்கப்படுவதாக வகைப்படுத்தப்படுவதற்கு உடன் முன்னர், சொத்துகள், அல்லது அகற்றல் தொகுதியொன்றின் கூறுகளானவை கம்பனியின் கணக்கீட்டுக் கொள்கைகளுக்கிணங்க மீள அளவிடப்படுகின்றன. அதன்பின்னர் பொதுவாக சொத்துகள், அல்லது அகற்றல் தொகுதியானது அவற்றின் கொண்டுசெல்லல் தொகையினதும் விற்பனைக் கிரயங்கள் கழித்த நியாயப் பெறுமதியினதும் குறைவான தொகையில் அளவிடப்படுகின்றது. விற்பனைக்காக வைத்திருக்கப்படுவதான ஆரம்ப

வகைப்படுத்தல் மீதான பெறுமதிக்குறைவு நட்டங்கள் மற்றும் மீள் அளவீட்டின் மீதான

அடுத்துறும் இலாபங்கள் அல்லது நட்டங்களானவை இலாபம் அல்லது நட்டத்தில் கண்டறியப்படுகின்றன. ஏதேனும் திரண்ட பெறுமதிக்குறைவு நட்டத்தினை விஞ்சி இலாபங்கள் கண்டறியப்படுவதில்லை.

3.11 அரசாங்க மானியங்கள்

பணம் சாராத மானியங்கள் உள்ளடங்கலாக அரசாங்க மானியங்களானவை, அம்மானியம் பெற்றுக்கொள்ளப்படும் என்பதுடன் இணைக்கப்பட்ட சகல நிபந்தனைகளுடனும் இக் கம்பனி இணக்கமுறும் என்ற நியாயமான உறுதிப்பாடு காணப்படுமிடத்து, அவற்றின் நியாயப் பெறுமதியில் கண்டறியப்படுகின்றன.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றுடன் தொடர்புபட்ட அரசாங்க மானியங்களானவை, பிற்போடப்பட்ட அரசாங்க மானியங்களாக நடைமுறையல்லாப் பொறுப்புகளில் உள்ளடக்கப்படுவதுடன் தொடர்புபட்ட சொத்துக்களின் எதிர்பார்க்கப்பட்ட ஆயுட்காலங்களுக்கு நேர்கோட்டு அடிப்படையொன்றில் முழுமொத்த வருமானக் கூற்றில் கண்டறியப்படுகின்றன.

பணம் சாராத மானியங்களானவை பணம் சாராத சொத்தின் கொண்டுசெல்லல் பெறுமதியில் அளவிடப்படுவதுடன் மானியம் மற்றும் சொத்து எனும் இரண்டையுமே கொண்டுசெல்லல் பெறுமதியில் பிரதிநிதித்துவம் செய்கின்றன.

பொறுப்புகளும் ஏற்பாடுகளும்

கேள்வியின் மீது கொடுப்பனவிற்கு நிலுவையாகவுள்ளதும் அறிக்கையிடல் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் அமைவதுமானவையே நிதி நிலமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்புகளாக வகைப்படுத்தப்படும் பொறுப்புகளாகும். அறிக்கையிடல் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்கு பின்னர் கொடுப்பனவிற்கு நிலுவையாகவுள்ள அம் மீதிகளே நடைமுறையல்லாப் பொறுப்புகளாகும்.

சகல அறிந்துவைத்துள்ள பொறுப்புகளும் இந்நிதிக்கூற்றுகளின் தயாரிப்பில் கணக்கிடப்பட்டுள்ளன. கடந்தகால நிகழ்வுகளின் விளைவாக சட்டம் அல்லது அனுமானம் சார்ந்த கடப்பாடொன்றை இக் கம்பனி கொண்டுள்ள போதும் பொருளாதாரப் பயன்களின் வெளிப்பாய்ச்சலொன்று கடப்பாட்டைத் தீர்ப்பதற்குத் தேவைப்படுத்தப்படும் என்பது சாத்தியப்பாடுடைய போதும் ஏற்பாடுகளும் பொறுப்புகளும் கண்டறியப்படுகின்றன.

3.12 ஓய்வுபெறல் பயன் செலவுகள்

இக் கம்பனியானது வரையறுக்கப்பட்ட பயன் மற்றும் வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள் ஆகிய இரண்டையுமே கொண்டுள்ளது. எத் திட்டத்தின் கீழ் கம்பனியானது புறம்பான நிறுவனமொன்றாக நிலையான பங்களிப்புகளை செலுத்துகின்றதோ, அத்துடன் நிகழ்கால மற்றும் முன்னைய காலப்பகுதிகளில் ஊழியர் சேவை தொடர்பான பயன்களை சகல ஊழியர்களுக்கும் செலுத்துவதற்கு போதுமான சொத்துக்களை நிதியமானது கொண்டிருக்காதுவிடின், மேலதிக பங்களிப்புகளை செலுத்துவதற்கான சட்ட அல்லது அனுமான கடப்பாடுகள் எவற்றையும் கொண்டிருக்காததோ அவ் ஓய்வூதியத் திட்டமொன்றே வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டமாகும். வரையறுக்கப்பட்ட பயன் திட்டமொன்று வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டமொன்றாக அல்லாது ஓய்வூதியத் திட்டமொன்றாகவே உள்ளது. பொதுவாக வரையறுக்கப்பட்ட பயன் திட்டங்களானவை வழமையில் வயது, சேவை வருடங்கள் மற்றும் இழப்பீடு போன்ற ஒன்று அல்லது அதற்குங்கூடிய காரணிகளைப் பொறுத்து, ஓய்வுபெறலின் பேரில் ஓர் ஊழியர் பெற்றுக்கொள்ளும் ஓய்வூதியப் பயன் தொகையொன்றை வரையறை செய்கின்றன.

அ) வரையறுக்கப்பட்ட பங்களிப்புத்

திட்டங்கள் - ஊழியர் சேமலாப நிதியம் (EPF) மற்றும்

- ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (ETF)

ஊழியர் சேமலாப நிதிய மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய பங்களிப்புகளுக்கு தகுதியுடைய சகல ஊழியர்களும் உரிய நியதிச்சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு ஒத்திசைவாக உரிய பங்களிப்பு நிதியங்களில் உள்வாங்கப்படுகின்றனர்.

ஆ. வரையறுக்கப்பட்ட பயன் திட்டங்கள் – ஓய்வுபெறல் பணிக்கொடை

ஓய்வுபெறல் பணிக்கொடை தொடர்பில் நிதிநிலமைக் கூற்றில் கண்டறியப்பட்ட பொறுப்பானது அறிக்கையிடல் திகதியிலுள்ள பணிக்கொடைக் கடப்பாட்டின் நிகழ்காலப் பெறுமதியாகும். LKAS 19 – “ஊழியர்கள் நலன்கள்” என்பதனால் பரிந்துரைக்கப்பட்ட பணிக்கொடைச் சூத்திரத்தைப் பயன்படுத்தி கணிப்பிடப்படும் எதிர்வுகூறப்பட்ட அலகு வரவு (PUC) முறையினைப் பயன்படுத்தி பணிக்கொடைக் கடப்பாடுகள் அளவிடப்படுகின்றன.

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டத்திற்கிணங்க, ஐந்து வருட தொடர்ச்சியான சேவையினைப் பூர்த்திசெய்துள்ள ஓய்வுபெறும் ஊழியர்களுக்கு மாத்திரம் பணிக்கொடையினைச் செலுத்துவதற்கு இக்கம்பனி கடப்பாடுடையது.

தொழில்தருநர் செலுத்திய உண்மையான ஓய்வூதியக் கொடுப்பனவிற்கும் எதிர்பார்க்கப்பட்ட தொகைக்கும் இடையிலான வித்தியாசமாகவுள்ள (Actuarial) இலாபங்கள் / நட்டங்களானவை அவை ஏற்பட்ட காலப்பகுதியில் ஏனைய முழுமொத்த வருமானத்தில் கண்டறியப்பட்டுள்ளன.

பணிக்கொடைப் பொறுப்புக்கு வெளிவாரியாக நிதியீட்டம் செய்யப்படுவதில்லை.

3.13 எதிர்பாரா நிகழ்வுகளும் மூலதனக் கடப்பாடுகளும்

அறிக்கையிடல் திகதியிலுள்ளவாறு காணப்படும் சகல பொருண்மையான மூலதனக் கடப்பாடுகளும் எதிர்பாரா நிகழ்வுப் பொறுப்புகளும் நிதி கூற்றுக்களுடனான சம்பந்தப்பட்ட குறிப்புகளில் வெளிப்படுத்தப்படுகின்றன.

3.14 தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள்

விலை அறவிடப்படுவதைக் கருத்திற்கொள்ளாமல், நிதி மற்றும் செயற்பாட்டுத் தீர்மானங்களை / கொள்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கான அல்லது அவற்றின் மீது குறிப்பிடத்தக்க செல்வாக்கினைப் பிரயோகிப்பதற்கான ஆற்றலை ஒரு தரப்பானது கொண்டிருக்கும் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டுள்ளன.

3.15 பங்கொன்றுக்கான உழைப்புகள்

கம்பனியானது அதன் சாதாரண பங்குகளுக்காக அடிப்படையான பங்கொன்றுக்கான உழைப்புகளை (EPS) தருகின்றது. கம்பனியின் சாதாரண பங்குதாரர்களுக்குரிய இலாபம் அல்லது நட்டத்தை அக்காலப்பகுதியில் நிலுவையாகவுள்ள சாதாரண பங்குகளின் நிறையளிக்கப்பட்ட சராசரி எண்ணிக்கையினால் வகுப்பதன் மூலம் அடிப்படையான பங்கொன்றுக்கான உழைப்புகள் (EPS) கணிப்பிடப்படுகின்றன.

3.16 காசுப் பாய்ச்சற் கூற்று

காசுப் பாய்ச்சற் கூற்றானது "மறைமுக முறை" ஐப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளது. செலுத்தப்பட்ட நிதிச் செலவுகளானவை செயற்பாட்டுக் காசுப்பாய்ச்சலாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. கடன் மீள்கொடுப்பனவுகளும் ஆதாயங்களும் நிதிக் காசுப்பாய்ச்சலாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. நிதி நிலமைக் கூற்றில் கையிலுள்ள காசு

மற்றும் வங்கியிலுள்ள காசு, மற்றும் மூன்று மாதங்கள் கொண்ட அல்லது அதற்குக் குறைவான மாதங்களைக் கொண்ட முதிர்வுடன்கூடிய குறுங்கால வைப்புகள் என்பன வங்கியிலுள்ள காசு மற்றும் கையிலுள்ள காசு மற்றும் குறுங்கால வைப்புகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

3.17 புதிய மற்றும் திருத்தப்பட்ட நியமங்களும் பொருள்கோடல்களும்

வெளியிடப்பட்ட ஆனால் கம்பனியின் நிதிக் கூற்றுக்களின் வெளியீட்டுத் திகதி வரை அமுலுக்கு வராத நியமங்களும் பொருள்கோடலும் கீழே வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இந்நியமங்கள் அமுலாகும் போது ஏற்புடையதாயின் கம்பனி அவற்றைப் பின்பற்றுவதற்கு உத்தேசிக்கின்றது.

SLFRS 17 - காப்புறுதி ஒப்பந்தங்கள்

2020 ஜனவரி 8 ஆம் திகதியன்று, இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகமானது (CA Sri Lanka) SLFRS 17 - காப்புறுதி ஒப்பந்தங்கள் (SLFRS 17) என்பதை வெளியிட்டது. 2021 யூன் 28 ஆம் திகதியன்று SLFRS 17 - காப்புறுதி ஒப்பந்தங்கள் என்பதற்கான திருத்தங்கள் மூலம் SLFRS 17 திருத்தப்பட்டது.

கண்டறிதலும் அளவீடும், முன்வைப்பும் வெளிப்படுத்தலும் என்பவற்றை உள்ளடக்கும் காப்புறுதி ஒப்பந்தங்களுக்கான முழுமையான புதிய கணக்கீட்டு நியமமே SLFRS 17 ஆகும். SLFRS 17 அமுலுக்கு வந்ததும், 2005 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட SLFRS 4 - காப்புறுதி ஒப்பந்தங்கள் (SLFRS 4) என்பதை இது பதிலீடு செய்யும். சகல வகையான காப்புறுதி ஒப்பந்தங்களுக்கும் (அதாவது, ஆயுள், ஆயுள் சாராத, நேரடி காப்புறுதி மற்றும் மீள்காப்புறுதி), அவற்றை வழங்கும் நிறுவனங்களின் வகையினைப் பொருட்படுத்தாமல், அதேபோன்று தற்றுணிவான பங்குபற்றல் பண்புகளுடன்கூடிய சில உத்தரவாதங்கள் மற்றும் நிதிச் சாதனங்களுக்கும் SLFRS 17 ஏற்புடையதாகும். சில நோக்கெல்லை விதிவிலக்குகள் ஏற்புடையதாகும். காப்புறுதி வழங்குநர்களுக்கு மிகப் பயனுள்ளதும் ஒத்திசைவானதுமான காப்புறுதி ஒப்பந்தங்களுக்கான கணக்கீட்டு மாதிரியொன்றை வழங்குவதே SLFRS 17 இன் ஒட்டுமொத்த நோக்கமாகும். முன்னைய உள்நாட்டு கணக்கீட்டுக் கொள்கைகளின் விலக்களிப்பினை பெருமளவிற்கு அடிப்படையாகக்

கொண்ட SLFRS 4 இலுள்ள தேவைப்பாடுகளுக்கு மாறாக, உரிய சகல கணக்கீட்டு அம்சங்களையும் உள்ளடக்கி காப்புறுதி ஒப்பந்தங்களுக்கான முழுமையான மாதிரியொன்றை SLFRS 17 வழங்குகின்றது. SLFRS 17 இன் மையப்பகுதி பின்வருவனவற்றின் மூலம் குறைநிரப்புச் செய்யப்படுகின்ற பொது மாதிரி ஆகும்:

- நேரடிப் பங்குபற்றல் பண்புகளுடன்கூடிய ஒப்பந்தங்களுக்கான திட்டவட்டமான இசைவாக்கம் (மாறுபடக்கூடிய கட்டண அணுகுமுறை)
- பிரதானமாக குறுங்கால ஒப்பந்தங்களுக்கான எளிமைப்படுத்தப்பட்ட அணுகுமுறை (காப்புறுதிக் கட்டண ஒதுக்கீட்டு அணுகுமுறை)

தேவைப்படுத்தப்படும் ஒப்பீட்டுத் தரவுகளுடன் 2023 ஜனவரி 1 ஆம் திகதியன்றோ அல்லது அதன் பின்னரோ ஆரம்பிக்கும் வருடாந்த அறிக்கையிடல் காலப்பகுதிகளுக்கு SLFRS 17 அமுலுக்குவரும். நிறுவனமானது SLFRS 17 ஐ முதலில் பிரயோகிக்கும் திகதியன்றோ அதற்கு முன்னரோ SLFRS 9 மற்றும் SLFRS 15 என்பவற்றையும் அது பிரயோகித்தால் முன் பிரயோகம் அனுமதிக்கப்படும். இந்நியமத்தைப் பின்பற்றுவது தொடர்பில் குழுமத்தின் நிதிக் கூற்றுகளில் குறிப்பிடத்தக்க தாக்கத்தினை குழுமம் கொண்டிருக்குமென எதிர்பார்க்கவில்லை.

	மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது		**2023**	**2022**
		குறிப்புகள்	**ரூபா.**	**ரூபா.**
4	**வருமானம்**			
	கடற்பயணம்		878,675,085	1,802,122,355
	சரக்கு வருமானம்,சொந்தக் கப்பல்		-	439,788,449
	சொந்தக் கப்பலிலிருந்தான வாடகைக்கமர்த்தல் வாடகை		5,336,832,861	2,978,237,896
	நிலக்கரிக் கப்பலிலிருந்தான வாடகைக்கமர்த்தல் வாடகை		-	2,246,567,897
	அப்புறப்படுத்தல் மற்றும் முன்னளித்தல்		70,529,749	18,165,709
	முகவராண்மை மற்றும் கப்பலை வாடகைக்கமர்த்துவோருக்கான தரகு		363,418,627	391,934,051
			6,649,456,322	7,876,816,356
5	**ஏனைய வருமானம்**			
	நிலையான சொத்துக்களின் விற்பனை மீதான இலாபம்		-	-
	பங்கிலாபம்		142,606	-
	செலாவணி இலாபம்		421,233,863	356,654,971
	வட்டி வருமானம் - நிலையான வைப்புக்களும் திறைசேரி உண்டியல்களும்		172,649,328	45,379,467
	வட்டி வருமானம் - அலுவலர் குழாத்துக் கடன்கள்		1,476,204	1,642,484
	தாமதக் கட்டண அறவீடுகள் – சொந்தக் கப்பல்		-	4,064,850
	ஆவணமாக்கல் கட்டண அறவீடுகள்		2,310,470	3,541,235
	ஏனையவை		237,766,729	60,265,190
			835,579,200	**471,548,197**

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

6 செயற்பாடுகளிலிருந்தான இலாபம்/(நட்டம்)

பின்வருவன உள்ளடங்கலாக சகல செயற்பாட்டுச் செலவினங்களையும் சாட்டுதல் செய்த பின்னர் செயற்பாடுகளிலிருந்தான இலாபம்/(நட்டம்) எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

கணக்காய்வாளரின் ஊதியம்	810,000	760,000
பெறுமானத்தேய்வு	438,441,316	420,194,198
தொழில்நிபுணர் மற்றும் சட்டக் கட்டணங்கள்	1,708,246	584,905
அலுவலர் குழாத்துச் செலவுகள் **(குறிப்பு: 6.1)**	162,388,788	153,924,140

6.1 அலுவலர் குழாத்துச் செலவுகள்

பணிப்பாளர்களின் ஊதியம்	488,500	596,050
சம்பளமும் கூலியும்	142,576,803	140,610,298
அலுவலர் குழாத்துப் பயிற்சி	213,250	175,433
வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டச் செலவுகள் - ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்	15,277,851	15,134,172
வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டச் செலவுகள் - W.N.O.P	119,631	-
வரையறுக்கப்பட்ட பயன் திட்டச் செலவு - ஓய்வுபெறல் பணிக்கொடை	3,712,753	(2,591,813)
	162,388,788	153,924,140

7 நிதிச் செலவுகள்

நிதிச் செலவுகள்			
வட்டிச் செலவு - கப்பல் கடன்		(1,569,949,481)	(727,535,758)
செலாவணி நட்டம்		(2,811,891,329)	(6,081,305,456)
		(4,381,840,810)	**(6,808,841,215)**

8 வருமான வரி வருமானம் / (செலவுகள்)

சாதாரண செயற்பாடுகள் மீதான வரி	8.1	191,305,299	-
பிற்போடப்பட்ட வரிச் சொத்தின் மீள்திரும்பல்	17	1,232,219,356	1,197,593,218
		1,423,524,655	**1,197,593,218**

		குறிப்பு	2023	2022
			ரூபா.	**ரூபா.**
8.1	**வரி விதிக்கக்கூடிய இலாபத்திற்கும் கணக்கீட்டு இலாபத்திற்கும் இடையிலான கணக்கிணக்கம்**			
	வரிக்கு முன்னரான கணக்கீட்டு இலாபம்		(433,605,111)	(4,567,786,074)
கழிப்பனவு:	இணை நிறுவனங்களின் இலாபப் பங்கு - (வரி கழித்த)		(47,553,798)	(40,277,522)
			(481,158,909)	(4,608,063,596)
	ஒன்றுதிரண்ட அனுமதிக்கத்தகாத விடயங்கள்		4,826,429,966	7,234,195,429
	ஒன்றுதிரண்ட அனுமதிக்கத்தக்க விடயங்கள்		(88,386,647)	(29,963,768)

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

	கடன்பட்டோர் பெறுமதிக் குறைவுகளுக்கான பெறுமதிக்குறைவு ஏற்பாடுகள்		84,096,715	177,070,299
	வரிக்கு உட்படாத வருமானம்		(174,268,138)	(47,021,951)
	வியாபாரத்திலிருந்து மதிப்பிடக்கூடிய வருமானம்		4,166,712,987	2,726,216,413
	முதலீட்டிலிருந்து மதிப்பிடக்கூடிய வருமானம்		174,478,654	47,375,073
சேர்ப்பனவு:	வரி-வட்டி வருமானத்திற்கான ஏனைய வருமானப் பொறுப்பு		-	-
	மொத்த நியதிச்சட்ட வருமானம் / மதிப்பிடக்கூடிய வருமானம்		4,341,191,641	2,773,591,486
	வரி நட்டம் மீதி முன்கொண்டுவந்தது		(3,632,522,709)	(6,406,114,195)
	வரிவிதிக்கக்கூடிய வருமானம் / (நட்டம்)		708,668,932	(3,632,522,709)
	14% படி (14% படி 353,122 ரூபா) பங்கிலாபத்திற்கான வரிவிதிக்கக்கூடிய வருமானப் பொறுப்பு		49,437	-
	24% படி வரிவிதிக்கக்கூடிய பொறுப்பு		84,955,522	-
	30% படி வரிவிதிக்கக்கூடிய பொறுப்பு		106,300,340	-
	ஆண்டுக்கான சாதாரண செயற்பாடுகள் மீதான நிகழ்கால வரி	8	**191,305,299**	-

9 **அடிப்படை மற்றும் கலப்பு பங்கொன்றுக்கான உழைப்பு**

அறிக்கையிடல் காலப்பகுதியில் வெளியீட்டிலுள்ள சாதாரண பங்குகளின் நிறையளிக்கப்பட்ட சராசரி எண்ணிக்கையின் மூலம் உரிமைமுதல்தாரர்களுக்கு உரிய இலாபத்தினை பிரிப்பதன் மூலம் அடிப்படை மற்றும் கலப்பு பங்கொன்றுக்கான உழைப்பு கணிப்பிடப்படுகின்றது.

பின்னத்தின் மேலெண்ணாகப் பயன்படுத்தப்பட்ட தொகை

உரிமைமுதல்தாரர்களுக்கு உரிய தேறிய இலாபம் (ரூபா)	(624,910,410)	(4,567,786,074)

பின்னத்தின் கீழெண்ணாகப் பயன்படுத்தப்பட்ட தொகை		
வெளியீட்டிலுள்ள பங்குகளின் நிறையளிக்கப்பட்ட சராசரி எண்ணிக்கை	5,000,000	5,000,000
அடிப்படை மற்றும் கலப்பு பங்கொன்றுக்கான உழைப்பு (ரூபா.)	**(124.98)**	**(913.56)**

அடிப்படை மற்றும் கலப்பு பங்கொன்றுக்கான உழைப்பு

அறிக்கையிடல் காலப்பகுதியில் வெளியீட்டிலுள்ள சாதாரண பங்குகளின் நிறையளிக்கப்பட்ட சராசரி எண்ணிக்கையின் மூலம் உரிமைமுதல்தாரர்களுக்கு உரிய இலாபத்தினை/ (நட்டத்தினை) பிரிப்பதன் மூலம் அடிப்படை மற்றும் கலப்பு பங்கொன்றுக்கான உழைப்பு/ (நட்டம்) கணிப்பிடப்படுகின்றது.

பின்னத்தின் மேலெண்ணாகப் பயன்படுத்தப்பட்ட தொகை

உரிமைமுதல்தாரர்களுக்கு உரிய தேறிய இலாபம்/ (நட்டம்) (ரூபா)	(624,910,410)	(4,567,786,074)

வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்
நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்
2023 மார்ச் 31 இலுள்ளவாறு

10 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்

	காணி ரூபா.	வீடமைப்புக் கருத்திட்டம் ரூபா.	கட்டடங்கள் ரூபா.	கப்பல் ரூபா.	கப்பலை கரையில் வைத்து பழுதுபார்க்கும் வேலை ரூபா.	மோட்டார் வாகனங்கள் ரூபா.	தளபாடம், பொருத்துக்கள் மற்றும் உபகரணங்கள் ரூபா.	கணனிகள் ரூபா.	மொத்தம் ரூபா.
கிரயம் / விலைமதிப்பு									
2022 ஏப்பிறல் 1 இலுள்ளவாறு மீதி	4,000,000	1,286,340	43,390	11,235,780,363	41,296,844	37,002,095	21,561,616	25,743,121	11,366,713,769
ஆண்டுக்காலத்தில் சேர்ப்பனவுகள்	10,337,000		-	-		-	11,778,792	1,683,350	23,799,142
ஆண்டுக்காலத்தில் கப்பலை கரையில் வைத்து பழுதுபார்க்கும் வேலையிலிருந்து மாற்றப்பட்டது	-		-	-	319,252,224	-	-	-	319,252,224
ஆண்டுக்காலத்தில் விற்பனைகள்	(4,000,000)	(1,286,340)	-	-		-	(256,720)		(5,543,060)
மறுபடி விலைமதிப்பு	241,863,000								241,863,000
ஆண்டுக்காலத்தில் மாற்றப்பட்டது			-			-	-	-	-
2023 மார்ச் 31 இலுள்ளவாறு மீதி	252,200,000	-	43,390	11,235,780,363	360,549,068	37,002,095	33,083,688	27,426,471	11,946,085,075

வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்
நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்
2023 மார்ச் 31 இலுள்ளவாறு

திரண்ட பெறுமானத்தேய்வு

2022 ஏப்பிறல் 1 இலுள்ளவாறு மீதி	-	1,269,688	43,390	2,418,267,846	7,082,692	35,215,862	14,934,553	21,647,576	2,498,461,607
முறைமைத் தவறு திருத்தம்							5,737		5,737
பெறுமானத்தேய்வு மீளாய்வுச் சீராக்கம்				(256,884,612)	-	(23,245,147)		-	(280,129,760)
ஆண்டுக்கான சாட்டுதல்	-	7,587	-	364,809,737	68,786,092	1,479,637	1,769,888	1,588,375	438,441,316
சீராக்கங்கள்	-		-			-	-	-	-
விற்பனைகளின் மீதானவை	-	(1,277,275)	-	-		-	(255,868)		(1,533,143)
மாற்றப்பட்டவை மீதானவை	-					-	-	-	-
2023 மார்ச் 31 இலுள்ளவாறு மீதி	-	-	43,390	2,526,192,971	75,868,784	13,450,351	16,454,311	23,235,951	2,655,245,757

தேறிய புத்தகப் பெறுமதி	**குறிப் புகள்**	2023	2022
		ரூபா.	**ரூபா.**
காணி		252,200,000	4,000,000
வீடமைப்புக் கருத்திட்டம்		-	16,652
கட்டடங்கள்		-	-
கப்பல்கள்		8,709,587,392	8,817,512,517
கப்பலை கரையில் வைத்து பழுதுபார்க்கும் வேலை		284,680,283	34,214,152
மோட்டார் வாகனங்கள்		23,551,743	1,786,233
தளபாடமும் பொருத்துக்களும்		16,629,377	6,627,063
அலுவலக உபகரணங்களும் கணனிகளும்		4,190,520	4,095,545
		9,290,839,316	8,868,252,162
	10.2	**9,290,839,316**	**8,868,252,162**

முகாமையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கிணங்க, ஓப்(f) அளுத் மாவத்தை, 18 ஆம் ஒழுங்கையில் அமைந்துள்ள காணியும் கட்டடமும் எமக்குச் சொந்தமில்லாததால் அச்சொத்துக்கள் ஏட்டிலிருந்து பதிவழிக்கப்பட்டன.

		குறிப்புகள்	2023	2022
			ரூபா.	ரூபா.
10.1	**மூலதன நடைபெறும் வேலை - கட்டடங்கள்**			
	ஆண்டுத் தொடக்கத்திலுள்ள மீதி		-	-
	ஆண்டுக் காலத்தின் போது சேர்ப்பனவுகள்		315,610	
	ஆண்டிறுதியிலுள்ள மீதி		315,610	-
10.2	**நிலையான சொத்துக்களின் கொண்டுசெல்லல் பெறுமதி**			
	கிரயத்தில்		9,038,639,316	8,864,252,162
	விலைமதிப்பில்		252,200,000	4,000,000
		10	9,290,839,316	8,868,252,162

11 மூலதன நடைபெறும் வேலை – கப்பல்கள் கரையில் வைத்து பழுதுபார்க்கும் வேலை

	எம்வீ சிலோன் பிறீஸ் ரூபா.	எம்வீ சிலோன் பிறின்ஸ் ரூபா.	மொத்தம் ரூபா.
கிரயம்			
2022 ஏப்பிறல் 1 இலுள்ளவாறு மீதி	-	119,621,698	119,621,698
ஆண்டுக்காலத்தில் சேர்ப்பனவுகள்	-	199,630,526	199,630,526
கடன்பெறல் செலவுகள்	-	-	-
ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணத்திற்கான மாற்றம்	-	(319,252,224)	(319,252,224)
2023 மார்ச் 31 இலுள்ளவாறு மீதி	-	-	-

	மார்ச் 31 இலுள்ளவாறு	**2023**	**2022**
		ரூபா.	**ரூபா.**
12	**அருவச் சொத்து**		
	கணனி மென்பொருள்		
	கிரயம்		
	ஆண்டுத் தொடக்கத்திலுள்ள மீதி	6,144,497	6,144,497
	ஆண்டிறுதியிலுள்ள மீதி	6,144,497	6,144,497
	திரண்ட கடனழிவு		
	ஆண்டுத் தொடக்கத்திலுள்ள மீதி	6,144,497	6,144,497
	ஆண்டிறுதியிலுள்ள மீதி	6,144,497	6,144,497
	மார்ச் 31 இலுள்ளவாறு குறைத்தெழுதப்பட்ட பெறுமதி	-	-

மென்பொருள் தொகுப்பின் கிரயமானது அவற்றின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலத்திற்கு ஏற்கனவே கடனழிவு செய்யப்பட்டுள்ளது. அதேபோன்று கணக்கீட்டு மென்பொருள் தொகுப்பானது இக்கம்பனியின் தேவைப்பாட்டைப் பூர்த்திசெய்வதற்கு ஒத்திசைவாகவும் பயனாளர் நட்புறவானதாகவும் இல்லை. ஆதலால், செலவில்லாத பொறுப்பில்லாத அடிப்படையில் எமக்காக இதனை அவர்கள் நிறுவிய சந்தர்ப்பத்தில் CSC மற்றும் வழங்குநரின் தரம் குறைந்திருந்தது. மேலும், விற்பனைக்குப் பின்னரான உரிமமளிப்புச் சேவைகளை வழங்குநர் வழங்கியிருக்கவில்லை.

ஆதலால், CSC இற்காக பயனாளர் நட்புறவான புதிய மென்பொருள் தொகுப்பு ஒன்றினைக் கொள்வனவு செய்வதற்கு நாம் திட்டமிட்டுள்ளதுடன் இதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவை (TEC) ஏற்கனவே நியமித்துள்ளோம். அதற்கிணங்க, கம்பனிக்கான பெறுமதியின்றி கணனி மென்பொருளுக்கான ஏதேனும் மறுமதிப்பீட்டை CSC முகாமை பரிந்துரைக்கவில்லை.

			2023	2022
			ரூபா.	ரூபா.

13. துணை நிறுவனத்திலுள்ள முதலீடு

	பங்குகளின் எண்ணிக்கை	உடமை வைத்திருப்பின் சதவீதம்	2023	2022
சிலோன் ஷிப்பிங் ஏஜென்சி (பிறைவெட்) லிமிட்டெட்	9,999	100%	-	-
பெறுமதிக் குறைவிற்கான ஏற்பாடு			-	-
			-	-

பல காரணங்களினால் துணை நிறுவனத்தின் வியாபார நடவடிக்கையை நிறுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டவாறு 2006 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் திகதியன்று நடாத்தப்பட்ட பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு ஒத்திசைவாக துணை நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்களை கம்பனியானது திரட்டியிருக்கவில்லை. அதன்பின்னர், துணை நிறுவனத்தை மூடுவதற்கு சபை தீர்மானித்தது அத்துடன் வழக்கு இல. HC(Civil)56/2013/CO) என்பதற்கான குறிப்புதவியின் கீழ் கொழும்பு வர்த்தக மேல் நீதி மன்றத்தின் மேற்பார்வையின் கீழ் இது மூடப்பட்டது. N (PVS) 6037 இன் கீழ் பதிவுசெய்யப்பட்ட சிலோன் ஷிப்பிங் ஏஜென்சி (பிறைவெட்) லிமிட்டெட் கம்பனியானது 2016/09/02 ஆம் திகதியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் கீழ் 2016/07/28 ஆம் திகதியிலிருந்து செயல்வலுவுக்குவரும் வண்ணம் கலைக்கப்பட்டுள்ளது அத்துடன் இனி இது தொடர்ந்து காணப்படாது என்பதுடன் இக்கம்பனியின் பெயரும் கம்பனிப் பதிவாளர் பெயர்ப் பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டுள்ளது.

14. இணை நிறுவனங்களிலான முதலீடு

உரிமைமுதல் முறை மீதான கொண்டுசெல்லல் பெறுமதி

	2023	2022
சிலோன் ஷிப்பிங் லைன்ஸ் (பிறைவெட்) லிமிட்டெட்	362,388,988	330,963,192
சிலோன் ஷிப்பிங் ஏஜென்சி (பிறைவெட்) லிமிட்டெட் - சிங்கப்பூர்	207,561,357	101,840,108
	569,950,345	**432,803,300**

14.1 **இணை நிறுவனங்களிலான முதலீடு**

கிரயம்

	பங்குகளின் எண்ணிக்கை	உடமை வைத்திருப்பின் சதவீதம்		
சிலோன் ஷிப்பிங் லைன்ஸ் (பிறைவெட்) லிமிட்டெட்	156,942	39%	1,569,420	1,569,420
சிலோன் ஷிப்பிங் ஏஜென்சி (பிறைவெட்) லிமிட்டெட் - சிங்கப்பூர்	24,500	49%	143,622	143,622
			1,713,042	1,713,042

14.2 **உரிமைமுதல் முறை மீது இணை நிறுவனங்களிலான முதலீட்டின் அசைவு**

முதலீட்டாளரின் தேறிய சொத்துக்களின் பங்கு

ஆண்டுத் தொடக்கத்திலுள்ள மீதி	432,803,300	387,476,863
இணை நிறுவனங்களின் இலாபப் பங்கு - (வரி கழித்த) (14.2)	**47,553,798**	**40,277,522**
இணை நிறுவனங்களின் ஏனைய முழுமொத்த வருமானத்தின் பங்கு - (வரி கழித்த)	89,946,369	5,402,037
பங்கிலாப வருமானம்	(353,122)	(353,122)
ஆண்டிறுதியிலுள்ள மீதி	569,950,345	432,803,300

14.3 இணை நிறுவனங்களின் பொழிப்பாக்கப்பட்ட நிதித் தகவல்கள்

	சிலோன் ஷிப்பிங் ஏஜென்சி (பிறைவெட்) லிமிட்டெட் - சிங்கப்பூர்		சிலோன் ஷிப்பிங் லைன்ஸ் (பிறைவெட்) லிமிட்டெட்	
டிசெம்பர் 31 இலுள்ளவாறு	**2022**	**2021**	**2022**	**2021**
மொத்தச் சொத்துக்கள்	1,076,333,373	453,459,584	1,255,044,353	1,038,018,572
மொத்தப் பொறுப்புக்கள்	645,276,426	238,160,289	279,230,220	142,481,558
தேறிய சொத்துக்கள்	431,056,947	215,299,295	975,814,133	895,537,013
வருமானம்	2,224,810,359	1,733,064,950	761,106,290	469,278,941
செயற்பாட்டுச் செலவுகள்	2,193,896,688	1,705,446,443	739,294,337	447,552,799
ஏனைய வருமானம்	1,046,074	1,585,641	19,654,124	27,588,477
ஆண்டுக்கான இலாபம்	29,755,333	26,287,078	854,547,911	65,777,083
ஆண்டுக்கான ஏனைய முழுமொத்த வருமானம்	29,755,333	26,287,078	(3,063,504)	1,653,728

	குறிப்புகள்	2023	2022
		ரூபா.	ரூபா.

15. நிதியியல் சாதனங்கள்

நிதிச் சொத்துக்களினதும் நிதிப் பொறுப்புக்களினதும் வகுதிகள்

நிதி நிலமைக் கூற்றில் அறிக்கையிடப்பட்ட நிதிச் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் கொண்டுசெல்லல் பெறுமதி பின்வருமாறு;

நிதிச் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் கொண்டுசெல்லல் பெறுமதிகள்

வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்
நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்
மார்ச் 31 இலுள்ளவாறு

15.1 நிதிச் சொத்துக்கள்

15.1.1 விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ளவை

விலைகூறப்பட்ட முதலீடு	**16.1**	45,316,140	53,306,091
விலைகூறப்படாத முதலீடுகள்	**16.2**	2,377,070	2,377,070
		47,693,210	55,683,161

விலைகூறப்பட்ட முதலீடானது செயலூக்கமிக்க சந்தைசார் விலைகூறப்பட்ட விலைகளின் அடிப்படையில் நியாயப் பெறுமதியில் அளவிடப்படுகின்றது. விலைகூறப்படாத முதலீடுகளானவை, அவற்றின் நியாயப் பெறுமதியை நம்பகரமாக அளவிட முடியாத படியால் பெறுமதிக் குறைவிற்கான ஏற்பாட்டைக் கழித்த கிரயத்தில் அளவிடப்படுகின்றன.

15.1.2 முதிர்வுக்காக வைத்திருக்கப்படும் முதலீடுகள்

திறைசேரி உண்டியல்களிலான முதலீடு	**20**	464,999,999	447,289,305

முதிர்வுக்காக வைத்திருக்கப்படும் முதலீடுகளானவை வட்டி வருமதி உள்ளடங்கலாக அளவிடப்படுகின்றது.

15.1.3 கடன்களும் பெறத்தக்கவைகளும்

வியாபார மற்றும் ஏனைய வருமதிகள்	18	951,582,262	1,472,984,001
குறுங்கால முதலீடுகள்	21	26,268,205	25,533,587
காசும் காசுக்குச் சமமானவையும்	22	1,305,653,577	729,586,947
		2,283,504,043	2,228,104,535

கடன்களும் பெறத்தக்கவைகளும், அவற்றின் கொண்டு செல்லல் பெறுமதியானது நியாயப் பெறுமதியுடன் ஏறத்தாழ சரியாகவிருக்கின்ற படியால் அவற்றின் கொண்டு செல்லல் பெறுமதியில் எடுத்துரைக்கப்படுகின்றன.

மொத்த நிதிச் சொத்துக்கள்	**2,796,197,252**	**2,731,077,001**

15.2 நிதிப் பொறுப்புக்கள்

வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள்	30	1,792,767,053	1,555,707,720
மொத்த நிதிப் பொறுப்புக்கள்		**1,792,767,053**	**1,555,707,720**

நிதிப் பொறுப்புக்களானவை, அவற்றின் கொண்டு செல்லல் பெறுமதியானது நியாயப் பெறுமதியுடன் ஏறத்தாழ சரியாகவிருக்கின்ற படியால் அவற்றின் கொண்டு செல்லல் பெறுமதியில் எடுத்துரைக்கப்படுகின்றன.

	குறிப்புகள்	2023 ரூபா.	2022 ரூபா.
16. விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ள நிதிச் சொத்துக்கள்			
விலைகூறப்பட்ட முதலீடு	16.1	45,316,140	53,306,091
விலைகூறப்படாத முதலீடுகள்	16.2	2,377,070	2,377,070
		47,693,210	**55,683,161**
16.1 விலைகூறப்பட்ட முதலீடு			
ஆண்டுத் தொடக்கத்திலுள்ள மீதி		53,306,091	17,243,984
நியாயப் பெறுமதியிலுள்ள மாற்றங்கள் மீதான இலாபம்/ (நட்டம்)		(7,989,951)	36,062,107
ஆண்டிறுதியிலுள்ள மீதி	16	45,316,140	53,306,091

		2023		2022	
	பங்குகளின் எண்ணிக்கை	**கிரயம்** **ரூபா.**	**சந்தைப் பெறுமதி** **ரூபா.**	**கிரயம்** **ரூபா.**	**சந்தைப் பெறுமதி** **ரூபா.**
மேகன்ரைல் ஷிப்பிங் கொம்பனி பிஎல்சி	238,506	2,068,800	45,316,140	2,068,800	53,306,091

16.2 விலைகூறப்படாத முதலீடுகள்

விலைகூறப்படாத முதலீடுகளானவை, அவற்றின் நியாயப் பெறுமதியை நம்பகரமாக அளவிட முடியாத படியால் பெறுமதிக் குறைவு நட்டங்களைக் கழித்த கிரயத்தில் குறிப்பிடப்படுகின்றன.

		2023	**2022**
	குறிப்புகள்	**ரூபா.**	**ரூபா.**
	பங்குகளின் எண்ணிக்கை		
அசோசியேற் நியூஸ் பேப்பெர்ஸ் ஒவ் சிலோன் லிமிட்டெட்	31,206	312,060	312,060
சிலோன் போற் சேவிஸ்சஸ் லிமிட்டெட்	5,000	50,000	50,000
சிறீ லங்கா போற் மனேஜ்மென்ட் அன்ட் கொன்சல்ரன்சி லிமிட்டெட்	1,501	15,010	15,010
லங்கா கோல் கொம்பனி (பிறைவெட்) லிமிட்டெட்	200,000	2,000,000	2,000,000
	16	2,377,070	2,377,070

17 பிற்போடப்பட்ட வரிச் சொத்து / (பொறுப்பு)

ஆண்டுத் தொடக்கத்திலுள்ள மீதி		(1,005,140,668)	192,452,549
ஆண்டின் போதான மீள்திரும்பல்	**8**	-	-
ஆண்டின் போது		(1,232,219,356)	(1,197,593,218)
ஆண்டிறுதியிலுள்ள மீதி	**17.1**	**(2,237,360,024)**	**(1,005,140,668)**

சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் கொண்டுசெல்லல் தொகைக்கும் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் வரி அடித்தளத்திற்கும் இடையிலான தற்காலிக வேறுபாடுகளுக்காக பிற்போடப்பட்ட வரி கண்டறியப்படுகின்றது. 30% கொண்ட பயனுறுதி வாய்ந்த வரி வீதத்தின் மூலம் பிற்போடப்பட்ட வரி அளவிடப்பட்டுள்ளது.

		குறிப்புகள்	2023 ரூபா.	2022 ரூபா.
17.1	**பிற்போடப்பட்ட வரி சொத்து மற்றும் பொறுப்பு பகுப்பாய்வு**			
	பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு			
	துரித பெறுமானத்தேய்விலிருந்து		(2,623,018,555)	(2,117,506,773)
			(2,623,018,555)	(2,117,506,773)
	பிற்போடப்பட்ட வரிச் சொத்து			
	வரி நட்டத்திலிருந்து		-	822,607,358
	பெறுமதிக்குறைவிற்கான ஏற்பாடு		376,854,005	281,299,993
	ஓய்வுபெறல் பயன் கடப்பாட்டிலிருந்து		8,804,526	8,458,754
			385,658,531	1,112,366,105
		17	(2,237,360,024)	(1,005,140,668)

ஓய்வுபெறல் பயன் கடப்பாட்டிற்கான அத்துடன் எதிர்கால வரிவிதிக்கக்கூடிய இலாபம் / நட்டத்திற்கு ஊடாக தொடர்புபட்ட வரிப் பயன்களை அடைந்துகொள்தலானது சாத்தியப்படக்கூடிய அளவிற்கான வரி நட்டத்திற்கான ஏற்பாட்டிற்காக பிற்போடப்பட்ட வரிச் சொத்து கண்டறியப்படுவதுடன் பெறுமானத்தேய்வை துரிதப்படுத்துவதற்காகவும் மறுபடிவிலைமதிப்பு மிகைக்காகவும் பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புகள் கண்டறியப்படுகின்றன.

			2023	2022
18	**வியாபார மற்றும் ஏனைய வருமதிகள்**			
	வியாபார வருமதிகள்	18.1	823,789,516	1,288,730,656
	வைப்புகளும் முற்பணங்களும்	18.2	16,099,543	15,388,654
	அலுவலர் குழாத்து வருமதிகள்	18.3	47,665,131	45,351,301
	ஏனைய வருமதிகள்	18.4	64,028,070	123,513,390
			951,582,262	**1,472,984,001**

18.1 வியாபார வருமதிகள்

வியாபார வருமதிகள்		2,070,761,878	2,460,530,760
வியாபார கட்டுப்பாட்டுக் கணக்கு (உள்நாட்டு)		8,924,457	-
நிலக்கரி கொடுக்கல்வாங்கல் கட்டுப்பாட்டுக் கணக்கு		283,199	283,199
பெறுமதிக்குறைவிற்கான ஏற்பாடு		(1,256,180,018)	(1,172,083,303)
	18	823,789,516	1,288,730,656

தொடர்புபட்ட தரப்பினர்களிடமிருந்தான பின்வரும் வருமதிகளை வியாபார வருமதிகள் உள்ளடக்குகின்றன.

தொடர்புபட்ட தரப்பினர்களிடமிருந்தான வருமதிகள்

அரசாங்க நிறுவனங்கள்	328,159,860	492,899,641

வியாபார வருமதிகளின் கால முதிர்வு பின்வருமாறு.

வியாபார வருமதிகளின் கால முதிர்வு

ஒரு வருடம் வரை	779,186,765	1,259,424,908
1 தொடக்கம் 4 வருடங்கள் வரை	257,530,960	228,907,326
நான்கு வருடங்களுக்கு மேற்பட்டது	1,034,044,153	972,198,525
	2,070,761,878	2,460,530,760

வியாபார வருமதிகள் பெறுமதிக் குறைவிற்காக மீளாய்வு செய்யப்பட்டுள்ளன. சில வியாபார வருமதிகளானவை பெறுமதி குறைந்து காணப்பட்டுள்ளதுடன் குறிப்பு 3.10.1 இல் குறிப்பிடப்பட்டவாறான அடிப்படையில் பெறுமதிக் குறைவிற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வியாபார வருமதிகளின் பெறுமதிக் குறைவிற்கான ஏற்பாடு பற்றிய விபரங்கள்;

திட்டவட்டமான பெறுமதிக்குறைவு

அரசாங்க நிறுவனங்கள்		36,206,870	36,206,870
வெளிநாட்டு முகவர்கள்		64,024,592	64,024,592
தனியார் நிறுவனங்கள்		44,083,601	44,083,601
ஏனையவை		16,931,052	16,931,052
ஒருமித்த பெறுமதிக்குறைவு		1,094,933,903	1,010,837,188
		1,256,180,018	1,172,083,303

18.2 வைப்புகளும் முற்பணங்களும்

கொள்கலன் வைப்புகள்		11,674,692	13,243,865
ஏனைய மீளச்செலுத்தக்கூடிய வைப்புகள்		6,653,732	6,124,052
முற்பணங்கள்		6,100,028	4,349,646
		24,428,453	23,717,563
பெறுமதிக்குறைவிற்கான ஏற்பாடு		(8,328,910)	(8,328,910)
	18	16,099,543	15,388,654

18.3 அலுவலர் குழாத்து வருமதிகள்

அலுவலர் குழாத்து கடன்கள்		45,242,842	41,145,250
முற்பணங்களும் ஏனையவையும்		2,422,289	4,206,051
	18	47,665,131	45,351,301

18.4	**ஏனைய வருமதிகள்**			
	உத்தரவாத திருத்தவேலை வருமதிகள்		19,839,635	19,839,635
	ஏனையவை		67,490,246	126,975,566
			87,329,881	146,815,201
	பெறுமதிக்குறைவிற்கான ஏற்பாடு		(23,301,810)	(23,301,810)
		18	64,028,070	123,513,390
19	**நியதிச்சட்ட வருமதிகள்**			
	பிடித்துவைத்தல் வரி		8,486,749	8,481,465
	பொருட்கள் மற்றும் சேவைகள் வரி		18,936,777	18,936,777
	பெறுமதிக்குறைவிற்கான ஏற்பாடு		(18,936,777)	(18,936,777)
	தேசிய பாதுகாப்பு வரி		2,612,349	2,612,349
	பெறுமதிக்குறைவிற்கான ஏற்பாடு		(2,612,349)	(2,612,349)
	இரட்டை வரி		-	-
			8,486,749	**8,481,465**
20	**முதிர்வுக்காக வைத்திருக்கப்படும் முதலீடுகள்**			
	திறைசேரி உண்டியல்களிலான முதலீடு		**464,999,999**	**447,289,305**
21	**குறுங்கால முதலீடுகள்**			
	நிலையான வைப்புக்களிலான முதலீடு	21.1	2,009,601	1,981,012
	அரச ஈட்டு, முதலீட்டு வங்கி - அலுவலர் குழாத்து கடன்கள் சார்பில்		24,258,604	23,552,575
			26,268,205	**25,533,587**

		குறிப்புகள்	2023	2022
21.1	**நிலையான வைப்புக்களிலான முதலீடு**			
			ரூபா.	ரூபா.
	இலங்கை வங்கி		1,310,700	1,310,700
	கொமர்ஷியல் பாங் ஒவ் சிலோன்		35,000	35,000
	கொமர்ஷியல் பாங் ஒவ் சிலோன் பிஎல்சி - கடன் பாதுகாப்பு மற்றும் வீடமைப்புக்		663,901	635,312
		21	2,009,601	1,981,012

22	**காசும் காசுக்கு சமமானவையும்**		
	கையிலுள்ள காசு	132,173	49,766
	கடலியல் வல்லுநருக்கான காசு (Cash to Master)	9,119,140	1,781,797
	வங்கியிலுள்ள காசு	1,296,402,265	727,755,385
	காசுப் பாய்ச்சற் கூற்றுக்கான மீதி	**1,305,653,577**	**729,586,947**

23	**கூறப்பட்ட மூலதனம்**		
	வழங்கப்பட்டதும் முழுமையாக செலுத்தப்பட்டதும்		
	ஒவ்வொன்றும் 10/= ரூபா படி 5,000,000 சாதாரண பங்குகள்	**50,000,000**	**50,000,000**

24 **உரிமைமுதல் மூலதனத்திற்கு எதிரான பங்களிப்பு**

மூலதனப் பங்களிப்பு, தொழிற்படு மூலதனத்திற்கான முற்பணங்கள் மற்றும் கப்பல் சேவைகளுக்கான புதிய பிரயாணி முனைவிடத்திலான முதலீடுகள் சார்பில் திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நிதியங்களை இது பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

25 மூலதன ஒதுக்கு

மக்கள் வங்கியிடமிருந்து பெறப்பட்ட ASTARSA கடன் மற்றும் திறைசேரி உத்தரவாதக் கடன் உள்ளடங்கலாக இக் கம்பனியின் சார்பில் திறைசேரியினால் செய்யப்பட்ட தீர்ப்பனவுகளை இது பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

26 மறுபடி விலைமதிப்பு ஒதுக்கு

2023/02/27 ஆம் திகதியன்று SLPA இடமிருந்து CSC இற்கு மாற்றப்பட்ட கொழும்பு 02, கொம்பனித் தெரு, கியூ வீதியில் அமைந்துள்ள காணியின் மறுபடி விலைமதிப்புடன் இந்த மறுபடி விலைமதிப்பு ஒதுக்கு தொடர்புடையது.

28 நீண்டகால கடன்பெறல்கள்

மக்கள் வங்கி - கப்பல் கடன்	28.1	15,330,225,172	15,046,963,632
மக்கள் வங்கி - வட்டி மூலதனமாக்கல் கடன்	28.2	781,720,627	985,927,982
		16,111,945,799	**16,032,891,614**

28.1 மக்கள் வங்கி - கப்பல் கடன்

ஆண்டுத் தொடக்கத்திலுள்ள மீதி		16,422,344,312	12,208,266,998
ஆண்டின் போதான கொடுப்பனவுகள்		(1,732,589,251)	(1,118,243,078)
செலாவணி இலாபம்		-	(36,000)
செலாவணி நட்டம்		2,186,126,691	5,332,356,392
		16,875,881,752	16,422,344,312
ஒரு வருடத்திற்குள் மீள்செலுத்தத்தக்கது	31	1,545,656,580	1,375,380,680
ஒரு வருடத்திற்குப் பின்னர் மீள்செலுத்தத்தக்கது	28	15,330,225,172	15,046,963,632

முழுப் பெறுமதியையும் காலப்பகுதியையும் உள்ளடக்குவதற்கான உத்தரவாதத்தை திறைசேரி வழங்கியுள்ளது.

28.2	**மக்கள் வங்கி - வட்டி மூலதனமாக்கல் கடன்**	குறிப்புகள்	2023	2022
			ரூபா.	ரூபா.
	ஆண்டுத் தொடக்கத்திலுள்ள மீதி		1,267,582,026	951,702,211
	ஆண்டின் போது செலுத்தப்பட்ட தவணைக் கட்டணங்கள்		(359,485,510)	(95,612,623)
	செலாவணி நட்டம்		190,147,698	411,492,438
	ஆண்டிறுதியிலுள்ள மீதி		1,098,244,214	1,267,582,026
	ஒரு வருடத்திற்குள் மீள்செலுத்தத்தக்கது	31	316,523,587	281,654,044
	ஒரு வருடத்திற்குப் பின்னர் மீள்செலுத்தத்தக்கது	28	781,720,627	985,927,982

முழுப் பெறுமதியையும் காலப்பகுதியையும் உள்ளடக்குவதற்கான உத்தரவாதத்தை திறைசேரி வழங்கியுள்ளது.

29 ஓய்வுபெறல் பயன் கடப்பாடு - பணிக்கொடை

ஆண்டுத் தொடக்கத்திலுள்ள மீதி		35,244,807	40,406,325
ஆண்டுக்கான ஏற்பாடு	29.1	3,712,753	(2,591,813)
		38,957,560	37,814,512
சென்மதி பணிக்கொடை		-	-
ஆண்டின் போது செய்யப்பட்ட கொடுப்பனவுகள்		(9,609,140)	(2,569,705)
ஆண்டிறுதியிலுள்ள மீதி		**29,348,420**	**35,244,807**

29.1 ஆண்டுக்கான ஏற்பாடு

நிகழ்கால சேவைக் கிரயம்		1,643,803	2,096,625
ஆண்டுக்கான வட்டிச் சாட்டுதல்		4,248,212	2,893,554
இடர் கணிப்பீடுசார் எடுகோள்களின் மாற்றங்களிலிருந்து எழுகின்ற நட்டம்		(2,179,262)	(7,581,992)
	29	3,712,753	(2,591,813)

பயன்படுத்தப்பட்ட பிரதான எடுகோள்கள் பின்வருமாறு.

கழிவீட்டுக் காரணி	15.00%	7.50%
எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால சம்பள அதிகரிப்பு	1.04%	1.17%
அலுவலர் குழாத்து புறள்வுக் காரணி	12.73%	6.78%
ஓய்வுபெறல் வயது	60 வருடங்கள்	62 வருடங்கள்

ஓய்வுபெறல் பயன் கடப்பாட்டை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட மாறிகள் பற்றிய முகாமையின் சிறந்த மதிப்பீடுகளின் அடிப்படையில் இவ் எடுகோள்கள் கம்பனியினால் விருத்திசெய்யப்பட்டுள்ளன. நீண்டகால அரசாங்க முறியின் சந்தை வீதங்களின் அடிப்படையில் கழிவீட்டுக் காரணி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

30 **வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள்**

வியாபார சென்மதிகள்	681,119,958	1,279,225,610
வைப்புகள்	4,898,310	3,557,414
கப்பல் கடனுக்கான சென்மதி வட்டி	983,259,229	149,421,266
ஏனையவை	123,489,555	123,503,429
	1,792,767,053	**1,555,707,720**

31 **குறுங்கால கடன்பெறல்கள்**

மக்கள் வங்கி - கப்பல் கடன்	**1,862,180,167**	**1,657,034,724**

32 நியதிச்சட்ட சென்மதிகள்

வருமான வரி	200,086,629	9,665,215
WHT சென்மதி	172,571	-
முத்திரைத் தீர்வை	30,424	28,374
பெறுமதி சேர்க்கப்பட்ட வரி	66,286,396	61,006,162
	266,576,020	**70,699,752**

33 அட்டுறு செலவுகள்

அட்டுறு செலவுகள்	**46,610,045**	**28,588,636**

34 எதிர்பாரா பொறுப்புகள்

தீர்ப்பனவுச் சாத்தியப்பாடு மிகக் குறைவாக காணப்படல் காரணமாக சாதாரண வியாபார நடவடிக்கையிலிருந்து எழும் சட்ட உரிமைக் கோரிக்கைகள் நியாயமாக்கப்பட வேண்டுமா என்பதையும் வளங்களின் வெளிப்பாய்ச்சலொன்றின் சாத்தியப்பாடு உள்ளதா என்பதையும் கருத்திற்கொள்வதற்கு அக்கோரிக்கைகள் தவிர நிதிக் கூற்றுக்களுக்கான சீராக்கங்களை அல்லது வெளிப்படுத்தலை தேவைப்படுத்திய, அறிக்கையிடல் காலப்பகுதியின் முடிவிலுள்ளவாறு பொருண்மையான எதிர்பாரா பொறுப்புகள் எவையும் காணப்படவில்லை. இம் மதிப்பீடானது கம்பனியின் சட்டப் பிரிவின் சட்ட அபிப்பிராயத்திற்கு ஒத்திசைவாக உள்ளது, ஆதலால், பின்வரும் விடயங்களுக்காக எந்தவொரு ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கவில்லை,

1. எம்வீ லங்கா மஹாபொல கப்பலானது 2011 ஆம் ஆண்டில் M/s Triple “S” Shipping கம்பனிக்கு வாடகைக்கு கொடுக்கப்பட்டது. கூறப்பட்ட கம்பனியானது சில வாடகைகளைச் செலுத்திய பின்னர் வாடகையைச் செலுத்த தவணை தவறியுள்ளதுடன் அதனைத் தொடர்ந்து கப்பற் பணியாளர் சம்பளங்கள் மற்றும் தொழிற்பாட்டுச் செலவுகளில் பெருமளவு நிலுவைத் தொகையுடன் கப்பலின் முறையான மீள்வழங்குகையின்றி கென்யாவின் மொம்பச துறைமுகத்தில் இக்கப்பலைக் கைவிட்டது அத்துடன் இக்கப்பலானது கைப்பற்றப்பட்டு கடல்சார் அதிகாரிகளினால் தடுத்துவைக்கப்பட்டது. M/s Triple “S” Shipping Ltd நிறுவனத்திலிருந்து சகல நிலுவைகளையும் அறவிடும் நோக்குடன், அவர்களுடன் கைச்சாத்திடப்பட்ட வாடகைக்கமர்த்தல் தரப்புக்கு ஏற்ப நடுத்தீர்ப்புச் செய்முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது அது செய்முறையில் உள்ளது.

   இரு தரப்பினர்களினதும் முன்னிலையில் இலங்கை தேசிய நடுத்தீர்ப்பு நிலையத்தில் 2021.01.25 ஆம் திகதியன்று விசாரணை நடாத்தப்பட்டதுடன், முன்னாள் தனித்த நடுத்தீர்ப்பாளரானவர், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தலைவராக அவர் நியமிக்கப்பட்டுள்ளார் என்று இத்தரப்பினர்களுக்கு அறிவித்தார் அத்துடன் உரிமைக்கோரிக்கையாளர் அரசுக்குடமையான கம்பனியொன்றாக இருப்பதனால் உரிமைக்கோரிக்கையாளருடன் தொடர்புற்ற விடயமொன்று அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு தொடர்புபடுத்தப்படின் சாத்தியமான ஆர்வ முரண்பாடொன்று காணப்பட முடியும். அதற்கிணங்க, இந்த நடுத்தீர்ப்பாளரானவர் கூறப்பட்ட நடுத்தீர்ப்பிலிருந்து அவராகவே பின்வாங்கினார் அத்துடன்/அல்லது பதவி விலகினார். அதற்கிணங்க, நாம் இரு நடுத்தீர்ப்பாளர்களை பெயர்குறித்து நியமித்ததுடன் பதிவுத்தபால் மூலம் அவர்களுக்கு அறிவித்தோம், இருப்பினும் Triple “S” Shipping நிறுவனத்திலிருந்து எந்தவித பதிலும் இல்லை. புதிய நடுத்தீர்ப்பாளர் ஒருவரை நியமிக்கும் பொருட்டு நடுத்தீர்ப்புச் சட்ட ஏற்பாடுகளுக்கு ஏற்ப செயற்படுவதன் மூலம் கூறப்பட்ட அறிவித்தலில் விதித்துரைக்கப்பட்டவாறு நடவடிக்கையினைத் தொடர்வதே அடுத்த படிமுறையாகும். வர்த்தக மேல் நீதிமன்றத்திலிருந்து (CHC) பதிலீட்டு நடுத்தீர்ப்பாளர் ஒருவரை நியமிப்பதற்கான நடவடிக்கைகளை CSC இன் சட்டப் பிரிவு எடுத்துள்ளது. அதற்கிணங்க, நடுத்தீர்ப்புச் சட்டத்தின் 9 ஆம் 7 ஆம் பிரிவுகளில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு, வர்த்தக மேல் நீதிமன்றத்தினால் நடுத்தீர்ப்பாளர் ஒருவரை நியமிப்பதைக் கோரி வர்த்தக மேல் நீதிமன்றத்திற்கு மனு மற்றும் சத்தியக்கடதாசி மூலம் விண்ணப்பமொன்று செய்யப்பட்டது. வர்த்தக மேல் நீதிமன்றத்தில் புதிய நடுத்தீர்ப்பாளர் ஒருவரை

நியமிப்பதற்கான விண்ணப்பம் செய்முறையில் உள்ளதுடன் அரசிறை அறிக்கைக்காக 2023 ஒக்டோபர் 25 ஆம் திகதியன்று கோரப்படும்.

2. இலங்கை மின்சார சபைக்கு (CEB) சொந்தமான புத்தளத்திலுள்ள “லக்விஜய” மின்நிலையத்திற்கான நிலக்கரிப் பெறுகை பிரிவான லங்கா கோல் கொம்பனி (பிறைவெட்) லிமிட்டெட் (LCC) நிறுவனம் சார்பில் நிலக்கரியை வழங்கும் பொருட்டு இந்தியாவின் மும்பையிலுள்ள எம்/எஸ். றௌரியன் அயன் & ஸ்றீல் கொம்பனியுடன் (TISC) உடன்படிக்கையொன்றை இக் கம்பனி கைச்சாத்திட்டது. TISC இனால் வழங்கப்பட்ட நிலக்கரியின் தரம்சார் பிரச்சினையொன்று காரணமாக கூறப்பட்ட உடன்படிக்கையின் கீழான நிலக்கரி வழங்கலை இடைநிறுத்தி வைக்கவேண்டியிருந்தது. சட்டமா அதிபர் திணைக்களத்தினால் ஆலோசிக்கப்பட்டவாறு சுமூகமான தீர்வொன்றை எட்டும் பொருட்டு அமைச்சரவையினால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அக்குழு அறிக்கையொன்றைத் தொகுத்து மேலதிக நடவடிக்கையின் பொருட்டு வரிசை அமைச்சுக்கு சமர்ப்பித்தது. அதன்பின்னர் வரிசை அமைச்சானது அவ்வறிக்கையை அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்கு முன்னர் இலங்கை மின்சார சபையினதும் லங்கா கோல் கொம்பனி (பிறைவெட்) லிமிட்டெட் (LCC) நிறுவனத்தினதும் மீளாய்வு மற்றும் கருத்துகளைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு அவற்றிடம் சமர்ப்பித்துள்ளது. அறியத்தரப்பட்டவாறு கருத்துகளும் கரிசனைகளும் வரிசை அமைச்சுக்கு இன்னமும் கிடைக்கப்பெறவில்லை.

3. வெளிநாட்டு கப்பல் உரிமையாளருக்கும் மசகு எண்ணையை கொண்டுசெல்வதற்காக வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனமானது யாரிடமிருந்து கப்பலை வாடகைக்கமர்த்தியதோ அச் சட்டரீதியான பதிவுசெய்யப்பட்ட கப்பல் உரிமையாளருக்கும் இடையில் எழுந்த பிணக்கொன்றின் காரணமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்காக மசகு எண்ணையை எடுத்துச்செல்வதை இடைநிறுத்த வேண்டியிருந்தது. இவ் இடைநிறுத்தலானது, வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்திற்கும், சட்டரீதியான பதிவுசெய்யப்பட்ட கப்பல் உரிமையாளரான எம்எஸ் லூனா ஷிப்பிங் நிறுவனத்திற்கும் அத்துடன் இறுதியாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கும் இடையில் நிதிப் பிணக்கினை விளைவித்தது. எம்எஸ் லூனா ஷிப்பிங் நிறுவனம் மற்றும் வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்துடனான நிதிப் பிணக்கானது சட்டமா அதிபர் திணைக்களத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதுடன் அறவீட்டுத் தெரிவுக்காக அவற்றுடன் கைச்சாத்திடப்பட்ட COA இற்கமைவாக லண்டனில் நடுத்தீர்ப்புச் செய்முறை முன்னெடுக்கப்பட முடியும் என்பதே சட்டமா அதிபரின் கருத்தாக அமைந்தது. அதேநேரம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடனான பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தினதும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினதும் அத்துடன் திறைசேரியினதும் உயர் தரவரிசையிலுள்ள உத்தியோகத்தர்களைக் கொண்டு குழுவொன்று நியமிக்கப்பட்டது. அதன் செய்முறையில் குழுவானது, குழுவின் அறிக்கையை முற்றாக்கும் பொருட்டு சில சட்டப் பிரச்சினைகள் பற்றிய தெளிவூட்டல் கருதி சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு கூட்டுச் சமர்ப்பிப்பொன்றைச் செய்யுமாறு வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்திடமும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமும் கோரிக்கை விடுத்துள்ளது. கூட்டுச் சமர்ப்பிப்பைத் தயார்படுத்தலானது செய்முறையில் உள்ளது. இச்சூழ்நிலைகளில், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடனான பிரச்சினை தீர்க்கப்படும் வரை லண்டனிலுள்ள லூனா ஷிப்பிங் நிறுவனத்திற்கு எதிராக நடுத்தீர்ப்புச்

செய்முறையின் ஆரம்பிப்பை வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை தள்ளிவைத்தது. கூறப்பட்ட குழுவானது அதன் இடைக்கால அறிக்கையில், கூட்டுக் கோரிக்கையொன்றைச் சமர்ப்பித்து சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து தெளிவூட்டலைப் பெறுவதற்கு சில சட்டப் பிரச்சினைகளைப் பாரப்படுத்துமாறு பரிந்துரை செய்தது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திலிருந்து வரைவுக் கடிதத்தின் உடன்பாடு இன்னமும் பெற்றுக்கொள்ளப்படவில்லை. 2020/05/27 ஆம் திகதியன்று எழுத்து மூலம் CSC செய்துள்ள, CSC இலிருந்து CPC இற்கான இறுதிக் கடிதத் தொடர்பானது சான்றுப்படுத்தப்பட்ட ஆவணங்களை முன்னளிக்குமாறு அவர்களைக் கோருகின்றது. எந்தவொரு பதிலையும் இதுவரை CSC பெற்றுக்கொள்ளாத படியால் 2022/11/09 ஆம் திகதியன்று மேலுமொரு நினைவூட்டலை அனுப்பியது.

4. 2020 ஏப்பிறல் 28 ஆம் திகதியளவில், சீன ஆள்புல கடல் பகுதிகளில் எம்.வீ.சிலோன் பிறீஸ் கப்பலுக்கும் மீன்பிடிப் படகொன்றுக்கும் (FV) இடையில் மோதல் சம்பவம் ஒன்று அறிக்கையிடப்பட்டது. இவ்விடயமானது மோதல் பொறுப்புகளின் கீழ் கருத்திற்கொள்ளப்பட்டது. சீனாவில் தொடரப்பட்ட சட்ட நடவடிக்கையில் எதிர்பார்க்கப்பட்ட உயர் செலவுகளைக் கருத்திற்கொண்டு உரிமைக்கோரிக்கையின் முழுமையானதும் இறுதியுமான தீர்ப்பனவாக 20,149/- ஐ.அ.டொலர் கொண்ட கொடுப்பனவுடன் CSC இற்கும் மீன்பிடிப் படகிற்கும் இடையில் தீர்ப்பனவு உடன்படிக்கையினைக் கைச்சாத்திட்டதன் பேரில் இவ்விடயம் ஏற்கனவே தீர்க்கப்பட்டுள்ளது. அதேநேரம், மீன்பிடிப் படகானது Club நிறுவனப் பொறுப்பினை மீளளித்து சகல உரிமைக்கோரிக்கைகளிலிருந்தும் CSC ஐ விடுவித்துள்ளது. காப்புறுதித் தொடர்பாளரான ஷங்ஹாய் கிளையின் Huatai Insurance Agency & Consultant Services Ltd நிறுவனமானது, தீர்ப்பனவுச் செய்முறையில் அவர்கள் ஆற்றிய சேவைகள் தொடர்பில் 4,304/- ஐ.அ.டொலர் கொண்ட கட்டணங்களுக்காக விலைப்பட்டியலை அனுப்பியிருந்தது. அதற்கிணங்க, விலைப்பட்டியலில் அனுப்பப்பட்டவாறு பணவனுப்பலுக்கான ஒழுங்குகளை CSC மேற்கொண்டது.

5. **எம்வீ லியோபோல்ட் மற்றும் எம்வீ சைக்லேட் கப்பல்களுடன் எம்வீ சிலோன் பிறீஸ் கப்பலின் மோதல் சம்பவங்கள்**

மொத்தமாக 60,100 மெ.தொன் இரும்புத் தாதுக் குருணிகளை இறக்குவதற்கு இந்தியாவின் பாரதீப் துறைமுகத்திலிருந்து சீனாவின் லியன்யுங்காங் துறைமுகத்திற்கு காலம்சார் வாடகைக்கமர்த்தல் கடற்பயணத்தில் எம்வீ சிலோன் பிறீஸ் கப்பல் ஈடுபட்டது. கப்பல் எரிபொருள் அறைக்கு எரிபொருள் வழங்கலுக்கான நிறுத்தத்திற்காக 2021/06/11 ஆம் திகதியன்று சிங்கப்பூர் துறைமுகத்தில் அக்கப்பல் தரித்துநின்றது.

1 ஆவது மோதல் (எம்வீ லியோபோல்ட் எல்டி (Mv.LeopoldLD))

லியோபோல்ட் செலவு 230,000/- ஐ.அ.டொலராக மதிப்பிடப்பட்டுள்ளதென்று Club நிறுவனம் அறிவித்திருந்தது, அதேவேளை தீர்ப்பனவைக் கோரி CSC இன் பொறுப்புப் பங்கை 85%-90% ஆக பிரேரித்திருந்தது.

Club நிறுவனத்தினால் குறிப்பிடப்பட்டவாறு மோதலொன்றைத் தவிர்ப்பதில் LD இன் பலவீனங்கள் தொடர்பில் கழிவொன்று உண்டு என்ற நியதிகளின்படி இவ்விடயத்தைத் தீர்க்குமாறு P & I Club நிறுவனம், TYSERS (காப்புறுதித் தரகர்) மற்றும் SLIC ஆகியன CSC இற்கு வலுவாக ஆலோசனை வழங்கின. TYSERS நிறுவனத்தினால் ஆலோசனை வழங்கப்பட்டவாறு சிங்கப்பூரில் இருநாள் சட்டச் செலவு அண்ணளவாக 250,000/- ஐ.அ.டொலராக இருக்கும். CB மற்றும் LLD தரப்பினர்களுக்கிடையே பகிரப்படும் பொறுப்புச் சதவீதமானது CSC இன் சிரேட்ட முகாமை, Club தொடர்பாளர்கள் மற்றும் LLD தரப்பினர்கள் ஆகியோருடன் இணங்கிக்கொள்ளப்பட்டது அத்துடன் மாறாக, இறுதியாக அனைத்துத் தரப்பினர்களும் தீர்ப்பனவு உடன்படிக்கையொன்றைக் கைச்சாத்திட்ட பின்னர் 220,000/- ஐ.அ.டொலர் கொண்ட மொத்தத் தீர்ப்பனவுத் தொகை சார்பில் விடய உரிமைக்கோரிக்கையினை தீர்ப்பதற்கு உடன்பட்டுள்ளனர், அத்துடன் வரையறுக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது (SLIC) பின்வருவனவற்றை உள்ளடக்கும் பகுதிக்காக, கீழுள்ள கணிப்பீட்டிற்கு அமைவாக TYSERS (காப்புறுதித் தரகர்) நிறுவனத்திற்கு பணவனுப்பலை மேற்கொள்ளும் என்று அறிவித்தது. இரு தரப்பினர்களினதும் Insurance Clubs ஆல் இணங்கிக்கொள்ளப்பட்டவாறு, LeopoldLD ஆனது சரியாக அவதானிக்கத் தவறிய அவர்களின் பலவீனத்திற்கான கழிவொன்றுடன் 220,000/- ஐ.அ.டொலர் தொகையில் (உடன்பட்ட தொகையில்) இப்பிணக்கினைத் தீர்ப்பதற்கு உடன்பட்டுள்ளது.

இரு காப்புறுதிக் கொள்கை ஆவணங்களுக்கும் (P&I மற்றும் H&M) அமைவாக கழிபடக்கூடிய தொகையான 115,000/- ஐ.அ.டொலரை, தீர்ப்பனவு உடன்படிக்கையைக் கைச்சாத்திட்ட திகதியிலிருந்து 21 நாட்களுக்குள் செலுத்துவதற்கு CSC பொறுப்பைக் கொண்டிருந்தது. எனினும், CSC ஆனது வழக்கைத் தொடருவதாயிருந்தால், மொத்தச் செலவானது 220,000/- ஐ.அ.டொலரை விஞ்சும் (லியோபோல்ட் சேதார உரிமைக் கோரிக்கை மற்றும் சட்ட நடவடிக்கைச் செலவு). “Clubs ஆல் ஆலோசிக்கப்பட்டவாறு அதாவது, லியோபோல்ட் எல்டி யுடன் 220,000/- ஐ.அ.டொலர் அனைத்தும் உள்ளடங்கலாக தீர்ப்பனவுக் கொடைமுனைவுடன் நடவடிக்கையைத் தொடர்தல்” சம்பந்தமாக 2023.06.01 ஆம் திகதியன்று நடாத்தப்பட்ட விசேட சபைக் கூட்டத்தில், இரு தரப்பினராலும் சிங்கப்பூரில் பிணக்கு வழக்காடப்படும் பட்சத்தில் CSC இனால் உறப்பட வேண்டியிருக்கும் எதிர்கால அளவுக்கதிகமான செலவினங்களைக் கருத்திற்கொண்டு, 220,000/- ஐ.அ.டொலர் கொண்ட அனைத்தும் உள்ளடங்கிய தீர்ப்பனவொன்றுக்காக CSC இற்கும் லியோபோல்ட் இற்கும் இடையில் இடைத்தரகராக விளங்கும் P&I Club இன் பிரேரிப்பை ஏற்பதற்கு பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கியிருந்தது. மேற்போந்த தீர்ப்பனவுக் கொடுப்பனவில், H&M

மற்றும் P&I காப்புறுதிக் கொள்கை ஆவணத்தின் கழிபடக்கூடிய பகுதியான 115,000/- ஐ.அ.டொலரை SLIC இற்கு CSC செலுத்தவுள்ளது. 2021 யூன் 12 ஆம் திகதியன்று எம்.வீ. சிலோன் பிறீஸ் கப்பலில் கடமையிலிருந்த கப்பல் பணியாளர் உறுப்பினர்களால் CSC இற்கு விளைவிக்கப்பட்ட நிதி நட்டத்தைக் கருத்திற்கொண்டு, லியோபோல்ட் மோதலுக்குப் பொறுப்பானவர்களாக இனங்காணப்பட்ட சிலோன் பிறீஸ் கப்பலின் அக்கப்பல் பணியாளர் உறுப்பினர்களுக்கு வலியுறுத்தல் கடிதங்களை CSC அனுப்பியது. CSC ஆனது H&M மற்றும் P&I காப்புறுதிக் கொள்கை ஆவணத்தின் கழிபடக்கூடிய பகுதியான 115,000/- ஐ.அ. டொலரை செலுத்தி மேற்போந்த பிணக்கை ஏற்கனவே தீர்த்துள்ளது. CSC ஆனது அதன் செலவு உரிமைக்கோரிக்கையினை H&M Insures இற்கு சமர்ப்பித்துள்ளது, அது ஒரு நியமிக்கப்பட்ட நட்டச் சீராக்குநரின் மீளாய்வின் கீழ் உள்ளது.

2 ஆவது மோதல் (எம்வீ சைக்லேட்)

எம்வீ சிலோன் பிறீஸ் கப்பலானது 2021/06/12 ஆம் திகதியன்று நங்கூரமிடல் பகுதியில் காணப்பட்ட போது, வெளித் துறைமுகப் பகுதியில் தரித்துநின்ற எம்வீ சைக்லேட் எனும் பெயரைக்கொண்ட மற்றுமொரு கப்பலை நோக்கி இழுத்தடிக்கப்பட்டு, எம்வீ சைக்லேட் கப்பலுக்கும் அதேபோன்று இக்கப்பலுக்கும் சேதத்தை உண்டுபண்ணியது. விடய மோதல் காரணமாக, CSC இனால் உறப்பட்ட சேதாரச் செலவானது செல்லுபடியாகக்கூடிய நிரூபண ஆவணங்களுடன் செலவுகளை சரிபார்ப்பதற்கு உட்பட்டு அண்ணளவாக 1,065,130.65 ஐ.அ. டொலர் தொகையாகும். சைக்லேட்டின் மதிப்பிடப்பட்ட செலவு உரிமைக்கோரிக்கையானது கிட்டத்தட்ட 1.98 மில்லியன் ஐ.அ. டொலராகவிருந்த போதிலும், சேதாரத் திருத்தவேலைகளைப் பூர்த்திசெய்வதன் பேரில், செல்லுபடியாகக்கூடிய ஆவணங்களுடன் நிரூபிப்பதற்கு உட்பட்டு 285,037.59 ஐ.அ.டொலராக (வட்டி மற்றும் செலவு சேர்த்து) சைக்லேட்டின் அதன் உண்மையான செலவு உரிமைக்கோரிக்கையினை அது சமர்ப்பித்துள்ளது. எமது கப்பலுக்கு மதிப்பிடப்பட்ட சேதமானது கழிபடக்கூடிய மட்டத்திற்கு (100,000/-ஐ.அ.டொலர்) மேலாக இருந்தமையால் H&M காப்புறுதிக் காப்பீடு செயற்படுத்தப்பட்ட மோதல் பொறுப்புக்களின் கீழ் இவ்விடயம் கருத்திற்கொள்ளப்பட்டது. CSC இன் உடன்பாட்டுடன் P & I Club நிறுவனத்தினால் மன்றாடிமார் (சொலிசிட்டேர்ஸ்) நியமிக்கப்பட்டுள்ளதுடன் இரு தரப்பினர்களுக்குமிடையில் பிணையங்களைப் பரிமாறிக்கொள்வதற்கான இணக்கப்பேச்சின் கீழ் இவ்விடயம் தற்போது உள்ளது. CSC ஆனது சைக்லேட் கப்பலுக்கான உண்மையான செலவுக்காக கோரிக்கையிட்டுள்ளது. அதற்கிணங்க, பொறுப்பை ஏற்பதற்கான கோரிக்கையுடன் ஒன்றுசேர்ந்த சைக்லேட்டின் உரிமைக்கோரிக்கை மற்றும் எம்வீ சைக்லேட் நலன் சார்பில் நியமிக்கப்பட்டுள்ள the Wikborg Rein LLP நிறுவனத்தினால் முன்னளிக்கப்பட்ட உரிமைக்கோரிக்கையினைக் கையாள்வதற்கு காலத்தை நீட்டிப்பதற்கான மேலதிக கோரிக்கை என்பன தொடர்பில் CJC (Campbell Johnston Clark Limited) நிறுவனமானது CSC இற்கு அறிவித்துள்ளது. அதற்கிணங்க, சைக்லேட்டின் உரிமைக்கோரிக்கையானது 285,037.59 ஐ.அ.டொலர் (வட்டி மற்றும் செலவுகள் சேர்த்து) ஆகும். CJC நிறுவனத்தினர், தற்போது தாம் சைக்லேட்டின் உரிமைக்கோரிக்கையை மீளாய்வுசெய்து வருகின்றனர் என்றும் அவர்களின் சான்றுகளின் மீளாய்வை அவர்கள் பூர்த்திசெய்ததும் 285,037.59 ஐ.அ. டொலரை விட அது குறைவான பெறுமதியுடையதா என்று ஆலோசனை வழங்குவர் என்றும் அறிவித்துள்ளனர். Club

நிறுவனத்தினால் ஆலோசிக்கப்பட்டவாறு, 2023 யூன் 12 ஆம் திகதியன்று சைக்லேட்டின் உரிமைக்கோரிக்கை முடிவடைந்திருந்த படியால், இம்மோதலின் பண்புகளானவை CSC இற்கு முழுமையாகப் பாதகமாகத் தென்படுவதால் CSC உடன் இணக்கப்பேச்சுக்கு வருமாறு சைக்லேட் நிறுவனத்தினரை தூண்டுவதற்கு அவர்களுக்கு கால நீட்டிப்பொன்றை CSC வழங்கியுள்ளது. 2021 யூன் 12 ஆம் திகதியன்று எம்.வீ. சிலோன் பிறீஸ் கப்பலில் கடமையிலிருந்த கப்பல் பணியாளர் உறுப்பினர்களின் செயல் காரணமாக CSC இனால் உறப்பட்ட நிதி நட்டத்தைக் கருத்திற்கொண்டு, லியோபோல்ட் மோதலுக்குப் பொறுப்பானவர்களாக இனங்காணப்பட்ட சிலோன் பிறீஸ் கப்பலின் அக்கப்பல் பணியாளர் உறுப்பினர்களுக்கு வலியுறுத்தல் கடிதங்களை CSC அனுப்பியது.

6. மரணமடைந்த பயிலிளவல்

எம்.வீ.சிலோன் பிறின்செஸ் கப்பலானது 2022.11.27 ஆம் திகதியன்று ஐவரி கோஸ்ரின் அபிட்ஜன் நகரிலிருந்து பிறேசிலின் பரனாகுவா துறைமுகத்துக்கு பயணித்தது. அந்தக் கடற்பயணத்தின் போது, 2022.09.01 ஆம் திகதிய கடலோடிகளின் பணிக்கமர்த்தல் உடன்படிக்கைக்கு (SEA) ஏற்ப எம்.வீ.சிலோன் பிறின்செஸ் கப்பலின் இயந்திரப் பயிலிளவல் ஒருவராக பணிக்கமர்த்தப்பட்ட திரு. டபிள்யு.எம்.எஸ்.கே.பி. குமார என்பவர் 2022.12.02 ஆம் திகதியன்று நோய்வாய்ப்பட்டு மரணித்தார்.

மரணித்த பயிலிளவல் உத்தியோகத்தரின் பின் உரித்தாளர்களால் ஏற்றுக்கொள்வதற்கு இணங்கப்பட்டுள்ள 10,000.00 ஐ.அ. டொலர் கொண்ட மரண இழப்பீட்டுக் கொடுப்பனவொன்றை அவருக்கு Club நிறுவனம் பரிந்துரைத்துள்ளது. Steamship Mutual நிறுவனத்தின் விதிகளுக்கு ஒத்திசைவாக சம்பளம் செலுத்தப்படும் அடிப்படையில் (Pay-to-be paid basis) இழப்பீட்டை P & I Club நிறுவனம் மீளளிக்கும்.

அதற்கிணங்க, CSC ஆனது மரணித்த பயிலிளவலின் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பின் உரித்தாளருக்கு கூறப்பட்ட தொகையைச் செலுத்துவதற்குத் தேவையான சட்ட ஆவணங்களைத் தயாரிக்கும் செய்முறையில் உள்ளதுடன் அதன் பின்னர் Club நிறுவனத்திடமிருந்து அதேதொகையை மீளப்பெறும்.

7. வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம் (CSC) எதிர். M.I. International (Pvt) Limited மற்றும் 02 ஏனையோர், மாவட்ட நீதிமன்றம் (D.C.), கொழும்பு, வழக்கு இல. DMR 2493/22

WP KY – 7714 எனும் இலக்கங்கொண்ட வாகனமானது வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான ஒரு வாகனமாகும் என்பதுடன் 2020 செப்டெம்பர் 18 ஆம் திகதியன்று வெள்ளிக்கிழமை 19.05 மணியளவில் குருந்துவத்த பொலிஸ் பிரதேசத்தில் ராஜகீய மாவத்தையில் திரு. மொஹமட் இம்ரான் இன்பாஸ் (முகவரி: இல.05, 1 ஆவது சப்பல் வீதி, கொழும்பு 06) என்பவருக்குச் சொந்தமான WP CAV 7862 எனும் இலக்கங்கொண்ட வாகனத்துடன் இது விபத்திற்கு உள்ளாகியிருந்தது.

WP KY 7714 எனும் இலக்கங்கொண்ட வாகனத்திற்கு ஏற்பட்ட கூறப்பட்ட சேதத்தை திருத்துவதற்கு United Motors Lanka PLC நிறுவனத்திடமிருந்து மதிப்பீடொன்றை CSC பெற்றது. அதற்கிணங்க

கூறப்பட்ட சேதமுற்ற வாகனத்தை திருத்துவதற்கான மொத்தச் செலவு 1,000,012.06 ரூபாவாக இருந்தது. அதன் பின்னர், WP CAV 7862 எனும் இலக்கங்கொண்ட வாகனத்தின் உரிமையாளரான திரு. மொஹமட் இம்ரான் மொஹமட் இன்பாஸுக்கு எதிராக சட்ட நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கும் விடய வாகன விபத்து காரணமாக CSC இற்கு ஏற்பட்ட கூறப்பட்ட சேதத்துக்கான பணத்தினையும் செலவையும் அறவிடுவதற்கும் சட்டமா அதிபர் திணைக்களத்திடமிருந்து சட்ட ஆலோசனைகளை CSC பெற்றது.

அதற்கிணங்க, சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைக்கு அமைவாக, வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான KY 7714 எனும் இலக்கங்கொண்ட வாகனத்திற்கு ஏற்பட்ட சேதம் தொடர்பில் நிலுவையாகவுள்ள மற்றும் செலுத்த வேண்டிய தொகையான 1,000,012.06 ரூபா கொண்ட தொகையினை அறவிடுவதற்காக HOVPTDP00360/20 எனும் இலக்கங்கொண்ட காப்பீட்டின் கீழ் Amana Takaful PLC நிறுவனத்துடன் காப்புறுதி செய்யப்பட்ட CAV 7862 எனும் இலக்கங்கொண்ட வாகனத்தின் உரிமையாளரான M.I. International (Pvt) Limited நிறுவனம் மற்றும் குறித்த விபத்தில் குறித்த வாகனத்தின் சாரதியான திரு. மொஹமட் இம்ரான் மொஹமட் இன்பாஸுக்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கு இல. DMR 2493/22 என்பதில் சட்ட முன்னெடுப்புகளை வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம் ஆரம்பித்தது.

மேற்போந்த வகையான வழக்கின் 1 ஆவது அழைப்புத் திகதியானது 2022.11.18 ஆம் திகதியன்று கொழும்பின் மாவட்ட நீதிமன்ற இல. 08 இல் எடுக்கப்பட்டது. 2022/11/18 ஆம் திகதியன்று விடுக்கப்பட்ட அழைப்பாணைகள் சென்றடைவதற்காக 2023/09/01 ஆம் திகதியன்று குறித்த வழக்கை அழைப்பதற்கு நீதிமன்றம் தீர்மானித்தது.

35 தொடர்புபட்ட தரப்பினர்களின் வெளிப்படுத்தல்கள் (தொடர்ச்சி)

35.1 பிரதான முகாமைத்துவ ஆளணியினருடனான (KMPs) கொடுக்கல்வாங்கல்கள்

இலங்கை கணக்கீட்டு நியமங்கள், LKAS 24 - "தொடர்புபட்ட தரப்பினர் வெளிப்படுத்தல்கள்" என்பதற்கிணங்க, நிறுவனத்தின் செயற்பாடுகளை நேரடியாகவோ மறைமுகமாகவோ திட்டமிட்டு, வழிப்படுத்திக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தையும் பொறுப்பையும் கொண்டுள்ளவர்களே பிரதான முகாமைத்துவ ஆளணியினர் ஆவர். அதற்கிணங்க, பணிப்பாளர்கள், பொது முகாமையாளர் மற்றும் செயற்பாட்டு முகாமையாளர்கள் இக் கம்பனியின் பிரதான முகாமைத்துவ ஆளணியினராக வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

பிரதான முகாமைத்துவ ஆளணியினருடனான கொடுக்கல்வாங்கல்கள்

	2023	**2022**
	ரூபா.	**ரூபா.**
ஊதியமும் ஏனைய குறுங்கால தொழில் பயன்களும்	37,120,418	32,898,309
செலுத்தவேண்டிய மீதி - கடன்களும் முற்பணங்களும்	5,345,916	4,038,672
செலுத்தவேண்டிய மீதி - தொழிலுக்குப் பின்னரான பயன்கள்	11,239,068	10,546,800

35.2 தொடர்புபட்ட நிறுவனங்களுடனான கொடுக்கல் வாங்கல்கள்

கம்பனி மேற்கொண்ட முக்கியமான தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல்வாங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

இலங்கை அரசாங்கம், அரசுக்குடமையான தொழில்முயற்சிகள், ஏனைய அரசாங்கத்துடன் தொடர்புபட்ட நிறுவனங்களுடனான கொடுக்கல்வாங்கல்கள்

இலங்கை அரசாங்கமே இக்கம்பனியின் மூலதனப் பங்குதாரர் ஆவதுடன் ஆதலால் இதன் நடவடிக்கை மீதான கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளது. அதற்கிணங்க, இலங்கை அரசாங்கத்தையும் தொடர்புபட்ட தரப்பினர்களாக இலங்கை அரசாங்கத்தினால் (அரசாங்கத்துடன் தொடர்புபட்ட நிறுவனங்களினால்) கட்டுப்படுத்தப்படும், கூட்டாகக் கட்டுப்படுத்தப்படும் அல்லது குறிப்பிடத்தக்களவு செல்வாக்கிற்கு உட்படுத்தப்படும் ஏனைய நிறுவனங்களையும் இக்கம்பனி கரிசனையிற் கொண்டுள்ளது.

தொடர்புபட்ட தரப்பினர்கள்	கொடுக்கல் வாங்கல்களின் தன்மை	2022/04/01 ஆம் திகதியிலுள்ள வாறு மீதி (செலுத்தவேண்டியது)/ வருமதி ரூபா.	கொடுக்கல் வாங்கல் பெறுமதி	2023/03/31 ஆம் திகதியிலுள்ளவாறு மீதி (செலுத்தவேண்டியது)/ வருமதி ரூபா.
இலங்கை அரசாங்கம்	சரக்குக் கட்டணங்கள், வாடகைக்கமர்த்தல், கொள்கலன் வாடகை, அப்புறப்படுத்தல் மற்றும் முன்னளித்தல் அத்துடன் ஏனைய கட்டணங்கள்	378,208,191	398654813	
	தீர்ப்பனவுகள்		(625,256,772.43)	151,606,232
அரசுக்குடமையான தொழில்முயற்சிகள்	சரக்குக் கட்டணங்கள், அப்புறப்படுத்தல் மற்றும் முன்னளித்தல்	119,902,944	213,850,065	

	அத்துடன் ஏனைய கட்டணங்கள்			
	தீர்ப்பனவுகள்		(223,307,961)	**110,445,048**
லங்கா கோல் கம்பனி	சரக்குக் கட்டணங்கள், இறக்குதல் மற்றும் எரிபொருள் அறை அதிகரிப்பு கட்டணங்கள்	1,281,722,990	156,053,321.030	
	தீர்ப்பனவுகள்		(140,301,904.07)	**1,297,474,407**
ஏனைய அரசாங்கத்துடன் தொடர்புபட்ட நிறுவனங்கள்	அப்புறப்படுத்தல் மற்றும் முன்னளித்தல் அத்துடன் ஏனைய கட்டணங்கள்	2,432,428	1,598,040	
	தீர்ப்பனவுகள்		**(1,996,198.24)**	2,034,269

36 அறிக்கையிடல் காலப்பகுதியின் முடிவின் பின்னரான நிகழ்வுகள்

நிதிக் கூற்றுக்களுக்கான சீராக்கங்களை அல்லது வெளிப்படுத்தல்களை தேவைப்படுத்தும், நிதிநிலமைக் கூற்றுத் திகதியிலிருந்து எந்தவொரு சூழ்நிலையும் எழுந்திருக்கவில்லை.

37 மூலதனக் கடப்பாடுகள்

இக் கம்பனியானது 2014 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதியன்று Avic International Beijing Company Ltd (சீனா) நிறுவனத்திடமிருந்து 70 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் தொகைக்கு பயிற்சி நோக்கத்துடன் சேர்த்து இரு புதிய 63,600 DWT Ultramax தொகைச்சரக்குக் கப்பல்களை (Bulkers) கொள்வனவு செய்வதற்கு அர்ப்பணிப்புச் செய்துள்ளது. 2013 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 23 ஆம் திகதியன்று கோரிக்கையிடப்படாத பிரேரிப்பின் கீழ் பயிற்சி நோக்கத்துடன் சேர்த்து இரு புதிய 63,600 DWT Ultramax தொகைச்சரக்குக் கப்பல்களின் கொள்வனவை அமைச்சரவை அங்கீகரித்தது.

கொள்வனவாளர் கடன் நியதிகளின் கீழ் வழங்குநருடன் உடன்படிக்கையொன்றை இக்கம்பனி கைச்சாத்திட்டுள்ளதுடன், ஆதலால் இக்கம்பனியானது 06 மாத LIBOR + 5.5% p.a. (06 மாத LIBOR + வருடமொன்றுக்கு 5.5%) கொண்ட வட்டிவீதத்துடன் 70 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் தொகையினைக் கொண்ட கடன் வசதியினை மக்கள் வங்கியிடமிருந்து பெற்றுக்கொள்வதன் மூலம் அதன் நிதித் தேவைப்பாடுகளைக் கோரியுள்ளது. மேலும், மேற்படி கடனிலிருந்து எழுந்துள்ள வட்டியைச் செலுத்தும் பொருட்டு 06 மாத LIBOR + 3% p.a. கொண்ட வட்டிவீதத்துடன் 10 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் கொண்ட மேலதிக தொகையினை மக்கள் வங்கி வழங்கியுள்ளது. வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம் 5.5 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலரை மாத்திரமே பயன்படுத்தியிருந்தது.

நிதி நிலமைக் கூற்றின் திகதியிலுள்ளவாறு, வங்கிக்கு சென்மதியாகவுள்ள தொகை 56,223,842.97 ஐக்கிய அமெரிக்க டொலர்கள் ஆகும்.

38 நிதி இடர் முகாமைத்துவம்

இக் கம்பனியானது அதன் நிதியியல் சாதனங்களின் பயன்பாட்டிலிருந்து பின்வரும் இடர்களுக்கான வெளிக்காட்டலை கொண்டுள்ளதுடன் காலத்திற்குக் காலம் இவ் இடர்களைக் குறைப்பதற்கு பல்வேறுபட்ட இடர் முகாமைத்துவ தந்திரோபாயங்களைப் பிரயோகிக்கின்றது.

38.1 கடன் இடர்

38.2 திரவத்தன்மை இடர்

38.3 சந்தை இடர் (செலாவணி இடரும் வட்டிவீத இடரும்)

38.4 மூலதன முகாமைத்துவம்

விலைகூறப்பட்ட மற்றும் விலைகூறப்படாத உரிமைமுதல் முதலீடுகள், தவணை வைப்புக்கள் மற்றும் திறைசேரி உண்டியல்களிலான முதலீடு, காசும் காசுக்குச் சமமானவையும் என்பவற்றை இக் கம்பனியின் நிதியியல் சாதனங்கள் உள்ளடக்குகின்றன. இக்கம்பனியானது அதன் பிரதான வியாபாரச் செயற்பாடுகளிலிருந்தான வியாபார வருமதிகள் மற்றும் சென்மதிகள் என்பவற்றையும் கொண்டுள்ளது.

குறுங்கால வைப்புக்களிலான முதலீட்டின் பிரதான நோக்கமானது செயற்பாடுகளுக்கான திரவத்தன்மையைப் பேணுவதாகும். விலைகூறப்பட்ட மற்றும் விலைகூறப்படாத உரிமைமுதல் முதலீடுகளிலான முதலீடானது தந்திரோபாய முதலீடுகளாகும்.

38.1 கடன் இடர்

எதிரிணைத் தரப்பானது அதன் ஒப்பந்தக் கடப்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்கு தவறினால் கம்பனிக்கு ஏற்படும் நிதி இழப்பு இடரே கடன் இடராகும். கடன் இடரானது பிரதானமாக வங்கியின் வசமுள்ள வைப்புக்கள், காசும் காசுக்குச் சமமானவையும் (கையிலுள்ள காசு நீங்கலாக) மற்றும் வாடிக்கையாளர்களிடமிருந்தான வருமதிகள் என்பவற்றிலிருந்து எழுகின்றது. கடன் இடருக்கு உட்பட்ட நிதிச் சொத்துக்களின் ஆகக்கூடிய இடர் வெளிக்காட்டல்களானவை அவற்றின் கொண்டுசெல்லல் தொகைகளுக்குச் சமனாகும்.

மார்ச் 31 ஆம் திகதியிலுள்ளவாறு அறிக்கையிடப்பட்ட நிதிச் சொத்துக்களின்

ஆகக்கூடிய இடர் வெளிக்காட்டலை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

		2023	2022
	குறிப்புகள்	ரூபா.	ரூபா.
காசும் காசுக்குச் சமமானவையும்	38.1.1	1,296,402,265	727,755,386
வங்கிகளிடமுள்ள தவணை வைப்புக்கள்		26,268,205	25,533,587
வியாபார வருமதிகள்	38.1.2	2,070,761,878	2,460,530,760
ஏனைய வருமதிகள்		127,792,745	184,253,346
		3,521,225,092	3,398,073,078

38.1.1 காசும் காசுக்குச் சமமானவையும்

வங்கியிலுள்ள காசு (கையிலுள்ள காசு நீங்கலாக), கேள்வி வைப்புகள் மற்றும் மூன்று அல்லது அதற்குக் குறைவான மாதங்களைக் கொண்ட ஆரம்ப முதிர்வுகளுடன்கூடிய ஏனைய குறுங்கால உயர் திரவத்தன்மை பொருந்திய முதலீடுகள் என்பவற்றை உள்ளடக்கும் காசும் காசுக்குச் சமமானவையும் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

	குறிப்புகள்	2023	2022
		ரூபா.	ரூபா.
வங்கியிலுள்ள காசு		1,296,402,265	727,755,386
	38.1	1,296,402,265	727,755,386

38.1.2 வியாபார வருமதிகள்

இக் கம்பனியானது பிரதானமாக கப்பல் முகவர்களுடனும் அரசாங்க நிறுவனங்களுடனும் வியாபாரம் செய்கின்றது. கடந்தகால அனுபவத்தின் அடிப்படையில் கப்பல் முகவர்களின் கடன் தரத்தினை முகாமையானது மதிப்பிடுகின்றது. மேலும், செலுத்தவேண்டிய மீதிகளானவை முகாமைத்துவக் குழுவிலும் சபையிலும் தொடர்ந்துசெல்லும் அடிப்படையில் கண்காணிக்கப்படுகின்றது.

இக் கம்பனியின் வியாபார வருமதிப் பட்டியலின் கால முதிர்வுப் பகுப்பாய்வு பின்வருமாறு:

	குறிப்புகள்	2023	2022
		ரூபா.	ரூபா.
வியாபார வருமதிகளின் கால முதிர்வு			
ஒரு வருடம் வரை		779,186,765	1,259,424,908
1 தொடக்கம் 4 வருடங்கள் வரை		257,530,960	228,907,326
நான்கு வருடங்களுக்கு மேற்பட்டது		1,034,044,153	972,198,525
	38.1	2,070,761,878	2,460,530,760

வியாபார வருமதிகள் தொடர்பில் உறப்பட்ட நட்டங்களின் மதிப்பீட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பெறுமதிக் குறைவிற்கான ஏற்பாட்டிற்கான கொள்கையினை (நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 3.9.1 இனைப் பார்க்கவும்) இக் கம்பனி உருவாக்கியுள்ளது. உருவாக்கப்பட்ட பெறுமதிக்குறைவு கொள்கைக்கு இணங்க, பெறுமதிக்குறைவு நட்டத்தை அளவிடும் பொருட்டு வாடிக்கையாளர்கள் தனித்தனியாக மீளாய்வு செய்யப்படுகின்றனர். வியாபார வருமதிகள் மற்றும் பெறுமதிக்குறைவு நட்டத்திற்கான ஏற்பாடு ஆகியன தொடர்பில் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 18.1 இனை தயவுகூர்ந்து பார்க்கவும்.

38.1.3 ஏனைய நிதிச் சொத்துக்கள்

இக் கம்பனியின் ஏனைய நிதிச் சொத்துக்களிலிருந்து எழும் கடன் இடரானது வங்கிகளின் வசமுள்ள வைப்புக்களை உள்ளடக்குகின்றது. இந்நிதியியல் சாதனங்களின் கொண்டுசெல்லல் தொகைக்கு சமமாக ஆகக்கூடிய வெளிக்காட்டலுடன், ஒப்பந்த தரப்பினர்களின் ஒப்பந்தக் கடப்பாடுகளைப் பூர்த்திசெய்ய தவறுவதிலிருந்து கம்பனியின் கடன் இடருக்கான வெளிக்காட்டல் எழுகின்றது. கம்பனியானது இந்நிதியியல் சாதனங்கள் தொடர்பான அதன் கடன் இடர்களை, பிரதானமாக அதன் நிதியத்தை அரச வங்கிகளிலும் கடன் தரப்படுத்தல் வங்கிகளிலும் வைத்திருப்பதன் மூலம் முகாமிக்கின்றது.

38.2 திரவத்தன்மை இடர்

கம்பனியின் நிதிக் கடப்பாடுகள் நிலுவையாகவுள்ள போது அவற்றைப் பூர்த்திசெய்வதற்கு கம்பனியினால் இயலாதிருக்கும் இடரே திரவத்தன்மை இடராகும். இக்கம்பனியின் திரவத்தன்மையை முகாமிப்பதற்கான அணுகுமுறை என்பது, ஏற்றுக்கொள்ளமுடியாத நட்டங்களை ஏற்படுத்தாமல் சாதாரண மற்றும் எதிர்பார்க்காத நிலமைகள் ஆகிய இரண்டின் கீழும் நிலுவையாகவுள்ள போது அதன் பொறுப்புக்களைப் பூர்த்திசெய்வதற்குப் போதுமான காசை அது எப்போதுமே கொண்டிருக்கும் என்பதை எந்தளவுதூரம் சாத்தியப்படுகின்றதோ அந்தளவிற்கு உறுதிப்படுத்துவதே ஆகும்.

கம்பனியானது நிதிச் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் கண்காணிப்பதுடன் எதிர்வுகூறப்பட்ட செயற்பாட்டு காசுப் பாய்ச்சல்களை மாதாந்தம் தயாரிக்கின்றது. பிரிவுசார் செயற்றிறனை கண்காணிக்கும் பொருட்டு ஒவ்வொரு பிரிவிலும் வருடாந்த வரவுசெலவுத்திட்டம் தயாரிக்கப்படுகின்றது. கம்பனியானது செயற்பாட்டுத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்குப் போதுமான காசைக் கொண்டுள்ளது என்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு மாதாந்த எதிர்வுகூறப்பட்ட செயற்பாட்டு காசுப் பாய்ச்சல்களையும் வருடாந்த வரவுசெலவுத்திட்டம் மற்றும் திரவத்தன்மைத்

தேவைப்பாடுகளையும் முகாமையானது கண்காணிக்கின்றது.

ஒப்பந்த முதிர்வுத் திகதி வரை அறிக்கையிடல் காலப்பகுதியின் முடிவில் மீதமுள்ள காலப்பகுதியின் அடிப்படையில் 2023 மார்ச் 31 ஆம் திகதியிலுள்ளவாறு கம்பனியின் நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் முதிர்வுப் பகுப்பாய்வினை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது. இவ் அட்டவணையில் வெளிப்படுத்தப்பட்ட தொகைகள் ஒப்பந்த கழிவிடப்படாத காசுப்பாய்ச்சல்கள் ஆகும்.

வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்
நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்
2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களும்	கொண்டு செல்லல் தொகை	6 மாதங்கள் அல்லது அதற்குக் குறைவான து	6-12 மாதங்கள்	1 வருடத்திற்கு மேற்பட்டது
	ரூபா.	ரூபா.	ரூபா.	ரூபா.
நிதிச் சொத்துக்கள்				
விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ள நிதி சொத்துக்கள்	47,693,210	-	-	47,693,210
முதிர்வுக்காக வைத்திருக்கப்படும் முதலீடுகள்	464,999,999	464,999,999	-	-
குறுங்கால முதலீடுகள்	26,268,205	-	2,009,601	24,258,604
வியாபார வருமதிகள்	2,070,761,878	-	779,186,765	1,291,575,113
ஏனைய வருமதிகள்	127,792,745	-	127,792,745	-
காசும் காசுக்குச் சமமானவையும்	1,296,402,265	1,296,402,265	-	-
	4,033,918,301	1,761,402,264	908,989,111	1,363,526,927
நிதிப் பொறுப்புக்கள்				
வியாபார சென்மதிகள்	681,119,958	681,119,958	-	-
ஏனைய சென்மதிகள்	1,111,647,094	1,111,647,094	-	-
	1,792,767,053	1,792,767,052	-	-

38.3 சந்தை இடர் (செலாவணி இடர் மற்றும் வட்டி வீத இடர்)

கம்பனியின் வருமானத்தை அல்லது நிதியியல் சாதனங்களின் உடமை வைத்திருப்புகளின் கொண்டுசெல்லல் பெறுமதியை பாதிக்கும் அந்நியச் செலாவணி வீதங்கள் மற்றும் வட்டி வீதங்கள் போன்ற சந்தை விலைகளை மாற்றும் இடரே சந்தை இடராகும்.

38.3.1 செலாவணி இடர்

இக் கம்பனியின் செலாவணி இடருக்கான வெளிக்காட்டலானது இலங்கை ரூபாவுக்கு எதிராக ஐக்கிய அமெரிக்க டொலரினதும் (USD) ஏனைய வெளிநாட்டு நாணயங்களினதும் பெறுமதியிலான தளம்பல்களிலிருந்து எழுகின்றது. வழங்கப்பட்ட சில சேவைகள் தொடர்பில் இக் கம்பனியின் தொழிற்பாட்டு நாணயமானது ஐக்கிய அமெரிக்க டொலரும் ஏனைய வெளிநாட்டு நாணயங்களும் ஆகும். சில வியாபார வருமதிகளும் சென்மதிகளும் வெளிநாட்டு நாணயங்களில் வெளிப்படுத்தப்படுகின்றன.

2022/23 ஆம் ஆண்டின் அறிக்கையிடல் காலப்பகுதி சார்பில் செயற்பாட்டுப் பெறுபேறுகளில் இக்கம்பனி அறிக்கையிட்டுள்ளதும் உள்ளடக்கியுள்ளதுமான தேறிய அந்நியச் செலாவணி நட்டம் 2,390,657,465/- ரூபா ஆகும்.

38.3.2 வட்டி இடர்

குறுங்கால வங்கி வைப்புகள், திறைசேரி உண்டியல்கள் மற்றும் தவணை வைப்புகள் தொடர்பில் சந்தை வட்டி வீதங்களிலான மாற்றங்களே கம்பனியின் வட்டி இடருக்கான வெளிக்காட்டல் ஆகும்.

அரச வங்கிகளிலும் கடன் தரப்படுத்தல் வங்கிகளிலும் வைத்திருக்கப்படும் தவணை வைப்புகள் உள்ளடங்கலான வங்கி மீதிகளை இக்கம்பனி கொண்டுள்ளது. வட்டி வீத நகர்வுகளை முனைப்பாக கண்காணிப்பதன் மூலம் வட்டி வீத இடரை கம்பனி முகாமிக்கின்றது.

38.4 மூலதன முகாமைத்துவம்

பங்குதாரர்களுக்கு ஆகக்கூடிய வருவாய்களை வழங்கும் பொருட்டும் மூலதனச் செலவைக் குறைப்பதற்கு உத்தம மூலதனக் கட்டமைப்பொன்றைப் பேணும் பொருட்டும் தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவாக தொடர்ந்துசெல்வதற்கு கம்பனியின் ஆற்றலைப் பாதுகாப்பதற்காக அதன் மூலதனத்தை இக்கம்பனி முகாமிக்கின்றது. கடன், உரிமைமுதல் இணைப்பு விகிதத்தின் அடிப்படையில் மூலதனக் கட்டமைப்பை இக்கம்பனி கண்காணிக்கின்றது. கடன், உரிமைமுதல் இணைப்பு விகிதமானது மொத்த உரிமைமுதலினால் பிரிக்கப்படும் மொத்தக் கடன்பெறல்களாக கணிப்பிடப்படுகின்றது. நிதிநிலமைக் கூற்றில் காட்டப்பட்டவாறு நடைமுறையல்லா மற்றும் நடைமுறைக் கடன்பெறல்களை மொத்தக் கடன்பெறல்கள் உள்ளடக்குகின்றன. 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் மார்ச் 31 ஆம் திகதியிலுள்ளவாறு கம்பனியின் மொத்தக் கடன்பெறல் மற்றும் உரிமைமுதல் விகிதத்தை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

	2022/23	2021/22
	ரூபா.	ரூபா.
மூலதன வகுப்பு		
மொத்த கடன்பெறல்கள்	17,974,125,965	17,689,926,338
மொத்த உரிமைமுதல்	(9,210,094,328)	(7,914,226,189)
கடன், உரிமைமுதல் இணைப்பு விகிதம் (X)	-195%	-224%

39 சரக்குக் காப்புறுதிச் செலவுகளை உள்ளீர்த்தல்

17/1791/129/023 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரம் தொடர்பில் 2019/06/17 ஆம் திகதியன்று அமைச்சரவையினால் வழங்கப்பட்ட அங்கீகாரம் மற்றும் 2019/07/29 ஆம் திகதியன்று வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையில் எடுக்கப்பட்ட தீர்மானம் என்பவற்றுக்கிணங்க, M/S Lanka Coal Company Ltd. நிறுவனத்தினால் ஏற்கனவே செய்யப்பட்டுள்ள கப்பற்சரக்கு காப்புறுதிச் செலவுகள் இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்திற்கு உள்ளீர்க்கப்பட வேண்டியிருந்தன. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

நிதியாண்டு	தொகைகள் (ரூபா)
2015/16	12,512,559.00
2016/17	21,447,333.00
2017/18	21,502,890.00
2018/19	22,571,307.28

காப்புறுதி செய்வோரினால் வழங்கப்பட்ட பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) பட்டியல்கள், பற்றுச்சீட்டுக்கள் போன்ற மூல ஆவணங்களை மீளளிப்புக்காக சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. அதற்கிணங்க, 22,571,307.28 ரூபா தொகையானது 2019/03/31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான கணக்குகளில் ஏற்கனவே உள்ளீர்க்கப்பட்டுள்ளது. அத்துடன், 54,190,609.70 ரூபா தொகையானது 2019/20 மற்றும் 2020/2021 நிதியாண்டுகளின் நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புகளுக்கு சீராக்கப்பட்டுள்ளன. 1,271,172.30 ரூபா தொகையான கப்பற்சரக்கு காப்புறுதி மீளளிப்பானது தேவைப்படும் ஆவணங்கள் கிடைக்காமை காரணமாக கணக்குகளில் எடுக்கப்படவில்லை.

40 நிர்வாகச் செலவுகள்

விவரம்	**2023**	**2022**
அலுவலர் குழாமிற்கான பயிற்சி	213,250	175,433
அலுவலர் குழாமை ஆட்சேர்ப்புச் செய்தல்	-	57,000
W.N.O.P இற்கான பங்களிப்பு 25%	119,631	-
சேமலாப நிதியத்திற்கான பங்களிப்பு	12,731,543	12,614,362
நிறைவேற்று அலுவலர் குழாமின் சம்பளங்கள்	68,093,388	63,952,391
எழுதுவினைஞர் மற்றும் இணை அலுவலர் குழாமின் சம்பளங்கள்	44,476,187	48,401,842
தற்காலிக மற்றும் அமைய ஊழியர்களின் கூலிகள்	1,140,567	841,189
மேலதிகநேரக் கொடுப்பனவு	12,162,623	11,550,489
மிகையூதியம்	3,967,877	3,911,129
மருத்துவ நிதியத்திற்கான பங்களிப்பு	48,000	48,000
ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்திற்கான பங்களிப்பு	2,546,309	2,519,810
மருத்துவ விடுமுறைக் கொடுப்பனவு	3,457,476	4,646,607
பணிக்கொடைக் கொடுப்பனவுகள்	3,712,753	(2,591,813)
நட்டஈடு	-	3,730,080
கஸ்டப் படி – நுரைச்சோலை	1,404,200	1,506,988
அலுவலக வாடகை	20, 373,750	19,558,800
அச்சிடலும் எழுதுபொருட்களும்	3,190,463	2,365,230
அங்கத்துவ சந்தாப்பணம்	2,610,962	1,303,510
காப்புறுதி	13,021,381	7,271,538
அலுவலக மனையிடத்தையும் உபகரணங்களையும் பேணுதல்	3,759,659	5,691,657
மின் கட்டணங்கள் - தலைமை அலுவலகம்	1,860,852	1,475,657
மின் கட்டணங்கள் - விடுதிகள்	106,449	71,734
அலுவலர் குழாத்து நலனோம்பல்	7,661,234	5,624,230
பாதுகாவல் கட்டணங்கள்	2,269,400	2,107,140
கணனிச் செலவுகள்	4,423,379	1,877,867
விடுதிப் பராமரிப்பு - மோதர	-	3,026

மொழிபெயர்ப்பு கட்டணங்கள்	251,078	185,914
நீர்ப் பாவனை - தலைமை அலுவலகம்	180,000	180,000
நீர்ப் பாவனை - விடுதி	157,567	69,234
தண்டப்பணக் கட்டணங்கள்	-	7,080
நிர்வாகத்திற்கான SSCL செலவுகள்	142,616	-
தொலைபேசிக் கட்டணங்கள்	2,191,353	2,686,601
தபால் மற்றும் தந்தி	125,155	27,655
இணையம் / மின்னஞ்சல் கட்டணங்கள்	2,691,555	3,058,649
வெளிநாட்டுப் பயணமும் செலவுகளும்	-	38,117
உள்நாட்டுப் பயணம்	357,182	3,946,217
மோட்டார் வாகனங்களின் பராமரிப்பு	8,531,351	5,727,485
பிரயாணம் மற்றும் பிழைப்பூதியம்	7,250	14,250
எரிபொருள் செலவுகள்	41,800	-
கேளிக்கை	255,824	100,257
விளம்பரம்	1,567,635	4,262,440
வருடாந்தப் பதிவு வரி	35,000	41,000
பணிப்பாளர் கட்டணங்கள்	488,500	596,050
கணக்காய்வுக் கட்டணங்கள்	810,000	760,000
தொழில்நிபுணத்துவக் கட்டணங்களும் சட்டக் கட்டணங்களும்	1,708,246	584,905
கேள்விக் குழு படியும் செலவுகளும்	-	1,332,200
நானாவித செலவுகள்	137,785	515,604
நன்கொடைகள்	-	62,500
ஆண்டு நிறைவு விழாச் செலவுகள்	-	707,409
பெறுமானத் தேய்வு	4,845,487	4,932,749
வங்கிக் கட்டணங்கள்	6,253,749	27,775,207
மேலதிகப்பற்று வட்டி	-	1
முத்திரைத் தீர்வைச் செலவுகள் கணக்கு	34,900	37,125
இடர் கணிப்பீடுசார் எடுகோள்களின் மாற்றங்களிலிருந்து எழுகின்ற இலாபம் / (நட்டம்)	2,179,262	7,581,992
மொத்தம்	246,344,628	263,944,537